இளங்கோ வாசகம்

[ஐந்தாம் புத்தகம்—ஐந்தாம் படிவம்]

[அரசியலார் முடிவாக வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின்படி அமைக்கப் பெற்றது]

பொது

ஆசிரியர் :

B. முருகன், M. A.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
மாகாணக் கல்லூரி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்,
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1.

First Printed	:	November, 1951
Reprinted	:	June, 1952
,,	:	May, 1953
,,	:	June, 1954
,,	:	June, 1955

Approved by the Madras Text-Book Committee for Class use Vide Fort St. George Gazette, Supplement to part I-B., page 79 of Consolidated list dated, 19-5-'54

Shanti Press, Madras-1.

முன்னுரை

இளங்கோ வாசகம்' என்னும் இந் நூல்வரிசை சுதந்திரம் பெற்ற நம் திருநாட்டு மாணவ மாணவியரின் தமிழ்வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் புதிய பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப் பட்டுள்ளது.

'புதிய கல்விமுறைக்கேற்ற புதிய புத்தகம் வேண்டும்' என்னும் ஆர்வம் மிக்கது இக்காலம். இந்நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப் போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, இலக்கியக் கடிதம், கைத்தொழில், சொற்பொழிவு, குடும்பக் கலை முதலிய பல துறைப் பாடங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் வரும் தம் பாடங்களைத் தொகுத்துக்கொள்ள இசைவு வழங்கியவர் மாணவர் நலமே கருதும் மாண்பினராய பல அறிஞர்கள், பதிப்பகத்தினர், பத்திரிகையாசிரியர்கள் முதலியோ ராவர்.

இந்நூல் அச்சாகுங்காலத்து உடனிருந்து தம் சிறந்த அனு பவத்தால் அரிய பல ஆலோசனைகள் நல்கி இதனை உருவாக்கும் முயற்சியில் பேருதவியாய் இருந்தவர் என் அருமை நண்பர் சென்னை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப்பள்ளித் துணையாசிரியர், திரு. தணிகை. உலகநாதன் அவர்கள் ஆவர்.

இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிட்டோர் சென்னை, புக்ஸ் (இந்தியா) லிமிடெட்டினராவர். இவர்கள் எல்லோருக்கும் என் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் சிறு காணிக்கையாகும். இதனை என் அருமைத் தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், மாவட்டக் கல்வி அதிகாரிகளும் அன்புடன் ஏற்று இத்துறையில் எனக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேன்.

மாநிலக் கல்லூரி,
சென்னை,
29-11-'51

மாணவர் நலம் கருதும்
ப. முருகன்.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்

அடக்கம்

செய்யுட் பகுதி

பொது

எண்		பக்கம்
I	கடவுள் வாழ்த்து	1
II	நீதிப் பகுதி	3
	1. திருமந்திரம்	
	2. பழமொழி	
	3. புறநானூறு	
	4. திருக்குறள்	
III	தொடர் நிலைச் செய்யுள்	16
	1. சிலப்பதிகாரம்	
	2. பெரிய புராணம்	
	3. நைடதம்	
	4. இரட்சணிய யாத்திரிகம்	
	5. திருவிளையாடல் புராணம்	
IV	வருணனைப் பகுதி	35
	1. அந்திநேரம்	
	2. சந்திரோதயம்	
	3. இசைச் சிறப்பு	
	4. திருக்குற்றால மலைவளம்	
	5. பொங்கற் றிருநாள்	
V	சிறு நூல்கள்	37
	1. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்	
	2. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்	
	3. தமிழ்விடு தூது	
	4. திருவரங்கக் கலம்பகம்	
	5. குற்றாலக் குறவஞ்சி	
	6. முக்கூடற் பள்ளு	

உரைநடைப் பகுதி

பொது

எண்		பக்கம்
1.	பல்லாண்டு பல்லாண்டு திரு. புலவர் மயிலை. சிவ. முத்து	41
2.	அன்னைக்கு டாக்டர் திரு. மு. வரதராசன், எம். ஓ. எல்.	45
3.	ஓவியன் திரு. ம. பெ. தூரன், பி.ஏ., எல்.டி.	49
4.	கும்பகருணன் திரு. வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்	53
5.	அச்சு வித்தையின் வரலாறு திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.	61
6.	*தமிழர் கடலாட்சி திரு. சக்ரவர்த்தி சி. இராஜகோபாலாச்சாரியார்	67
7.	எனது இலங்கைச் செலவு திரு. வி. கலியாணசுந்தர முதலியார்	71
8.	†நீதி நூல்களில் இலக்கிய நயம் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார், எம்.ஏ.	77
9.	பேரறிஞர் பெர்னார்ட் ஷா திரு. தணிகை. உலகநாதன்	83
10.	புகழ்த் துறவு திரு. புலவர் வ. சுப. மாணிக்கம், எம்.ஓ.எல்.	89
11.	பட்டுத் தொழில் திரு. சி. பெருமாள்சாமி ரெட்டியார், எம்.எல்.சி.	94
12.	வீடும் கலையும் திரு. சி. பெரியநாயகி அம்மையார்	101

---

*வாலாஜாபாத் இந்துமத பாடசாலையாரின் 'குருகுலம்' என்னும் இதழி லிருந்து ஆசிரியர் இசைவுடன் வெளியிடப் பெற்றது.

†பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகத்தாரின் இசைவு பெற்றது.

ஏனைய பாடங்கள் ஆசிரியர்களின் இசைவு பெற்றுத் தொகுக்கப் பெற்றன.

இளங்கோ வாசகம

செய்யுட் பகுதி

பொது

I. கடவுள் வாழ்த்து

உலகினில் துன்பம் நீங்க உண்டனை நஞ்சை, அன்பே
சிலுவையில் நின்று செந்நீர் சிந்தினை, அரசை நீத்து
விலகினை, மாடு மேய்க்க விரும்பினை, அடியும் தாங்கி
இலகினை சமர சத்தை எண்ணினுல் துயரம் போமே. 1

—திரு. வி. கலியாணசுந்தரனுர்

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்ற் றுலகே 2

நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே. 3

—பாரதம் பாடிய பெருந்தேவனுர்

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபண்மா யிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையைமேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னித்
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகோலோ களிக்கும்நாளே? 4

—குலசேகர ஆழ்வார்

முன்றுன் பெருமைக்கண் நின்றுன்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமேமொழிந் தான்த னக்கென்(று)
ஒன்றுனும் உள்ளான் பிறர்க்கேஉறுதிக் குழந்தான்
அன்றே இறைவன் அவன்தாள்சர ணங்கள் அன்றே. 5

—குண்டலகேசி

கலைமகள் வாழ்த்து

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக் குயி ராகிய தெய்வம்
செய்வ மென்று ஒருசெய்கை எடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம். 6

—பாரதியார்

தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழினிய தெய்வதமே! மொழிகள்குலத் தனிவிளக்கே
தகவெழில்மெய் சீர்த்த சொல்லின்
அமிழ்துவிழைந் தடுத்தபல புலவரெலாம் அசையலையைக்
கடைந்தபொழு தழகி னேங்கும்
துமியினிடை யெழுந்தொளிருஞ் செல்வி! அறி வெனுமலவன்
துணைவியருண் முதல்வி! தூய்மை
கமழ்கவிதை உலகுபடை கவிஞருளநு் கனிவிக்கும்
காதல்வளர் கன்னி! வாழி! 7

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

II. நீதிப் பகுதி

1. திருமந்திரம்

இதோபதேசம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி இல்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. 1

கல்லாமை

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே 2

அன்புடைமை

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. 3

அரசாட்சி முறை

ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. 4

அவாவறுத்தல்

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. 5

—திருமூலர்

2. பழமொழி

அறிவுடைமை

ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாஇரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்
பாய்இருள் நீக்கும் மதியம்போல் பல்மீனும்
காய்கலா ஆகும் நிலா. 1

உலோபியின் செல்வம்

வழங்கலும் துய்த்தலும் தேற்றுதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப, அதுவன்றே
நாய்பெற்ற தெங்கம் பழம். 2

ஈகை

இரப்பவர்க் கீயம் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பில்
துறைத்தோணி நின்றுலாந் தூங்குநீர்ச் சேர்ப்ப,
இறைத்தோறும் ஊறுங் கிணறு. 3

ஒழுக்கம்

கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீர் ஆழி வரையகத்து ஈண்டிய
கல்தேயும் தேயாது சொல். 4

இன்னா செய்யாமை

கெடியது காண்கிலாய் நீயெளியை ; நெஞ்சே !
கொடியது கூறினாய் மன்ற—அடியுளே
முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பின்பகல் கண்டு விடும். 5

—முன்றுரை யரையனார்

3. புறநானூறு

உண்டால் அம்ம ! இவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின், உயிரும் கொடுக்குவர்; பழியெனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. 1

— இளம்பெருவழுதி

யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னா தென்றலும் இலமே; மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. 2

— கணியன் பூங்குன்றனார்

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே. 3

— மோசி கீரனார்

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே! பெரிதும்
ஈதல் எளிதே! மாவண் தோன்றல்!
அதுநற் கறிந்தனை ஆயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே. 4

— கபிலர்

4. திருக்குறள்

(அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப் பெற்றவை)

கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில. 1

வான் சிறப்பு

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 2

நீத்தார் பெருமை

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 3

அறன் வலியுறுத்தல்

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 4

இல்வாழ்க்கை

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. 5

வாழ்க்கைத் துணைநலம்

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

புதல்வரைப் பெறுதல்

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. 7

அன்புடைமை

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று. 8

விருந்தோம்பல்

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் 9

இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 10

செய்ந்நன்றி யறிதல்

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. 11

நடுவு நிலைமை

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 12

அடக்கமுடைமை

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து. 13

ஒழுக்கமுடைமை

ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 14

பொறையுடைமை

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். 15

அழுக்காறாமை

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. 16

புறங் கூறாமை

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும். 17

பயனில சொல்லாமை

அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். 18

தீவினை யச்சம்

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். 19

ஒப்புரவறிதல்

ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 20

ஈகை

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. 21

புகழ்

வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 22

அருளுடைமை

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. 23

தவம்

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 24

கூடாவொழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும். 25

வாய்மை

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன். 26

வெகுளாமை

உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். 27

இன்னா செய்யாமை

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. 28

கொல்லாமை

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 29

நிலையாமை

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 30

துறவு

பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 31

மெய்யுணர்தல்

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 32

அவாவறுத்தல்

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 33

ஊழ்

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. 34

இறைமாட்சி

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையனும் வேந்தர்க் கொளி. 35

கல்வி

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 36

கேள்வி

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். 37

அறிவுடைமை

எவ்வ துறைவ துலக முலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு 38

குற்றங் கடிதல்

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 39

பெரியாரைத் துணைக்கோடல்

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 40

சிற்றினஞ் சேராமை

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில். 41

தெரிந்து செயல்வகை

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். 42

வலியறிதல்

அமைந்தாங் கொழுகா னளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 43

காலமறிதல்

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். 44

இடனறிதல்

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது. 45

தெரிந்து தெளிதல்

தேறற்க யாரையுந் தேராது ; தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 46

தெரிந்து வினையாடல்

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்(து)
அதனை யவன்கண் விடல். 47

பொச்சாவாமை

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு 48

செங்கோன்மை

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின். 9

கொடுங்கோன்மை

கூழுங் குடியு மொருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. 50

வெருவந்த செய்யாமை

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 51

கண்ணோட்டம்

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை யுடைத்திவ் வுலகு. 52

ஒற்றாடல்

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோர்
ஒற்றினா லொற்றிக் கொளல். 53

ஊக்கமுடைமை

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 54

மடியின்மை

குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். 55

ஆள்வினையுடைமை

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். 56

இடுக்கணழியாமை

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். 57

அமைச்சு

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. 58

சொல்வன்மை

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது. 59

வினைத்தூய்மை

இடுக்கண் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 60

வினைத்திட்பம்

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம் 61
மற்றைய வெல்லாம் பிற.

வினைசெயல்வகை

பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருடீர வெண்ணிச் செயல். 62

தூது

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது.

மன்னரைச் சேர்ந்தொழுகல்

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 64

குறிப்பறிதல்

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற. 65

அவையறிதல்

கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. 66

அவையஞ்சாமை

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். 67

நாடு

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. 68

அரண்

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்லா தரண். 69

பொருள் செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். 70

படைமாட்சி

அடற்றகையு மாற்றலு மில்லெனினும் தானை
படைத்தகையாற் பாடு பெறும். 71

படைச் செருக்கு

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. 72

நட்பு

அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதா நட்பு. 73

நட்பாராய்தல்

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும். 74

பழைமை

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. 75

தீ நட்பு

ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 76

கூடா நட்பு

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. 77

பேதைமை

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். 78

புல்லறிவாண்மை

காணாதான் காட்டுவான் றான்காணான் ; காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு. 79

இகல்

இகலானு மின்னாத வெல்லாம் ; நகலானும்
நன்னய மென்னுஞ் செருக்கு. 80

பகைமாட்சி

கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 81

பகைத்திறம் தெரிதல்

இளைதாக முண்மரங் கொல்க ; களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 82

உட்பகை

வாள்போல் பகைவரை யஞ்சற்க : அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 83

பெரியாரைப் பிழையாமை

கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். 84

கள்ளுண்ணாமை

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 85

சூது

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை ; வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 86

மருந்து

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணோய். 87

குடிமை

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 88

மானம்

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. 89

பெருமை

அற்ற மறைக்கும் பெருமை ; சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 90

சான்றாண்மை

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். 91

பண்புடைமை

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். 92

நன்றியில் செல்வம்

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 93

நாணுடைமை

நாணா லுயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்டுறவார் நாணாள் பவர். 94

குடிசெயல் வகை

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். 95

உழவு

ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு. 96

நல்குரவு

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு. 97

இரவு

இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. 98

இரவச்சம்

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில். 99

கயமை

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில். 100

—திருவள்ளுவர்

III. தொடர்நிலைச் செய்யுள்

1. *சிலப்பதிகாரம்*

கண்ணகியின் வஞ்சினம்

கவிக் கூற்று

ஆயர் முதுமகள் ஆடிய சாயலள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள் மேவிக்
குரவை முடிவிலோர் ஊரரவம் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்.

[*கண்ணகி ஐயையைக் காணல்*]

அவள்தான்
சொல்லாடாள் சொல்லாடா நின்றாளந் நங்கைக்கு
சொல்லொடும் சொல்லாடுந் தான்

கண்ணகி

"*எல்லாவோ!*
காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே!
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன் வாழி யோதோழீ?"

ஐயை

"*அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்*
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே!"

கவிக் கூற்று

எனக்கேட்டு,
பொங்கி எழுந்தாள்; விழுந்தாள்; பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேணிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்; தன் கேள்வனை
"*எங்கணா*" *என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்.*

கண்ணகி

[இடை மாதரைப் பார்த்து]

"காணிகா !
வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டீமின் !

[கதிரவனை நோக்கி]

பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே ! கள்வனோ என் கணவன்?"

கவிக் கூற்று

"கள்வனோ அல்லன் ; கருங்கயற்கண் மாதராய் !
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூர்" என்ற தொருகுரல்.

*[கதிரவன் கூற்றைக் கேட்டபின்
கண்ணகி வீரத்துடன் எழுந்து]*

"முறையில் அரசன்றன் ஊரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள் ! ஈதொன்று ;
கள்வனோ அல்லன் கணவன் என் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே! ஈதொன்று ;
மாதர்த் தகைய மடவார்கள் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே ! ஈதொன்று;
காதற் கணவனைக் கண்டால் அவன்வாயில்
தீதறு நல்லுரை கேட்பனே ! ஈதொன்று ;
தீதறு நல்லுரை கேளா தொழிவேனேல்
நோதக்க செய்தாளென் றெள்ளல் ஈதொன்று !

*[கண்ணகி வஞ்சினம் கூறியதைக் கேட்ட
மதுரை மக்கள் கூறுதல்]*

"களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல் !
மண்குளிரச் செய்யும் மறமேல் நெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல் !
செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல் !
ஐயரி உண்கண் அழுதேங்கி அரற்றுவாள்
தெய்வமுற் றாள்போலும் தகையள் இதுவென்கொல் !"

கவிக் கூற்று

என்பன சொல்லி இனைந்தேங்கி அரற்றவும்
வன்பழி தூற்றும் குடியதே மாமதுரைக்
கம்பலை மாக்கள் கணவனைத் தாம்காட்டச்
செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணான்.

—இளங்கோவடிகள்

2. பெரிய புராணம்

அப்பூதியடிகள் புராணம்

திருநாவுக்கரசர் திருவமுது செய்ய உடன்படல்

ஆசனத்திற் பூசனைக
ளமர்வித்து விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக்
காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத்
திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பஞ்
செயவவரு மதுநேர்ந்தார். 1

செய்தவ ரிசைந்த போது
திருமனை யாரை நோக்கி,
'எய்திய பேறு நம்பா
லிருந்தவா றென்னே!' யென்று
மைதிகழ் மிடற்றி னான்றன்
அருளினால் வந்த தென்றே
உய்துமென் றுவந்து கொண்டு
திருவமு தாக்க லுற்றார். 2

மூத்த திருநாவுக்கரசரை வாழைக்குருத்து அரிந்துவர ஏவல்

தூயநற் கறிக ளான
அறுவகைச் சுவையா லாக்கி
ஆயபின் னமுது மாக்கி
யமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த
திருநாவுக் கரசை 'வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு
வா'வென விரைந்து விட்டார். 3

பாம்பு தீண்டுதல்

'நல்லதாய் தந்தை யேவ
நானிது செயப்பெற் றே'னென்(று)
ஒல்லையில் விரைந்து தோட்டத்
துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும்
பொழுதினில் வாள ராவொன்(று)
அல்லலுற் றழுங்கிச் சோர
அங்கையிற் றீண்டிற் றன்றே. 4

கையினிற் கவர்ந்து சுற்றிக்
கண்ணெரி காந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப்
பதைப்புடன் 'பரந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா
முன்னம்வே கத்தால் எய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று
கொடுப்பன்' என் றோடி வந்தான். 5

பொருந்திய விடவே கத்திற்
போதுவான் வேகம் முந்த
வருந்தியே யணையும் போழ்து
'மாசுணங் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவ ரமுது செய்யத்
தாழ்க்கயா னறையேன்' என்று
திருந்திய கருத்தி னோடுஞ்
செழுமனை சென்று புக்கான். 6

எரிவிடம் முறையே யேறித்
தலைக்கொண்ட வேழாம் வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு
மேனியுங் கருகித் தீந்து
விரியுரை குழறி யாவி
விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயர்
பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான். 7

அப்பூதியடிகள் மகன் இறந்ததை மறைத்து, அமுது செய்யுமாறு திருநாவுக்கரசரை அழைத்தல்

தளர்ந்துவீழ் மகனைக் கண்டு
தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி
யுதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியுங் கண்டு
'விடத்தினால் வீந்தான்' என்று
துளங்குத லின்றித் தொண்ட
ரமுதுசெய் வதற்குச் சூழ்வார். 8

பெறலரும் புதல்வன் றன்னைப்
பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர்
புடையினில் மறைத்து வைத்தே
'அறவிது தெரியா வண்ணம்
அமுதுசெய் விப்போம்' என்று
விறலுடைத் தொண்ட ரைர்பால்
விருப்பொடு விரைந்து வந்தார். 9

கடிதுவந் தமுது செய்யக்
காலந்தாழ்க் கின்று தென்றே
அடிசிலுங் கறியு மெல்லாம்
அழகுற அணைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட ரைர்முன்
பணிந்தெழுந்து, 'அமுது செய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீர்'
என்றவர் கூறக் கேட்டு 10

அருந்தவ ரெழுந்து செய்ய
வடியிணை விளக்கி வேறோர்
திருந்துமா சனத்தி லேறிப்
பரிகலந் திருத்து முன்னர்
இருந்துவெண் ணீறு சாத்தி
இயல்புடை யிருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப்
புதல்வர்க்கு மளிக்கும் போழ்தில். 11

ஆதிநான் மறைநூல் வாய்மை
அப்பூதி யாரை நோக்கிக்
' காதல ரிவர்க்கு மூத்த
சேயையுங் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த'
என்றலும் விளைந்த தன்மை
யாதுமொன் றுரையார் ' இப்போ
திங்கவ னுதவான் ' என்றார். 12

அவ்வுரை கேட்ட போதே
அங்கண ரருளா லன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர்
தடுமாற்றஞ் சேர நோக்கி
' இவ்வுரை பொறாதென் னுள்ளம்
என்செய்தா னிதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும் என்ன
விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி. 13

'பெரியவ ரமுது செய்யும்
பேறிது பிழைக்க வென்றோ
வருவ(து)' என் றுரையா ரேனும்
மாதவர் வினவ வாய்மை
தெரிவுற வுரைக்க வேண்டுஞ்
சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க்
குற்றது பகர்ந்தா ரன்றே. 14

திருநாவுக்கரசர் பதிகம் பாட, பிள்ளை உயிர்பெறுதல்

நாவினுக் கரசர் கேளா
'நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்வார் '
என்றுமுன் னெழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி
அண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப்
பணிவிடம் பாற்று வித்தார். 15

தீவிடம் நீங்க வுய்ந்த
திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய வுறக்கம் நீங்கி
விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவராட் கொண்ட
திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு
புனிதநீ றளித்தா ரன்றே. 16

பிரிவுறு மாவி பெற்ற
பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார்
நின்றவப் பயந்தார் 'தாங்கள்
அறிவரும் பெருமை யன்ப
ரமுதுசெய் தருளுதற்குச்
சிறிதிடை யூறு செய்தா
னிவன் என்று சிந்தை நொந்தார். 17

ஆங்கவர் வுாட்டந் தன்னை
யறிந்துசொல் லரசர் கூட
ஓங்கிய மனையி லெய்தி
யமுதுசெய் தருள வுற்ற
பாங்கினி லிருப்ப முந்நூல்
பயில்மணி மார்பர் தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந்
தகுவன சமைத்துச் சார்வார். 18

திருநாவுக்கரசர் அமுது செய்தல்

புகழ்ந்தகோ மயத்து நீரால்
பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச்
சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட
குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய்
வலம்பெற மரபின் வைத்தார். 19

திருந்திய வாச நன்னீ
றளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப்
பிள்ளைகளுடனே நோக்கி

'அரும்புதல் வர்களும் சீரு
　　மமுதுசெய் வீரிங்' கென்ன
விரும்பிய வுள்ளத் தோடு
　　மேலவ ரேவல் செய்வார். 20

மைந்தரும் மறையோர் தாமும்
　　மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர்
　　திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக்
　　கூத்தனா ரடியா ரோடும்
அந்தமி லாளி யாரங்
　　கமுதுசெய் தருளி னாரே. 21

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளின் தொண்டைச் சிறப்பித்துப் பாடல்

மாதவ மறையோர் செல்வ
　　மனையிடை யமுது செய்து
காதனன் பளித்துப் பன்னாள்
　　கலந்துட னிருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர்
　　விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து
　　நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார். 22

அப்பூதி யடிக ளார்தம்
　　அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை
　　விரும்புசொன் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோ
　　ரெல்லையி லன்பா லென்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார்
　　திருநாவுக் கரசர் பாதம். 23

இவ்வகை யரசின் நாம
　　மேத்தியெப் பொருளும் நாளும்
அவ்வருந் தவர்பொற் றாளே
　　யெனவுணர்ந் தடைவார் செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத்
　　திருத்தில்லை மன்று ளாடும்
நவ்வியங் கண்ணாள் பங்கர்
　　நற்கழல் நணணி னாரே 24

—சேக்கிழார்

3. நைடதம்

சூதாடு படலம்

நளனது ஆட்சி

நிழல்உமிழ்ந் துதிரம் காலும்
வயிரவாள் நிடதர் கோமான்
எழுபுவி வேந்தர் யாரும்
இடுதிறை கொணர்ந்தெஞ் ஞான்றும்
தொழுதனர் ஏத்தி நிற்பத்
தொடுகடல் உடுத்த ஞாலம்
முழுவதும் ஒருகோல் ஓச்சி
முறைவழா தளித்தான் அன்றே. 1

கலி நளனைப் பற்றிக்கொள்ளுதல்

கோவடு குருதி வேலான் கொழுஞ்சுடர் பட்ட காலைச்
சேவடி கழுவல் இன்றிச் செய்கடன் கழித்தல் நோக்கிக்
காவலற் சேருங் காலம் கருதுபு பன்னி ராண்டு
மேவருந் தான்றி உற்ற வெங்கலி மேயினனே. 2

கலி புட்கரனிடம் செல்லல்

'விட்புலத் தரசரும் ஏனை வேந்தரும்
வட்கஇம் மன்னவன் மல்லல் மார்பகம்
பெட்புறு மடந்தையைப் பிரிப்பன் யான்' எனப்
புட்கரன் பாற்கலி போயி னனரோ. 3

கலி காளையுருவங் கொண்டு புட்கரனைச் சுமத்தல்

முழைஉறை கொடுவரி அனைய மொய்ம்பினன்
உழையினில் போதுமென் றுரைத்து வெங்கலி
மழவிடை உருக்கொடு நிற்ப வண்சுடர்
இழைதவழ் மார்பினன் இவர்ந்து போயினன். 4

புட்கரன் காளைமீது இவர்ந்து நளனை அடைதல்

'மன்னவற் கெம்வர வுரைத்தி வாயிலோய்'
என்னலும் ஆங்கவன் எய்திக் கூறலும்
கொல்நவில் வேலினன் 'கொணர்க' என்றனன்
மன்னவன் வருகென அவையின் எய்தினன். 5

களைகண தாகியோர் கவிகை நிழலில்
வளைகடல் உலகெலாம் புரக்கும் மன்னவன்
தளையவிழ் தாமரைத் தாளில் வீழ்ந்தெழும்
இளவலோ டளவளாய் இருக்கும் எல்லையில். 6

கொல்சின வாகைவேற் குரிசில், மல்லலேற்
றெல்லுமிழ் மணிக்கொடி உயர்த்த தென் ?'னென
வல்லடு சூதினில் ஏற்ற மன்னரை
வெல்கொடி ஈதென விளம்பி னனரோ. 7

புட்கரனை நளன் சூதாட அழைத்தல்

சொல்லிய அவ்வுரை கேட்டுத் தூமணிக்
கல்லெனப் பணைத்துயர் கலவைத் தோளினன்
வெல்கொடி உயரிய விடலை, சூதில்நீ
வல்லையேல் ஆடுதும் வருகென் றேதினன் 8

அமைச்சர் அறவுரை

"சீலம்நல் தருமம்மெய் சிதைக்கும் : தெண்திரை
வேலைமுற் றிருநிலக் கிழமை வீழ்த்திடும் :
மாலுறுத் திடும்கவ ருடல், மன்ன கேள் :
கோலிழுக் கரசர்தம் கொள்கைத் தென்பவே'. 9

'கள்ளுண விரும்புதல், கழகம் சேர்தல், மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்தல், ஒன்னலர்க்
கொள்ளரு ஞாட்பினுள் இரியல் செய்திடல்
வள்ளியோய், அறநெறி வழுக்கம' என்பவே. 10

'ஐய, நீ ஆடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூது, வெம்
பொய்யினுக் கருந்துணை, புன்மைக் கீன்றதாய்,
மெய்யினுக் குறுபகை' என்பர் மேலையோர். 11

நளன் மறுத்தல்

கலைக்கடல் கடந்துளார் கழறுங் கட்டுரை
சிலைத்தழும் பிருந்ததோட் செம்மல் கேட்டுயிர்
உலப்பினும் மறுக்கிலேன் உரைத்த வாய்மை ; நீர்
விலக்குவ தென் ?என விளமபி னனரோ. 12

நளன் தோல்வி

சூழ்வினைப் புணர்வினல் சொன்னவா றியைந்
தாழ்கடற் புவிதொழும் அரசன் ஆட,வெங்
காழ்மனக் கொடுங்கலி கவற்றின் வண்ணமாய்
வீழ்தலும் புட்கரன் வென்றிட் டானரோ ! 13

—அதிவீர ராம பாண்டியன்

4. இரட்சணிய யாத்திரிகம்

ஏசுநாதர் உயிர்பெற்று எழுதல்

மெய்கண்ட விடத்துப் பொய்ம்மை
வெளுத்ததென வெளுத்த திந்து
காய்கண்ட களவி ணுக்கங்
கரந்தெனக் கரந்த விண்மீன்
பொய்கண்டு மருண்ட வுள்ளம்
போலொளி யிழந்த தீபம்
மய்கண்ட கங்குல் வாட்டும்
வைகறை கண்டு கண்டே. 1

இன்னதோ ரமையந் தன்னில்
இருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய
பரகதிப் பயனை யீட்டித்
துன்னிய சடவி யோகத்
துயிலுணர் சூழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்தன்
உயிர்த்தெழுந் தருளிப் போந்தார். 2

வார்த்தையாய் நடுவ ராகி
மன்னுயிக் கிரட்சை நல்க
மூர்த்தியாய்ச் சமாதி கூடி
முறைவழா துயிர்த்தெ ழுந்த
தீர்த்தனை தரிசித் தேத்திச்
'செய செய' என்று போற்றிக்
கீர்த்தன நறும்பூ மாரி
பெய்தனர் கெழுமி விண்ணோர். 3

ஞாயிற்றின் தோற்றம்

ஆயபே ரன்பு மல்கும் ஆழியி லுதித்து மாந்தர்
மீயுயர் விண்ணோராக விளங்குபுண் ணியவே தாந்த
ஆயிரங் கரங்களோச்சி அலர்பரஞ் சுடரைக் காண்பான்
சேயொளி பரப்பிக்கீழ்பால் தினகரன்உதயஞ் செய்தான். 4

தேவதூதர்கள் இருவர் வருதல்

நம்பிரான் உயிர்த்தெ ழுந்த நலம்பெறு முகூர்த்தந் தன்னில்
அம்புவி யதிர வஞ்சிக் காவல ரயர்ந்து வீழ
உம்பர்நின் றிழிந்த தேவ தூதரோ ரிருவர் ஒல்லை
இம்பரிற் சேம வைப்பை எதிர்த்தனர் பகைவர் எஞ்ச. 5

மூன்று பெண்கள் ஏசுநாதர் சமாதியைக் கண்டு வருந்துதல்

இருள்புலர் காலை கண்ட ஏந்திழை மாரோர் மூவர்
தெருளுறீஇ எழுந்தெம் மையன் சேமவைப் பதனை யண்மி
மருளறச் சமாதி வாயில் திறவுண்ட மரபை நோக்கி
வெருளுறீஇக் கலங்கி நின்றார் வெய்துளந் திகைத்து மாதோ! 6

தேவதூதர்கள் கூற்று

ஆயிடை யருகர் நின்றும் அவிரொளி மின்னி னார்ந்த
தூயுடை பரித்த தேவ தூதரோ ரிருவர் தோன்றி
"நீயிரிச் சேம வைப்பில் நேடுவ தெவன்கொல் சீவ
நாயகன் தன்னை முன்னர் நவின்றவா சகத்தை ஓர்மின்." 7

ஈண்டுளா ரல்லர்சீவன் இயைந்தெழுந் தருளி னாரக்
காண்டகு நம்பி நும்முன் **கலிலேய நாடு** சேர்வர்
பூண்டமெய் யன்ப ருக்குப் புகலுமிப் புதுமை" என்னாச்
சேண்டலத் தெழுந்து போனார் நிகழ்ந்தவை தெரியச் செப்பி. 8

மகளிர் விண்ணப்பம்

உன்ன தேசன் உயிர்த்தெழுந் தாரெனச்
சொன்ன சொல்லமு தஞ்செவி தோய்தலும்
மன்னு நித்திய வாழ்வுகை வந்தெனப்
பொன்ன னார்க்குச் சிறந்தது புத்துயிர். 9

உரையி றந்த வுவகைப் பெருங்கடல்
கரைபு ரண்டு கதித்ததுக் காக்கினி
விரைவின் மாய்ந்திட மெல்லிய லாரெழுந்(து)
'உரைசெய் வாந்திருத் தொண்டர்க்(கு)' என் றோடினார். 10

ஏசுநாதர் தோன்றி அப்பெண்டிரை வாழ்த்துதல்

தூதர் சொற்ற சுமங்கல வார்த்தைகொண்
டேத மில்லவர் ஏகுழி எம்முயிர்
நாதன் கண்ணெதிர் தோன்றி "நலங்கிளர்
மாதரீர் நன்கு வாழ்"கென வாழ்த்தினர். 11

அருளின் வாழ்வை அறங்கிள ராரணப்
பொருளை யன்பின் புணரியைப் புங்கவர்
தெருளுஞ் சின்மய தேசிக மூர்த்தத்தை
மருளொன் றின்றி மடந்தையர் நோக்கியே. 12

உழுவ லன்பொ டுளங்கனிந் தொல்லெனக்
கழுதின் வன்றலை யைத்தெறு காற்றுணை
தொழுது வீழ்ந்தனர் பன்முறை தோத்திரித்
தெழுது பாவையன் னாரினி தேத்தினர் 13

ஏசுநாதர் மறைவு

"நன்று யாவும் நலிவுறு சீடருக்
கின்றி யம்பி எனைக்கலி லேயநாட்
டொன்ற விள்ளுமின் உள்ளங் கலங்கன்மின்"
என்று ரைத்துக் கரந்தனர் எம்பிரான். 14

— வித்துவான் எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை

5. திருவிளையாடற் புராணம்

மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

கன்னிநான் மாடக் கூடற்
கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோ னன்னான்
தனபதி என்னும் பேரான்
மன்னினன் அனையான் கற்பின்
மடவரல் சுசீலை யென்பாள்
பொன்னினாள் முளரிச் சேக்கைப்
புண்ணியத் திருவி னன்னாள். 1

எனவிவர் தமக்கு மைந்தர்ப்
பேறின்றி இரங்கு நாளில்
தனபதி மருகன் தன்னைத்
தகவுசால் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பால் நல்க
மனைவியும் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப்
பொலிவுற வளர்த்துக் கொண்டாள். 2

ஆனால் தங்கைக்கும் தனபதிக்கும் மனத்துன்பம் ஏற்பட,
தங்கை தமையனை இகழ்ந்து கூறினாள்

'பெருமிதம் உனக்கேன் பிள்ளைப்
பேறற்ற பாவி நீயென்
அருமைநன் மகனா லன்றோ
இருமையும் அடைவாய்?' எனனப்
பெரிதுநாண் அடைந்து மேலைக்
காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவேன் என்னாத்
தனபதி தவமேற் செல்வான். 3

தன்பெருஞ் செல்வமெல்லாம்
மருமகன் தனக்கே யாக்கி
அன்புகொள் மனைவி யோடும்
அருந்தவ நெறியிற் சென்றான்.

பின்பவன் வரவு தீர்ப்ப
மருமகன் பெற்ற வெல்லாம்
வன்பினால் வழக்குப் பேசி
வெளவினார் தாய மாக்கள். 4

விளைநிலன் அடிமை பைம்பூண்
வெறுக்கைநன் பசுக்கள் ஏனை
வளனுமற் றவர்கைக் கொள்ள
வன்சிறை யிழந்த புட்போல்
தளர்வுறு மகனும் தாயும்
சார்பிலார் தம்ம னோர்க்கோர்
களைகணா யிருக்குங் கூடற்
கடவுளே சரணம் என்று. 5

சோமசுந்தரக் கடவுளிடம் முறையிடல்

'என்மகன் தன்னை மைந்தன்
இன்மையால் எவருங் காணத்
தன்மக னாகக் கொண்டு
தகுதியால் அன்றே காணி
பொன்மனை பிறவும் நல்கிப்
போயினான் என்முன் இப்பால்
வன்மையால் தாயத் தார்கள்
அவையெலாம் வெளவிக் கொண்டார். 6

ஒருத்திநான், ஒருத்திக் கிந்த
ஒருமகன் இவனுந் தேறுங்
கருத்திலாச் சிறியன் வேறு
களைகணுங் காணேன ஐய
அருத்திசால் அறவோர் தேரும்
அருட்பெருங் கடலே எங்கும்
இருத்திநீ அறியாய் கொல்லோ,
என்றுபார் படிய வீழ்ந்தாள். 7

சிவபெருமான் கனவில் தோன்றிக் கூறல்

புலர்ந்தபின் தாயத் தோரைப்
புரவலன் ஆணை யாற்றால்
வலந்தரு மன்றத் தேற்றி
மறித்தனை யிருத்தி யாம்போந்

தலந்தரும் அறிவான் மூத்தோர்
அனைவரும் இசைய அந்தச்
சலந்தரும் வழக்குத் தீர்த்துக்
தருகுவம் போதி யென்றார். 8

வேரியங் குவளை யுண்கண்
விழித்தனன் வியந்து 'கெட்டேன்
ஆருமில் லார்க்குத் தெய்வந்
துணையென்ப தறிந்தேன்' என்னுக்
காரிருங் கயலுண் கண்ணாள்
கணவனைத் தொழுது வாழ்த்திச்
சீரிளங் குமர னோடும்
தெரிவைதன் மனையிற் சென்றாள். 9

சென்றவள் கங்கு லெல்லை
தெளிந்தபின் எழுந்து வெள்ளி
மன்றவன் கோயில் வாயில்
வந்துவந் தனைசெய் தம்பொன்
குன்றவன் உரைத்த வாற்றால்
கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவர் இருக்கை யெய்தி
விளம்புவாள் பலரும் கேட்ப 10

'அட்டில்வாய் நெருப்பி டேல்: ஓர்
அடியிடேல்: அறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று
போகொட்டேன்; பலருங் கேட்க
விட்டிடேன்: அரச னாணை
அறத்தவி சேறி ஆன்றோர்
ஒட்டிய படிகேட் டெங்கள்
உரிப்பொருள தந்து போமின். 11

தாயத்தார்கள் தனபதியின் தங்கையையும் மைந்தனையும் அடித்து விரட்டிவிட, அவள் வழக்குரைக்க, சிவபெருமான் தனபதி வடிவங்கொண்டு வருதல்

பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்ந்
தெரிகதிர் கவிழ்ப்பவாள் எறிக்கும் அங்கதம்
அருவரைத் தோள்கிடந் திமைப்ப ஆகமேற்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே. 12

வாடிய முளரிபோல மாறிட் டாரிடத்
தூடியும் மலர்ந்தபோ தொப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்தும் உட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வாரவை. 13

'அரசனிங் கில்லை கொல்லோ!
ஆன்றவ ரில்லை கொல்லோ!
குரைகழல் வேந்தன் செங்கோல்
கொடியதோ! கோதில் நூல்கள்
உரைசெயுந் தெய்வந் தானும்
இல்லைகொல்! உறுதி யான
தருமமெங் கொளித்த தேகொல்!
என்றறத் தவிசிற் சார்வார். 14

தன் மருகனைக் கண்டு தனபதி வருந்துதல்

ஐம்படை மார்பில் காணேன்:
சிறுசிலப் படியிற் காணேன்;
மொய்ம்பிடை மதாணி காணேன்;
முகத்தலை சுட்டி காணேன்;
மின்படு குழைகள் காணேன்;
வெற்றுடல் கண்டேன் அப்பா!
என்பெறும் என்று பிள்ளைப்
பணிகளுங் கவர்ந்தார்?' என்று 15

அனைவரும் இரங்க வாய்விட்
டழுதவர் இளையாள தன்னைத்
தனயனைக் கண்ணீர் மாற்றித்
தடக்கையால் முதுகு தைவந்(து)
'இனையன்மின் என்முன் வேறென்
றெண்ணன்மின் என்று வஞ்ச
வினைஞர்வல வழக்குச் சோர்ந்து
விடுவது காண்மின்' என்று. 16

நட்பிடை வஞ்சஞ் செய்தும்
நம்பினோர்க் கூண்மா றுட்டத்
துட்படக் கவர்ந்தும் ஏற்றோர்க்
கிம்மியும் உதவா ராயும்.

வட்டியின் மிதப்பக் கூறி
வாங்கியும் சிலர்போல் ஈட்டப்
பட்டதோ அறத்தா றீட்டும்
நம்பொருள் படுமோ என்று 17

மங்கல மாடம் ஓங்கும்
மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி
மாணிக்கந் தேற்றி விற்கும்
எங்குல வணிக ரேறே,
எம்மனோர் வழக்கை யிந்தப்
புங்கவ ரிடனுத் தீர்த்துத்
தருகெனப் புலம்பி யார்த்தார். 18

ஆவலித் தழுத கள்வர்
வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோல் நுண்ணூல்
கட்டிய தருமத் தட்டில்
நாவெனுந் துலைநா விட்டெம்
வழக்கையும் நமராய வந்த
மேவலர் வழக்குந் தூக்கித்
தெரிகென விதந்து சொன்னார். 19

நரைமுது புலியன் றன்சொற்
கேட்டலும் நடுங்கிச் சான்றோர்
இருவர்சொல் வழக்கும் மேற்கொண்
டனுவதித் திரண்டும் நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி
வழக்கெனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள்
வலியரின் வேறு சொல்வார். 20

தவலருஞ் சிறப்பின் ஆன்ற
தனபதி தணிக ரல்லர்
இவரென அவையங் கேட்ப
இருகையும் புடைத்து நக்குக்

கவளமான் உரித்துப் போர்த்த
கண்ணுதல் வணிகர் கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டம்
காணிமற றனைத்துங் கூறும். 21

தந்தைதாய் மாமன் மாமி
தாயத்தார் இவரை யீன்றார்
மைந்தர்கள் உடன்பி றந்தார்
மனைவியர் கிளைஞர் மற்றும்
அந்தமில் குணங்கள செய்கை
ஆதிய அடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ணம்
முறையினான் மொழிந்தான் முன்னோன். 22

அனையது கேட்ட ஆன்றோர்
அனைவரும் நோக்கி யந்தத்
தனபதி வணிகர் தாமே
இவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம்
வழக்கிழுக் கடைந்து தீது
நனைவழி வேம்பன் தேரின்
தண்டிக்கும் நம்மை யென்னா. 23

இல்லினுக் கேகி மீள்வன்
யானென்றும் குளத்திற் கேகி
ஒல்லையில் வருவே னென்றும்
ஒவ்வொரு வார்த்தை யிட்டு
வல்லெழு வனைய தோளார்
அனைவரும் வனகால் தள்ளச்
செலலெழு முகில்போற் கூட்டஞ்
சிதைந்தனர் ஒளித்துப் போனார். 24

சிவபெருமான் மறைதல்

அனையவர் போக நின்ற
அறனவில் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த
தனமெலாந் தந்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி
ஈந்தனர் ஈந்த வெல்லை
மனமொழி கடந்த நாயகர்
மறைந்துதங் கோயில் புக்கார். 25

— பரஞ்சோதி முனிவர்

IV. வருணனைப் பகுதி

1. அந்தி நேரம்

சக்கரம் தானவன் தலையில் தாக்குற,
எக்கிய சோரியிற் பரந்த தெங்கணும்
செக்கர்அத் தியவன் வாயில் தீர்ந்துவே
றுக்கவான தனிஎயி றொருத்த திந்துவே. 1

மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின;
தந்தியும் பிடிகளும் தடங்கள் நோக்கின;
நிந்தையில் சகுந்தங்கள் நீளம் நோக்கின;
அந்தியை நோக்கினன், அறிவை நோக்கினன். 2

மொய்யுறு நறுமலர் முகிழ்த்த வாம்சில;
மையுறு நறுமலர் மலர்ந்த வாம்சில;
ஐயனோ டிளவற்கும் அமிழ்த னாளுக்கும்
கைகளும் கண்களுங் கமலம் போன்றவே. 3

—கம்பர்

2. சந்திரோதயம்

கான்எலாம் மலர்ந்த முல்லை
 ககனமீ தெழுந்த தென்ன,
வான்எலாம் வயங்கு தாரை
 நிரைநிரை மலர்ந்து தோன்ற,
வேனிலான் விழவின் வைத்த
 வெள்ளிவெண் கும்பம் என்னத்
தூநிலா மதியம் வந்து,
 குணதிசை தோன்றிற் றம்மா.

—வில்லிபுத்தூரார்

3. இசைச் சிறப்பு

பைத்தலை விடவாய் நாகம்,
 பல்பொறி மஞ்ஞை, நாலவாய்
மத்தமான், அரிமான், புல்வாய்,
 வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமா றறியா வாகித்
 தலைத்தலை மயங்கிச் சோர,
இத்தகை மாவும், புள்ளும்
 இசைவலைப் பட்ட வம்மா 1

வன்தரை கிழிய வீழ்போய்,
வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்கள் எல்லாம்
செவியறி வுடைய வாகி
மென்தளிர் ஈன்று, போது
விரிந்து,கண் ணீரும் சோர,
நன்றறி மாந்தர் போல
நகைமுகம் மலர்ந்த மாதோ. 2

—பரஞ்சோதி முனிவர்

4. திருக்குற்றால மலைவளம்

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்;
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்;
வாடக் காண்பது மின்னார் மருங்கு;
வருந்தக் காண்பது சூலுளை சங்கு;
போடக் காண்பது பூமியில வித்து;
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து;
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி;
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே.

—திரிகூடராசப்பக் கவிராயர்

5. பொங்கற் றிருநாள்

வந்ததுகாண் பொங்கலெனும் மறத்தமிழர் நன்னாள்!
மகிழ்ச்சியெனும் வெள்ளத்தில் மக்களெலாம் ஆழ்ந்தார்.
கந்தலுடை பழஞ்சட்டிப் பானைவெளி யேகும்;
கவினாரும் புதுதுணவும் புதுப்பொருளும் சேரும்;
செந்தமிழர் வீடெங்கும் வெண்ணிலவு வீசும்;
சீர்திருத்தம் வந்துபுகும்; சிறப்பெல்லா மோங்கும்;
செந்நெல்மணிப் புத்தரிசி செழும்பாலிற் பொங்கும்;
தெருவெல்லாம் பொங்கலொலி வானத்தும் பரவும். 1

* * *

'பொங்கிற்றே பாலுங்கள் வீட்டி'லென்பாள் பூவை
'பொங்கலொடும் எம்முளத்திற் பொங்கிற்றே இன்பம்
இங்'கென்பாள் மற்றொருத்தி. 'இப்படிவா தோழா,
எத்தனைசட் டைதைத்தாய்?' எனக்கேட்பான் ஒருவன்
'எங்களத்தான் கொடுவந்தான் இருபட்டுச் சட்டை
என்றந்தை தந்தனவும் இரண்'டென்பான் சிறுவன்
அங்கவர்தம் ஆடலிலும் பாடலிலும் மேலாம்
ஆநந்தம் பூத்திடுமே பொங்கிடுக பொங்கல். 2

— வித்துவான் தணிகை. உலகநாதன்

V. சிறு நூல்கள்

1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

ஊசல் பருவம்

கொன்செய்த செழுமணித் திருவூச லரமகளிர்
கொண்டாட வாடுந்தொறுங்
குறுமுறுவ னெடுநில வருந்துஞ் சகோரமாய்க்
கூந்தலங் கற்றை சுற்றும்
தென்செய்த மழலைச் சுரும்பராய் மங்கைநின்
செங்கைப் பசுங்கிள்ளை யாய்த்
தேவதே வன்பொலிவ தெவ்வுருவு மாமவன்
திருவுருவின் முறைதெ ரிப்ப
மின்செய்த சாயலவர் மேற்றலத் தாடிய
விரைப்புனலி னருவி குடையும்
வெள்ளானை குங்குமச் செஞ்சேறு நாறமட
மென்பிடியை யஞ்சி நிற்கும்
பொன்செய்த மாடமலி கூடற் பெருஞ்செல்வி,
பொன்னூச லாடி யருளே!
புழுகுநெய்ச் சொக்கர்தரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடி யருளே!

— குமர குருபர சுவாமிகள்

2. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

சிற்றில் பருவம்

விருந்து விளிப்போம் எனக்கருதும்
வேலை யடிகேள் இவணீயே
விரும்பி வந்தாய் எனமகிழ்ச்சி
மீக்கூர் தலினல் செவ்வாயின்
முருந்து தோன்ற முறுவலித்தோம்
அல்லால் ஒருநின் கரிமுகம்போல்
முகமும் பூதப் பெருவயிறும்
முடங்குங் குறள்தாள் நகுநடையும்

இருந்த வாறு நோக்கிநகைத்
திட்டே மல்லேம் இடந்தோறும்
இருக்கு முழக்குந் தேவாரத்
திசையும் துவன்றி ஓங்கவளந்
திருந்துங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே!
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே!
— சிவஞான முனிவர்

3. தமிழ்விடு தூது

வீடாளும் வாணியங்கை
மேலே யிருந்தாயோ?
ஏடாக வுன்மே
லிருந்தாளோ?—ஆடரவத் 1

தாழ்பாய லாளரைநீ
தானே தொடர்ந்தாயோ
சூழ்பாயோ டுன்னைத்
தொடர்ந்தாரோ?—வாழ்வேயென் 2

ஸ்ருதிமுனி கேட்க
வுனைமுருகர் சொன்னாரோ?
சோதி யவரைநீ
சொற்றனையோ?—பேதியா 3

நேசருனக் கேபொருளாய்
நின்றாரோ? நீண்மதுரை
வாசருக்கு நீபொருளாய்
வந்தாயோ?—பாசமுறும் 4

என்செய்தி நீகண்
டிரங்குவது நீதியல்லால்
உன்செய்தி நானோ
வுரை செய்வேன்?—இன்சொல்லாய் 5

‘கற்க கசடறக்
கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத்
தக’வென்ற—சொற்குள்ளே 6

எல்லார்க்கும் புத்தி
யியம்பிக் கரையேற்ற
வல்லா யுனக்குரைக்க
வல்லனோ—சொல்லியவுன் 7

ஈரடிக்குள் ளேயுலக
மெல்லா மடங்குமெனின்
நேரடிக்கு வேறே
நிலனுண்டோ ?—ஓரடிக்கோர் 8

ஆயிரம் பொன்னிறைக்கு
மையரை வீதியிலே
போயிரந்து தூது சொல்லப்
போக்கினோ—யாயிருந்தும் 9

மாண்பாயோர் தூதுசொல்லி
வாவென்பே னென்வருத்தங்
காண்பாயென் பெண்மதிநீ
காணாதே— 10

4. திருவரங்கக் கலம்பகம்

மறம்

பேசவந்த தூத,செல் லரித்தஓலை செல்லுமோ ?
பெருவரங்கள் அருளரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா ?
வாசலுக் கிடும்படல் கவித்துவந்த கவிகைமா
மகுடகோடி தினையளக்க வைத்தகாலும் நாழியும்
வீசுசாம ரம்குடில் தொடுத்தகற்றை சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே.

— பிள்ளைப்பெருமாளையங்கார்

'மணவாள மாமுனியே! இன்னமொரு நூற்றாண்டிரும்' என வாழ்த்துவர் வைணவ அன்பர்கள். அவர்கள், கடவுளரையும் கடவுளருக்குச் சமமாக எண்ணும் அடியாரையும் வாழ்த்துதலால் அவ்வாறு பல நூறு ஆண்டுகள் இருக்க வாழ்த்துதல் தகுதியே; கடவுள் பல்லாண்டென்னும் பதங் கடந்தொளிரும் பரம்பொருளாதலின் இது பொருந்தும்; எனினும் பல்பிணிச் சிற்றறிவினராய மக்களையும் நம் பெரியோர் அவ்வாறு வாழ்த்தவே விரும்புகின்றனர்.

"ஆற்று மணலினும் நின் ஆயுள் சிறக்க; கழனியில் விளையும் நெல்லினும் நீ வாழ்க; விண்மீனினும் நின் நாள் பொலிக" என இவ்வாறெல்லாம் புலவர் பலரும் மக்களை வாழ்த்துதலின் நோக்கம் என்ன என்பது ஈண்டு ஆராயற்பாலது.

* * *

உலக நலன்களை யெல்லாம் நுகர்ந்து வெறுப்புறத்தக்க நிலையில் உள்ள மிக்க செல்வனும் இவ்வுலகில் நீண்டநாள் வாழவே எண்ணுகின்றான்; ஒருவேளை உணவிற்கும் வழியற்றுக் கிடக்கும் கொடிய வறுமையாளனும் மேலும் பல நாள் உயிரோடிருக்கவே விழைகின்றான்; நீங்காத பிணியால் துன்புறும் நோயாளனும், மூத்து முதிர்ந்த கிழவனும் நெடுநாள் இருக்கவே அவாவுகிறார்கள். இவற்றைக் கூர்ந்து நோக்கும்போது நாம் இவ்வுலக நலன்களைப் பெற்று இன்புறுதற்கும், இப்பிறவியினால் அடையவேண்டிய பெரும் பயன்களை அடைதற்கும் இறைவன் போதிய காலத்தினை நமக்கு அருளவில்லை எனவே எண்ண இடந்தருகின்றது. இதனையும் பிறகு எண்ணிப் பார்க்கலாம்.

இவருறை யெல்லாம் நீக்கி நம் கண்கூடாக நிகழ்தலைக் கவனிக்கின் மக்களுள் ஐம்பத்தைந்து வயது வரையில் வாழ்வோரே பெரும்பாலோராவர். இவர்களுள் அறுபதுக்குமேல் ஒருவர் உயிர் வாழ்ந்திருப்பரேல் அதற்காக மகிழ்ந்து நாம் அவருக்கு 'மணி விழா' கொண்டாடுகின்றோம். எண்பதுக்கு மேலும் உயிர் வாழ்ந்திருப்பரேல் நாம் பெருமகிழ்வெய்தி 'முத்து வீழா'க் கொண்டாட முந்துகின்றோம். இவ்விதம் இன்றி முப்பத்தைந்து அல்லது நாற்பது வயதில் ஒருவர் இறந்துபடுவாரானால் "ஐயோ! இன்னும் சிலநாள் இருந்து இவர் இவ்வுலக நலன்களை யெல்லாம் கண்டு மகிழாமற் போய்விட்டாரே," என நாம் பெரிதும் வருந்துகின்றோம். எனினும் மக்களுள் பெரும்

பாலோருக்கு இவ்வுலகின்கண் எவ்வளவு நாட்கள் இருப்பினும் வெறுப்பு ஏற்படுவதில்லை." தொண்ணூறு வயது வாழ்ந்திருந்து இறக்கும் நிலையில் இருக்கும் ஒரு தொண்டு கிழவரும் தம் கொள்ளுப் பெயரன் மகனைப் பள்ளியில் வைத்துப் பார்த்து மகிழ்தற்கில்லையே என வருந்துதலையே நாம் காண்கின்றோம். இவ்விதம் மக்களுக்கு உலக வாழ்வின்மீதுள்ள பற்று ஓர் அளவில் நில்லாது செல்லுதலை உன்னியே அறிஞர் பலரும் 'எண்பது வயது வாழ்க,' 'நூறு வயது வாழ்க' என வாழ்த்தாது, 'பல்லாண்டு பல்லாண்டு வாழ்க,' 'நீடூழிக்காலம் வாழ்க' என வாழ்த்துவா ராயினர்.

* * *

மக்கள் தமக்கு ஆயுள் போதவில்லை என எண்ணி வருந்தும்படி, எல்லாம் வல்லவரும் அருள் வடிவானவருமாய கடவுள் மிகவும் குறைந்த ஆயுளைத் தந்திருக்கின்றார் என எண்ணுவது தவறு. கடவுள் சிக்கனம் என்பதைச் சிறிதும் அறியாதவர்; வாரி வாரி வழங்கும் வள்ளன்மை வாய்ந்தவர். மக்கள் ஒன்றிரண்டு பிழைகளாலேயே இறந்துபடுவதில்லை. இவ்வுடல் ஓர் ஒழுங்கான அமைப்பில் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் எத்தனையோ தவறுதல்களைத் தாங்கக்கூடிய தன்மையிலும் அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு நேரும் நோய் நொடிகள் பலவும் மக்கள் புரியும் தவறுகளைத் திருத்தி அவர்தம் உடலை ஒழுங்குபடுத்தும் நிலைமையிலே அமைந்திருக்கின்றன. இவ்விதமாக நம் ஆயுட்காலத்தையும் மிக அதிகமாகவே நமக்கு அளித்துள்ளனர். பிறப்பின் பயனை உணர்ந்து அடைய ஒருவனுக்குச் சிலகாலமே போதும் என்பதே இறைவன் எண்ணம். ஆனால் அவர் அளித்துள்ள காலமோ அளப்பிலது. மக்களாய நாம் அக்காலத்தை வீணில் கழித்துப் பிறகு நாட்கள் போதவில்லை என்று எண்ணுகின்றோம்.

கண்ணப்ப நாயனார் ஆறு நாட்களில் பெறுதற்கரிய வீடுபேற்றினை அடைந்தனர். ஞானசம்பந்தர் பதினாறு ஆண்டுகளில் புரிந்த செயல்கள் எண்ணில. சுவாமி விவேகானந்தர் முப்பத்தெட்டு வயதிற்குள் உலகமெல்லாம் சுற்றித் தொண்டுகள் பலப்பல ஆற்றி மறைந்தார். அருட்பா என்னும் அரிய நூலினை உதவிய வள்ளலாரும் ஐம்பதுக்குமேல் வாழ்ந்திருக்கவில்லை.

இவ்விதம் பல பெரியோர்களின் வரலாறுகளை உங்கட்கு நினைப்பூட்டலாம். நிற்க, ஒருவன் ஞான நிலையினை அடைதற்கு ஒரு சில நாட்கள் போதுமா என நமக்கு ஐயம் நிகழலாம்.

கல்லாய், மரமாகிப் புல்லாய்ப் புழுவாகி இவ்விதம் பல பிறவிகளைப் பெற்றே முடிவில் இம்மக்கட் பிறவியை உயிர்கள் பெறுவதாக மணிவாசகனார் கூறுகின்றார். "எண்ணரிய பிறவி தனில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிது அரிதுகாண்; இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகி லேன்" எனக்கூறி அஞ்சுகின்றார் தாயுமானவர். இத்தகைய அரிய பிறவியைத் தந்த இறைவன், மக்கள் நல்வாழ்வை அடைவதற்கு மிகக் குறைவான நாட்களையா தந்திருப்பார்? ஒருவன் தன் ஆயுட்காலத்தை எல்லாம் தவறான வழியில் கழித்துவிட்டான்; அவன் உயிர் அவ்வுடலைவிட்டு நீங்குதற்கு இன்னும் ஐந்தே நிமிடங்கள்தாம் உள்ளன; அப்போது அவன் தன் பிழைகளை உணர்கிறான்; அவனுக்கு இவ்வுலகின்மீதும் இவ்வுலகில் உள்ள பொருள்களின்மீதும் தன் உடலின்மீதும் கொண்டிருந்த ஆசை அப்போது முற்றிலும் நீங்கிவிடுகின்றது; கடவுள் ஒருவர் இருக்கின்றார் என எண்ணுகின்றான்; அவர் தம் அருட்பெருங் கருணையை எண்ணி அவர்மீது அன்பு செலுத்துகின்றான் எனின், அச்சமயம் அவனுக்கு அக்கடவுளைத் தவிர்த்து வேறொரு பொருள் இருப்பதாகத் தோன்றாது. அவன் தன்னையும் மறந்து அன்பின் வடிவமாக இருப்பான். அவன் புரிந்த தீவினைகளும் அவனைச் சாரா. ஆதலின் அவன் அக் கடவுளோடு ஒன்றியிருந்து-அவன்வேறு, கடவுள்வேறு என்று சொல்ல இயலாத இரண்டற்ற தன்மையில் இருந்து-அதனால் பெறக்கூடிய பேரின்ப நிலையினையும் அடைகின்றான். இவ்வள வும் அடைய அவனுக்கு அந்த ஐந்து நிமிடங்களே போதும். ஆனால் அப்போது அவனுக்குத் தன் உடலினிடத்தும் பிற பொருள்களினிடத்தும் வெறுப்புத் தோன்றவேண்டும். இவை களின் மேம்பட்ட ஒரு பொருள் உண்டு என்னும் உறுதியான எண்ணம் உண்டாக வேண்டும்.

இன்பத்தைப் பெறுதற்கு அளித்துள்ள பொருள்களைக் கொண்டே நாம் ஒருசில விநாடிகளுள் என்றும் நீங்காத துன்பத் தையும் பெறலாம். இறக்கும் தருணத்தில் நாம் அறிவிழந்து இறக்கவும் நேரலாம். இரண்டுமணி நேரத்திற்குள் எப்போது வேண்டினும் உண்ணலாம் என ஒருவர் ஒரு சுவைமிக்க தின்

பண்டத்தினைத் தந்து செல்வாரானால பசியால் வாடிக்கிடக்கும் ஒருவன் அதனை உடனே உண்ண முயலாது 'இப்போது ஏன்? இன்னும் இரண்டுமணி நேரம் இருக்கிறதே' என்று எண்ணு வான்? அவ்விதமே துன்பத்தில் அழுந்தியுள்ள அல்லது அழுந் தத்தக்க நாம் இடையறுத இன்பத்தை அடைதற்குக் காலத்தைப் போக்காது உடனே நற்செயல்கள் பல புரிய முயலுதல் வேண் டும். ஆனால் இயல்பிலேயே அறியாமையில் அழுந்தியுள்ள உயிர்களுக்கு இன்ப துன்பங்களின் பாகுபாடும், நற்குண நற் செயல்களால் ஏற்படும் இடையராத இன்பத்தின் உண்மையும் முதலில் விளங்குவதில்லை. விளங்கினும் அதனை அடைய வேண்டிய நெறி புலப்படுவதில்லை, உலக இன்ப துன்பங்களில் உழன்று அலுப்புற்ற பின்னரே நிலைத்த இன்பத்தின்மீது மக்க ளுக்கு நாட்டம் செல்லுதல் இயல்பாதலின் வாழ்நாட்கள் பல் லாண்டு வேண்டியிருக்கின்றன. மக்கள் ஆண்டு பலவாக இவ் வுலகின் கண் உழன்றுகொண்டிருப்பின் அவர்கட்கு என்றைக் கேனும் நல்லுணர்வு தோன்றும் என எண்ணியே பெரியோர் நம்மைப் '**பல்லாண்டு வாழ்க**' என வாழ்த்துகின்றனர்.

2. அன்னைக்கு

டாக்டர் மு. வரதராசனார், எம். ஓ. எல்., பிஎச். டி., அவர்கள்

அன்புள்ள அம்மா,

உன் கட்டளைப்படியே இதுவரையில் நடந்தேன். இன்று நடக்க முடியவில்லை.

"தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள்; இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடி யாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட் டும் இருந்து மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லா மல் தமிழ்நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனாக இருந்து வாயால் மட்டும்விளங்காதே! உணர்வால் மட்டும் உயராதே, செய லாலே சீர்படு" என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்துவிட வில்லை. என் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முற் போக்குத் தமிழன்தான் என்பதைக் காட்டப் போகிறேன்;

நன்றுகக் கற்று முதல வகுப்பில் தேறப் போகிறேன். ஆனுலும் நேற்றுவரையில் அமைதியாக இருந்ததுபோல் இன்று இருக்க முடியவில்லே. ஆகையால்தான் சில திங்கள் கழித்து இதுபோல் கடிதம் எழுதுகிறேன்.

அம்மா! நான் எப்படி இன்று அமைதியாக இருக்க முடியும்? உலகமே அழுகின்றதே! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னே மறக்க முடியுமா?

உலகம் கண்ணீர் விடுகின்றது; ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லே; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடுதோறும் ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கி விட்டதே!

அம்மா, இமயமலே தலேகீழாய்ப் புரண்டிருந்தாலும் இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டாலுைம், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனல் உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டதே!

வாழந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகை மாறுதலே ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒரு சேரக் கலங்கவைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே!

புத்தர் வாழ்ந்தார்: அவர் வாழ்நாளில் லக்ஷககணக்கான மக்களின வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடிஸ் வாழ்ந்தார்: அவர் வாழ்நாளில் பதினுயிரக் கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலே விளேக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனல், வாழ்நாளிலே கோடிக்கணக்கான மக்களின் வாழக்கையில் மாறுதலே உண்டாக்கினவர் யார் அம்மா? காந்தியடிகள். இந்தப் பெயரையும் நினேத்து, தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்து கொள்வார்களே!

எல்லோரும் அரசியலில் காந்தியை அறிவீர்கள். அரசியலில்அவர் பெருந்தலேவர்என்பதே பெரும்பாலோருக்குத்தெரிந்தது. ஆனல், இதுமுழு உண்மைஅன்று; ஓரளவுதான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால், அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர்கள் எங்கும் இருக்கிருர்கள். அவருடைய அரசியல் கொள்கைகளுக்குச் செல்-

வாக்கு இருந்தாலும் உடன்படாமல் புறக்கணித்த தலைவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனாலும் அவருடைய அரசியல் நெறியே இன்றுவரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்கள் உயர்வுக்குக் காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலைநிமிர்ந்த வாழ்வுக்கும் காரணம்.

அம்மா, மறக்க முடியவில்லை. நம் வீட்டில் நாம் பல நாள் காந்தியடிகளின் கொள்கைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நாட்களை மறக்க முடியவில்லை. அரசியலில் அவர் சொல்வதில் இது மட்டும் சரி, அது சரியன்று என்று வாதாடினோம். ஆனால் ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ்வையோ, இயற்கை நெறியையோ, சமயக் கொள்கையையோ, அற ஒழுக்கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில் குறிப்பிட்டு அங்கே ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி அடக்கத்தோடு அமைதியடையவில்லையா? அவரைவிடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால், அவர் வாழ்ந்த வாழ்வை விடச் சிறந்த வாழ்வை—தூய வாழ்வை - குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கி விட்டோம் அல்லவா?

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒருதமிழன் எழுதிவிட்டுச் சென்றான். இந்தஇரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமலிருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் ஒரே எடுத்துக் காட்டாக நின்றது. அன்று திருவள்ளுவர் உண்மையின் பெருமையினை உணர்ந்து உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப் பற்றியே தமிழகத்தில் புலருக்குத் தெரியாது. ஆனால், அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை, கற்பனையாகவே நிற்கவில்லை; ஓர் அரிய வாழ்வாக மலர்ந்தது. அந்த மலர் வாடியது; சாம்பலானது. மதவெறியின் போர்வைபோர்த்த அரசியல் வெறி அந்த அருமை மலரைக் கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டுமென்ன? திருவள்ளுவரின் அறத்துப்பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக் காட்டாக வாழ்ந்த வாழ்க்கை அல்லவா அது?

எத்தனையோ நம்பிக்கைகள், எவ்வெவ்வாறோ தடுமாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன. ஆனால்,

அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாக இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை அன்று மாலை அடங்கிய அந்தப் பெருவாழ்வு !

இன்னொன்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்றுகிறது. அடிகள் பெரியவர், ஒப்பற்ற தலைவர் என்பதை உலகமெல்லாம் உணர்ந்துவிட்டது உண்மைதான். ஆனால் அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர்கள் எத்தனைபேர், அம்மா? அரசியலில் மட்டுமே அவர் இன்னவர் என்பதைப் பொது மக்கள் உணர முடிந்திருக்கலாம். இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர்கள் மிக மிகச் சிலரே என்று எண்ணுகிறேன் அப்பா ஒரு நாள் கூறியதுபோல், காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகள் பொதுமக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில்லாமல் உணவு விடுதிக்குச் சென்று உண்பது போல், கலையுணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பது போல், அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வதுபோல், நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கின்றார்கள். அதனால்தான், அந்தத் தூய உடல் வாடிய அன்று இரவே, கொலையும், கொள்ளையும், தீயிடலும், துன்புறுத்துதலும் தொடங்கச் சிலருக்கு மனம் வந்தது. ஆனாலும் அவர்களும் துயரக்கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும்போது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணமல்லர்; நெடுங்காலமாக நிலவி வரும் வெறியே காரணம் என்பது தெரிகின்றது.

அம்மா! என்னென்னவோ நினைவுக்கு வருகின்றன. தென்னப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாக நின்று அவருடைய அன்பையும் பெற்றார்கள். ‘ திககற்றவருக்குத் தெய்வமே துணை ’ என்னும் பழமொழியாலும் திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ் மொழி அவருடைய போற்றுதலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்க்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாதபோது அவரே தமிழாசிரியராக இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும்போது நெஞ்சம் நெக்குருகுகின்றது. தமிழர்களின் பண்பாடும், தமிழ் மொழியின் கருத்து வளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ்நாட்டு வறுமை

யும் அவருடைய கோலத்தையே மாற்றிவிட்டதே! சேலத்திற்குத் தெற்கே தமிழ் மக்கள்—ஆண்களும் பெண்களும் அரை நிர்வாணமாய் முழங்கால் வரையில் அரையாடை உடுத்து உழைப்பதைக் கண்ணுல் கண்ட அன்றுதானே, அடிகளின் தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் அகன்றது! பத்து முழ வேட்டியும் அகன்றது! 'இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை' என்று கசிந்துருகித் தமிழ் நாட்டுக் குடியானவன் கோலத்தை அல்லவா அன்றுமுதல் மேற்கொண்டார்! அந்தக் கோலந்தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்!

அம்மா! ஏதோ எழுதினேன், ஆறுதல் பெற!

அன்புள்ள மகன்

எழில்.

3. ஓவியன்

திரு. மு. பெ. துாரன், பி. ஏ., எல். டி. அவர்கள்

தென்னங்கீற்றின் மேலே அந்திச் சூரியனுடைய பொற்கிரணங்கள் பட்டுச் சொலிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? காற்று மெதுவாக ஓலைகளை அசைக்கும்போது, ஆகா! அந்தச் சொலிப்பின் அழகை என்னென்பது! அதை எனது ஓவியத்தில் பிடித்துவிட வேண்டுமென்று மூன்று நாட்களாக முயன்று கொண்டிருக்கிறேன். எந்த மாதிரி வர்ணக்கலவை செய்து வரைந்தாலும் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. கண்ணெதிரில் கண்ட அநத மின்னல் பிரகாச மினுமினுப்பை அப்படியே பிடிக்க முடியவில்லை. ஒன்று, மஞ்சள் நிறம் சிறிது அதிகமாகி விடுகிறது! அல்லது பசுமை மேலெழுகிறது! இல்லாவிட்டால் இவைகளுக்குள்ளே மயங்கிக் கிடக்கும் செவ்வண்ணம் மிகுதியாகிச் சொலிப்பைச் சிறிது மங்கச் செய்துவிடுகிறது. இப்படி ஏதாவது ஒரு குறை ஏற்பட்டு எனக்கு அதிருப்தியைப் பெருக்கிக் கொண்டே இருந்தது.

நான் உட்கார்ந்திருப்பது ஒரு காடு; சன நடமாட்ட மில்லாத வனப்பு மிக்க இடம்: அதனால் நிம்மதியாக எனது வேலையில் மனத்தை ஒரு முகமாகச் செலுத்த முடிந்தது.

ஆனால் தூரத்தில் தோன்றும் அந்தத் தென்னங்கீற்றுக் களில் நடக்கும் அந்த ஒளி நடனத்தை மட்டும் இன்னும் என் னால் திரையில் சிறைப் பிடிக்க முடியவில்லை. இரண்டு மாலை நேரங்கள் வீணாயின. மூன்றாவது நாளும் வெற்றி கிடைப்ப தாகக் காணவில்லை. அதனால் நான் சிறிது சிறிதாகப் பொறு மையை இழந்துவிட்டேன்.

"சரி, இப்பொழுது வந்திருக்கிற மாதிரியே போதும்; இதையே மக்கள் பார்த்து ஆச்சரியப்பட்டு மகிழ்வார்கள். ஆனால் அந்த உயிர் ஓட்டம் முழுவதும் இதில் இல்லைதான். இல்லாவிட்டால் என்ன? அதைப் பதினாயிரத்தில் ஒருவன் கூடச் சிந்திக்கமாட்டான். இதற்கே நல்ல விலையும் கிடைக் கும்; பிறகு எதற்காக வீண் சிரமம்," என்று நான் எண்ணமிட் டுக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில்தான் திடீரென்று ஓர் அற்புத மனிதன் என்முன் தோன்றினான். முதலில், 'இவன் யார், சிவ பூசையில் கரடி நுழைந்த மாதிரி?' என்னும் ஒரு வெறுப்பெண்ணம் என் மனத்தில் உதித்தது. பிறகு அவனுடைய நீண்ட தாடியையும், கூர்ந்த பார்வையையும், கம்பீரமான தோற்றத்தையும் கவனித்த வுடன் அவன் உருவம் நல்ல சித்திரமாகும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

அவன் முறுவலித்துக் கொண்டே என் அருகில் வந்து, "அது முடியாது" என்றான். 'எது முடியாது?' 'நான் நினைத் ததை இவன் எப்படி உணர்ந்துகொண்டான்? உற்று நோக்கு வதைப் பார்த்தே கண்டு கொண்டானா? அப்படி இருந்தால், இவன் சிறந்த அறிவாளியாகத்தான் இருக்கவேண்டும்?' என்ற எண்ணங்கள் கோவையாக ஒரே கணத்தில் என் மனத்தில் எழுந்து என்னைத் திடுக்கிடச் செய்தன. என்னை அறியாம லேயே அவனுடன் பேசவேண்டுமென்ற ஆசை தோன்றியது.

"நான் நினைத்ததை எப்படி அறிந்தாய்?" என்று வியப் புடன் கேட்டேன்.

அவன் எனது கேள்விக்குப்பதில்சொல்லவில்லை."அதிருக் கட்டும்; நீ யார்?" என்று திரும்பி ஒரு கேள்வி கேட்டான். அவன் முகப் பொலிவும், சிரித்த பேச்சும் அவனோடு வார்த்தை

கொடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று என்னைப் பெரிதும் தூண்டின. மேலும் நான்தான் எனது வேலையை அதோடு நிறுத்திவிட வேண்டுமென்று முன்னமேயே முடிவுகட்டி விட்டேனே!

"நான் ஓர் ஓவியன்" என்றேன்.

அவன் சிரித்தான் "நீதானு ஓவியன்? உலகில் உள்ள எல்லோரும் ஓவியர்களே. உனக்கு இதில் என்ன தனிச்சிறப்பு இருக்கிறது?" என்ருன்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உலகில் எல்லோருமே ஓவியர்களா? அதெப்படி இருக்கமுடியும்?

"நீ சொல்லுவது விநோதமாக இருக்கிறதே! எல்லோரையும் ஓவியர் என்று சொல்லமுடியுமா?" என்று நான் கேட்டேன்.

"நிச்சயமாகச் சொல்லலாம். நீ உன் இஷ்டப்படி படம் எழுதுகிருய். உலக மக்களும் தம்முடைய இஷ்டப்படியே தம் வாழ்க்கைச் சித்திரத்தை எழுதிக் கொண்டிருக்கிருர்கள். உனக்கு வர்ணங்கள் எப்படியோ, அப்படியே அவர்களுக்கு அவர்களுடைய குணம்" என்று அப்புதியவன் பதிலளித்தான்.

"உன் வார்த்தையின் கருத்தை நான் அறிந்துகொள்ள முடியவில்லையே," என்று நான் கேட்டேன்.

"கருத்தென்ன? இதுதான் கருத்து: நீ பல வர்ணங்களைக் கொண்டுவந்திருக்கிருய்; அவற்றைக் கொண்டு தூரிகையால் ஓவியம் தீட்டுகிருய். இந்த வர்ணத்தைத்தான் உபயோகிக்க வேண்டும்; இந்த மாதிரிதான் தீட்ட வேண்டுமென்று யாராவது உன்னைக் கட்டுப்படுத்துகிருர்களா? இல்லவே இல்லை. அது போலவே அவர்களும் சிலகுணங்களோடு உலகில்வந்து, வாழ் நாள் என்னும் தூரிகையைக் கொண்டு தங்கள் வாழ்க்கைப் படத்தை எழுதிக் கொண்டிருககிருர்கள். எந்தக் குணத்தைப் போற்றிப் பயன்படுத்தவேண்டும், எதை விலக்க வேண்டும் என்பதெல்லாம் அவர்கள் இச்சைப்படியே விடப்பட்டிருக் கின்றன," என்று அந்த மனிதன் கூறினுன்.

"சரி, அவர்கள் முயற்சியின் முடிவுதான் என்ன?" என்று நான் கேட்டேன்.

"உனது ஓவியத்தின் முடிவு போன்றதுதான் அதுவும். எந்த எந்த நிறங்களைப் பக்கம் பக்கமாக இருக்கச்செய்யலாமோ எவற்றைக் கலவையாக்கிப் புதியவர்ணத்தையும், காந்தியையும்

உண்டாக்கலாமோ அப்படிச் செய்து, உயிர்க்களையும் உணர்ச்சியும் தோன்ற வரைந்தால் உயர்ந்த சித்திரமாகும். தாறுமாருகப் பட்டையடித்தாலும் கலவை செய்தாலும் ஓவியம் பாழடைகிறது. அதுபோன்றதே வாழ்க்கை ஓவியமும். அதை எல்லோரும் மதிக்கும்படியாகச் செய்யலாம்; அல்லது வெறுக்கும்படியாகச் செய்யலாம்; எல்லாம் மனிதன் கையிலேயேஇருக்கின்றன. வெற்றிச் சிகரத்தை அடைபவனும் அவனே: பாதாளத்தில் அழுந்திக் கிடப்பவனும் அவனே," என்று அப்புதியவன் புகன்றன்

"ஆமாம், என்னுடைய ஓவியத்தைக் கண்டு பலர் புகழப் போகிருர்கள். நீ சொல்லும ஓவியத்தை யார் பார்க்கிருர்கள்?" என்று நான் வினவினேன்.

அவன் நகைத்தான். ஆகா, அஃது என்ன சிரிப்பு! அதில் நான் எல்லாம் அறிந்தவன் என்ற எனது பாவனை யெல்லாம் அடியோடு சாம்பலாகிவிட்டது. அடக்கம் பிறந்தது. அவன் மறுமொழியைக் கவனமாகக் கேட்கலானேன்.

"பல பேர் புகழுகிருர்கள் என்ற திருப்தியால்தானே அறைகுறையாக நீ உனது சித்திரத்தை இன்று முடிக்க நினைக்கிருய்? உனக்கு இன்றைய வேலை முற்றும் திருப்தியா? இல்லையே! சாதாரண மக்கள் புகழுரையிலா திருப்தி அடைவது? ஆயிரத்தில் ஒருவனுன ரசிகனை மகிழச் செய்வதல்லவோ சிறந்த கலை? அதோடு நீ நினைக்கிருய். உனது ஓவியந்தான் கவனிக்கப்படுகிறதென்று; உண்மை அதுவன்று. இந்த ஓவியம் எப்படி உங்களுடைய உள்ளத்தில் உணர்ச்சிகளை எழுப்புமோ அதுபோல ஒவ்வொருவனுடைய வாழ்க்கைச் சித்திரமும் அதன் மதிப்புக்குத் தக்கபடி உலகில் இன்பதுன்பம் போன்ற மாருன உணர்ச்சிகளை விளைவிக்கின்றது. அதன் பயனை நாம் எல்லோரும் தெரிந்தோ,தெரியாமலோ அனுபவிக்கிரோம். மற்றும் எல்லோருடைய வாழ்க்கைச் சித்திரத்தையும், உனது சித்திரமும் உள்பட கவனித்துத் தீர்ப்புச் சொல்லும் மகா ரசிகன் ஒருவன் இருக்கிருன். அவன் பார்வையில் அகப்படாதது ஒன்றுமில்லை. அவனை மகிழ்விப்பதே வாழ்க்கையின் இலட்சியமாகும்" என்று அவன் நிதானமாகப் பேசினுன்.

எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. இவன் சாதாரணப் பேர்வழி அல்லன் என்பதும் தெரிந்துகொண்டேன். அதே சமயத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி அவனுடைய

அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள என்னுள்ளே ஆவல் குதித்தெழுந்தது.

"அந்த மகா ரசிகன் என்னைப்பற்றி என்ன நினைப்பானோ?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"அதை யார் சொல்ல முடியும்? ஆனால் பாரபட்சமில்லாது தீர்ப்புச் சொல்லுவான் என்பது மட்டும் திண்ணம். மனித சமூகத்திற்கு உனது கலையினால் இன்பத்தைக் கொடுக்க நீ உண்மையாக முயன்றிருப்பாயாகில், அதில் பூரண வெற்றி அடையாவிட்டாலும், அவன் உன்னைப் போற்றுவான். ஆனால் சோம்பலாலும், அசிரத்தையாலும் உனக்குத் திருப்தி யில்லாத நிலையில் நிறுத்தினால் அவன் ஏற்றுக்கொள்ளமாட்டான். சாதாரண மக்களின் புகழுரையில் திருப்தி அடைந்து கலையின் சிகரத்தை அடைய முயலாது நின்றாலும் அவன் மகிழ்ச்சி அடையான்," என அவ்வறிஞன் கூறினான்.

"ஆமாம், உண்மை," என்று என்னுள்ளம் எதிரொலித்தது; கை என்னை அறியாமல் தூரிகையை மறுபடியும் எடுத்தது. நான் தென்னங்கீற்றின் சொலிப்பைத் திரையில் சிறைபிடிக்கப் புது ஆவேசத்துடன் ஆரம்பித்தேன்.

மறுபடியும் நான் என் கண்களைத் திரையிலிருந்து வேறு பக்கம் திருப்பியபோது அவனைக் காணவில்லை.

4. கும்பகருணன்

திரு. வித்துவான் வே. வேங்கடராஜலு ரெட்டியார் அவர்கள்

தென் கடலின் நடுவண் தீவு ஒன்றனில் இராவணன் என்பவன் அரசு செலுத்தி வந்தான். அவனுக்குக் கும்பகருணன், விபீடணன் என்னுந் துணைவரிருவர் இருந்தனர். இராவணன், கடுந்தவம் புரிந்து பெற்ற வரத்தாலும், கும்பகருணன் பலத்தாலும், தன் மைந்தன் மேகநாதன் திறத்தாலும் வானவரையும் வாசவனையும்வென்று,மூவுலகினையும்தன்னடிப் படுத்தி, புகழ்பெற்று விளங்கினான். கும்பகருணன், திண்மையும் வன்மையும் வாய்ந்தவனாயினும், மீதூண் அருந்தி, நெடிதுறங்கிக் காலம் போக்கினான். ஒருவா நெடுநேரம் உணர்வின்

றித் துயில்வாராயின், அவரைக் கும்பகருணன் என்று வழங்குதல் இன்றும் வழக்கில் உளது. இதனை,

> ' பண்டொருநாள்,
> கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்
> தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?"

என்று ஸ்ரீ ஆண்டாள் அருளி யிருத்தலினாலும் அறியலாம். விபீடணன் மறநெறி கடிந்து, அறநெறி யொழுகி, எவரும் பேரறிஞன் என்றும் புகழும்படி விளங்கினான்.

அக்காலத்தில் ஸ்ரீராமர், தம் தந்தையாரின் கட்டளைப்படி கானுறைதலை மேற்கொண்டு, தேவி சீதையோடும், இளவல் இலக்குவனோடும் அயோத்தியினின்று நீங்கி, பஞ்சவடி என்னுமிடத்தில் வதிந்திருந்தார். இராவணன் சீதையின் பேரழகினைத் தன் உடன் பிறந்தாளாகிய சூர்ப்பணகையால் அறிந்து சீதை மேல் வேட்கையுற்று, அவளை வஞ்சகமாகக் கவர்ந்து சென்று, தனது இலங்கை நகரில் சிறையிட்டான். சீதையைத் தேடித் திரிந்த இராம இலக்குவர்,அநுமன் சுக்ரீவன் முதலான வானர வீரர்களைத் துணைக்கொண்டனர். பின்னர் சீதையைத்தேடுமாறு நாற்றிசைக்கும் வானர வீரர்களை அனுப்பினர். அவ்வாறு தென் திசைக்கு அனுப்பப்பட்டவருட் சிறந்தவனாகிய அநுமன். தென்கடலைக் கடந்து, இராவணனது இலங்கை நகருட் புகுந்து ஆங்குப் பலவிடங்களில் சீதையை நாடித் திரிந்தான். கடைசியில் இராவணனது பூஞ்சோலையாகிய அசோகவனத்தில் சீதை சிறை யிருத்தலைக் கண்டு, அற்றமறிந்து அவளுக்குத் தன் வரவினை யறிவித்து,ஸ்ரீராமனின் செய்தியைத் தெரிவித்து,அவளிடம் விடைபெற்று, வெளிப்பட்டான். வெளிப்பட்டவன் அப்பொழிலின் மரங்களை ஒடித்து, காவலரை யடித்து, தன்னோடு பொருதோரைப் படுத்து, இலங்கை நகரை எரிவாய் மடுத்து, மீண்டும் சென்று ஸ்ரீராமரைச் சார்ந்தான்.

இவ்வாறு குரங்கொன்று தன் கடிநகர்ப்புக்கு, பொழிலை யழித்து, படைகளைத் தொலைத்து, ஊரை எரித்துச் சென்றதை அறிந்த இராவணன் 'இனிச் செய்யத் தக்கது யாது?' என்று, அமைச்சர் படைத் தலைவர் முதலியோருடன் ஆலோசனை செய்தான். ஒவ்வொருவரும் தத்தம் அறிவிற்குத் தோன்றியவாறு கூறினர். அப்பொழுது கும்பகருணன் எழுந்து அவர்களை விலக்கி, அண்ணலை வணங்கி, "ஐய, என் உரையை இகழாது

ஏற்றுக் கொள்வீராயின், யான் உறுதி பயக்குஞ் செயலை உரைக்கின்றேன்" என்று பணிமொழி பகர்ந்து கூறுவான்:

"அண்ணலே, தாமோ ஆயிரம் மறைகளையும் கற்று உணர்ந்த அறிஞர்; அத்தகைய நீவிர் தீச்செயலபுரிதல் தகுமோ? பிறர் மனைவியைக் கவர்ந்து சிறையிட்டிருத்தல் பழியும் பாவமும் பயக்கும். இது நமது உயர்குடிப் பிறப்பிற்கு ஒத்ததன்று.

ஆசில்பர தாரமவை அஞ்சிறை யடைப்போம்;
மாசில்புகழ் காதலுறு வேம், வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்,
கூசுவது மானிடரை; நன்றுநம கொற்றம்.

சீதையை இன்னே சிறைவிடுத்து ஸ்ரீராமர் பக்கலிற் சேர்த்தல் நலமாகும். அதனால், அவர் வென்றவராயினும் ஆகுக. நமக்கு வசையன்று; இசையே. இது செய்ய எண்ணமில்லை யாயின், நம் படைகளெல்லாவற்றையும ஒருங்கு சேர்த்துக் கொண்டு சென்று, ஒரே நாளில் அம்மானவரையும் வானரரையும் கொன்று, பகை தவிர்ந்து இன்புறுதல் தக்கது" என்றான். இராவணன், "எல்லாப் படைகளுடனும் சென்று வென்று வருதலே நன்று" என்று ஒருப்பட்டான். அப்பொழுது, இந்திரஜித்து மறுத்து, "இது நன்று நன்று! தேவரையும் யாவரையும் வென்று மூவுலகும் கைக்கொண்ட தேவரீர், மானிடரையும் வானரரையும் வெல்லுதல் வேண்டி, எல்லாப் படைகளுடனும் செல்லுதல் ஒவ்வாது; யான் ஒருவனே சென்று இமைப்பளவில் அவர்களை வென்று இன்னே வருவல்," என்று தன் வீரம் தோன்ற விளம்பினான். அது கேட்டு விபீடணன் அவனை விலக்கி, "சீதையை ஸ்ரீராமரிடம் விட்டுவிடுதலே நலம்," என்று பலவாறு பகர்ந்தான். இராவணன் அவ்வுரைகளை மனங் கொள்ளாது, அவனை வெறுத்துக் கூறினான். அதனால் விபீடணன் ஸ்ரீராமரிடம் அடைக்கலம் புகுந்தான். கும்பகருணன் வழக்கம்போல் உறங்குவானாயினான்.

பின்னர், ஸ்ரீராமர் வானரப்படைகளைத் துணைக்கொண்டு கடலில் அணைகட்டி, இலங்கையை யணுகினார். அதனை யறிந்த இராவணன், தன் நகரின் நாற்புறத்தும் காவற்படைகளை நிறுவி, சில படைகளுடன் தான் போருக்குச் சென்று, ஸ்ரீராமரது போர்த்திறனை அறிந்து மீண்டான். மீண்டவன் தன் மந்திரியாகிய மகோதரன் கூறியவாறு, கும்பகருணனைப் போருக்கனுப்ப எண்ணி, அவனை யெழுப்பி வருமாறு ஏவலர்

நால்வரை விடுத்தான். ஏவுலர் விரைந்து சென்று, கும்பகருணன் கோயிலை யடைந்து அவனை எழுப்பினர்; அவன் சிறிதும் உணராதது கண்டு, மனம் நொந்து, இராவணனைக் குறுகி வணங்கி, அவன் துயிலுணராமையை அறிவித்தனர்.

உடனே இராவணன், மல்லர் பலரை ஏவிக் கும்பகருணனைத் துயிலுணர்த்துமாறு பணித்தான். அவ்வளவில் மல்லர், அவன் கோயிலுட் புகுந்து, அவனை நெடுநேரம் துயிலுணர்த்தினர்; பின்னர் கும்பகருணன் துயிலுணர்ந்து எழுந்து, உலகை யளக்க நிமிர்ந்த திருமால்போல் நிமிர்ந்து நின்றான். உடனே, பல சகடங்களில் கொணர்ந்திருந்த உணவினையும், பல குடங்களில் நிறைந்திருந்த நறவினையும் உண்டு சிறிது பசியாறினான்: பின்னர், இடியேறு அஞ்சும்படி ஆரவாரித்தான்.

அப்பொழுது பணியாளர் அவனைப் பணிந்து, "நும் அண்ணலார் நும்மைக் காண விரும்பினார்" என்றனர். எனலும், அவன கடிது சென்று இராவணன் கோயிலுட் புகுந்து, அவனடிகளில் வீழ்ந்து வணங்கினான். தன்னை வணங்கிய இளவலை இராவணன் எடுத்து, மார்புறத் தழுவித் தன்னுடனிருத்தி, ஊனும் தேனும் ஊட்டினான்; நுரை போன்ற வெண் துகிலை உடுத்தினான்; பல அருங்கலன்களைப் பூட்டினான்; நறிய சாந்தைச் சேர்த்தினான்; கவசத்தைக் கட்டினான்; தம்பியின் தோற்றப் பொலிவை நோக்கினான்.

கும்பகருணன் அண்ணனை நோக்கி, "தாம் இவ்வாறு செய்வது ஏன்? அதனை அறிவித்தருள்க" என்று வேண்டினான். இராவணன், "மானவரும் வானரரும் நமது புறநகரடைந்தனர். நீ சென்று அவர்களைக் கொன்று வருதி" என்றான். உடனே கும்பகருணன்,

"ஆனதோ வெஞ்சமர்? அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்த தில்லையோ!
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ! புகுந்ததோ பொன்றுங் காலமே!

சீதையை இராமனிடம் விட்டுவிடும் என்று முன்னரே சொன்னேனே; இன்னமும் அவளை விட்டனிரல்லிரோ! ஆ! புலத்தியன் மரபு அழிந்ததே! அந்தோ, நும் பெருமையை நீரே கெடுத்துக்கொண்டனிரே! அறமே துணையாக நன்னெறியில் நடப்பவரை மறமே வலியாகப் புன்னெறியில் நடப்பவராகிய நாம் எங்ஙனம் வெல்லுதும்? இவ்வுலகம் அனைத்தையும்

கல்லுதல் இயலுமாயினும், இராமனை வெல்லுதல் இயலாதே: கடலைக் கடந்து, நமது கடிநகர் புகுந்து, செயற்கருஞ் செயலைச் செய்த வானரத்தைப் போன்ற எண்ணிறந்த வானரங்களை எளிமையாகக் கருதுதல் தகுமோ! நாம் உய்ய வேண்டுமாயின் 'சானகியை இராமன் பக்கலில் விட்டுவிட்டு, அவர்களோடு அளவளாவுதல் வேண்டும்; இன்றேல் நமது படையெல்லா வற்றையும் ஒருங்கு சேர்த்துச் சென்று, போர் புரிந்து, அவரை யழித்தல் வேண்டும். அவ்வாறன்றி, ஒவ்வொருவரையும் தமியராக அமருக்கு அனுப்புதலால் ஆவதில்லை" என்றான்.

கும்பகருணன் கூறியவற்றைக்கேட்ட இராவணன், "யான் உன்னை வருவித்தது ஆலோசனை கூறுதற்கன்று; சரி, நீ ஊனும் தேனும் உண்டனையன்றே; உறங்குதற்குச் செல்; உன் வீரமே வீரம்! மானிடச் சிறுவரையும் வானரங்களையும் கும்பிட்டு உயிர்வாழ்தல் உன் தம்பிக்கும் உனக்குமே தக்கது; நீயும் அவனோடு போதி. இதோ, யான் செருவிற்குச் செல்கின்றேன்" என்று முனிந்து மொழிந்து, பணியாளரை நோக்கி, "என் படைகளை இன்னே தம்மின்" என்றான்.

அண்ணன் அமருக்கு எழக்கண்ட கும்பகருணன், அவனை வணங்கி, "ஐயனே, அடியேன் விண்ணப்பம் செய்வது ஒன்றுளது. அதனை முனியாது ஏற்றருளல் வேண்டும். யான் இன்னே செருக்களம் செல்கின்றேன். விதி என்னைப் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது. அதற்கு எவர்தாம் யாது செய்வர்? யான் மீண்டு ஈண்டு வாரேன். யான் மாய்ந்தபின்னராயினும், வைதேகியைச் சிறைவிடுத்து வாழ்ந்திரும். மானிடர் என்னைக் கொன்று விடுவாராயின், நும்மைக் கொல்லுதலும் திண்ணம். ஆதலின், செய்யத்தக்கதை எண்ணிச் செய்யும். அன்றியும்,

'இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளஎனின் பொறுத்தி! கொற்றவ,
அற்றதால் முகத்தினில் விழித்தல்; ஆரிய,
பெற்றனென் விடை' எனப் பெயர்ந்து போயினான்.

இவ்வாறு மணிமொழி கூறி அகலுந் துணைவனைக் காண்டலும், இராவணனுக்குக் கண்கள் கலுழ்ந்தன; கண்ணீர் ததும்பியது. கண்டோர் கரைந்தனர்; 'அந்தோ!' என இரங்கினர்; ஏங்கினர். கும்பகருணன், படைகள் புடைசூழத் தேர் மேல் ஏறினான்; செருக்களம் நோக்கிச் சென்றான்.

செருக்களம் நோக்கிச் சினந்து செல்கின்ற கும்பகருணனை இராமர் நோக்கினர்; உடனே விபீடணனைக் கூவி, "அன்பனே, மால்வரை கால்கொடு நடந்து வருதலேபோல், அங்கே வருகின்றவன் யாவன்? இராவணனே வேறு பேருருக்கொண்டு வருகின்றானோ!" என்று வினவினர். விபீடணன் இராமரை இறைஞ்சி, "அண்ணலே, அங்கே வருகின்றவன் இராவணனுக்குப் பின்னவன்; அடியேனுக்கு முன்னவன்; கும்பகருணன் என்னும் பெயரினன்; ஓர் ஊழிக்காலமெல்லாம் ஒருநாளேபோல் உறங்குபவன்; இந்திரனோடு, பொருதகாலத்தில், பெரிய களிறு ஒன்றினை எளிதிற்பற்றிச் சுழற்றியவன்; கண்ணுதற் கடவுள் அருளிய சூலப்படையை யுடையவன்; இவன் இதுகாறும் இரவும் பகலும் உறங்கிக் கிடந்ததனால் இவ்வுலகம் உய்ந்தது. இவன், அண்ணனுக்கு அறவுரை பலவும் கூறினன். அவன் அவற்றை மறுத்தும், மீண்டும் ஆவனகூறி அறிவுறுத்தினன். அவ்வறிவுரைகளை அவன் அகங்கொள்ளாமையின், அவன் விரும்பியவாறே நம்மோடு அமர் செய்தற்கு அடைந்திருக்கிறான்" என்று பலவும் பகர்ந்தான்.

விபீடணனது மெய்ம்மொழியைக் கேட்ட சுக்ரீவன் இராமரை வணங்கி, "கும்பகருணனைக் கொல்லுதலில் பயனில்லை; அவன் நம் பக்கல் வருவானாயின் சேர்த்துக்கொள்ளுதல் செவ்விது; அவ்வாறாயின், விபீடணன் மனமும் மகிழ்வுறும்" என்றான். அதனைக் கேட்ட ரகுவீரர், "அது நன்று". என, உடனே விபீடணன், "ஆயின், அடியேன் இன்னே சென்று அவனுக்கு நல்லுரை நவின்று உடன்கொண்டு வருகின்றேன்," என்று விடைபெற்று அகன்றான்.

விபீடணன் தன்பால் வருதலை யறிந்து கும்பகருணன் மகிழ்வுற அவனும் அணுகி அன்புடன் அடிவணங்கினன். அடியில் வீழ்ந்த இளவலை எடுத்து மார்புறத் தழுவி, "அன்புடைத் தம்பி, நீ ஸ்ரீராமரை அடைக்கலம் புகுந்ததும் அபயம் பெற்றதும் கேட்டு, களிப்பென்னுங் கடலுட் படிந்திருந்தேன்; புலத்தியன் மரபு நின்னால் பொலிவுறும் என்று மகிழ்ந்தேன்; நீ அவர் பக்கலின்று இங்கு வந்ததன் காரணம் யாது? யாங்களனைவரும் மடிந்துபடுதல் திண்ணம், எங்களுக்கெல்லாம் நீயே எள்ளுந் தண்ணீரும் இறைத்துக் கரையேற்றுவாய் என்று எண்ணினேன்; நீயும் எங்களோடு சேர்ந்துவிட்டால், எள்ளும் நீரும் இறைப்பவர் யாவருளர்? அமிர்தம்

உண்ணுபவர் நஞ்சு உண்பதுபோல, ஸ்ரீராமரைச் சார்ந்து நல்வாழ்வு பெற்ற நீ, இங்கே வந்தது எங்களோடு இறந்துபடு தற்கோ! பிறர்மனை விரும்புந் தீயவனோடு சேர்ந்த எம்மை, உறவினர் என்று உளங்கொள்ளலாமோ? இன்னும் உனக்கு அரக்கர்தன்மை நீங்கிற்றில்லை போலும்! நீ இப்போது இங்கு வருதல் தகாது: யாம் அனைவரும் இறந்துபட்ட பின்பு, இராம ருடன் கூடி இலங்கைக்கு வா; வந்து முடிசூடி அரசு செய்: இப்பொழுதே இராமர்பால் ஏகு," என்று இன்மொழிபுகன்றான்.

அண்ணன் அன்புடன் கூறியவற்றைக் கேட்ட விபீடணன் வணங்கி, "ஐய, யான் நுமக்கு விண்ணப்பம் செய்யவேண்டு வது ஒன்று உளது. அறத்தின் உருவாய் விளங்கும் ஸ்ரீராம பிரானை நீருஞ் சரணடைந்து உய்ய வேண்டும்; பாவியாகிய நாயேனுக்கும் அருள் புரிந்த வள்ளல் நுமக்கு அருள்புரிதலில் ஐயமின்று. இராமபிரான் அடியேனுக்கு நல்கியருளிய இலங்கை யரசினை யான் நுமக்குத் தந்து, நுமது ஏவலின்படியே நடப் பேன். தேவரீர், இளைஞனாகிய அடியேனது மனத்துயரைப் போக்கி, வாழ்வு பெறல் வேண்டும். நீர் இனி இராவணனிடத் திற்குப் போதல் தகாது; ஆங்குப் போகாது அமர் புரிவீராயின், ஆருயிர் கெடுதல் திண்ணம். தாமோ அறநூல்களைக் கற்ற அறிஞர்; தமக்கு நாயேன் கூறுதல் யாதுளது? தீத்தொழில் புரிபவர் தாயாராயினும் தந்தையராயினும் அவர்பால் அன்பு செலுத்துதல் அறமாமோ? ஒருவன் தீங்கிழைப்பானாயின், அவ னைச் சார்ந்த நன்னெறியாளரும் அவனுக்காக ஆருயிர் விடுதல் அழகிதோ? உறவினராயினும் மறவினை புரிவோரை அழித்தல் முறையேயாகும். நமது உடம்பில் தோன்றும் பருவினைக் கருவியாலறுத்துச் சுட்டுத் துயர் தீர்கின்றனரன்றோ? அது போல, நம்மோடு உடன்பிறந்தானாயினும், அவனால் துன்ப முண்டாகுமாயின், அவனை நீத்தல் அவமாகாது. அவனோ தாம் கூறும் நல்லுரைகளை உள்ளங்கொள்கின்றிலன். அப் பாவியின் பொருட்டு அநியாயமாக உயிர்விடுதல் அறமாமோ? தேவ தேவராகிய ஸ்ரீராமரால் தாம் இலங்கையரசு எய்தினால், எவராலும் அழிக்க இயலாது. அதனால் பெருமையேயன்றிச் சிறுமை யுண்டாகாது. தேவர் முனிவர் முதலாக யாவரும் நமக்கு அருள் செய்வர். நமக்குப் பகைவரான வானவர்களே நண்பின ராகுங்கால், வேறு யாவர் பகைவர்? ஒருவரும் இலர். ஆதலின், நீர் எனதுவேண்டுகோளுக்கு இணங்கி இராமரிடத்து

இன்னே வரல் வேண்டும். அவர் தாமே நும்மிடத்து அருள் கூர்ந்து, என்னை அனுப்பினர். இதனையுளங்கொண்டு என்னேடு வாரும்" என்று இசைத்து இணையடிகளில் இறைஞ்சினன்.

தன் பாதங்களில் விழுந்து புலம்பும் விபீடணனைக் கும்பகருணன் எடுத்து இன்புறத் தழுவி, அன்புறக் கூறுவான்: "அன்பு மிக்க தம்பி, நீயோ நான்முகன் நல்கிய வரங்களால் நன்னெறியில் ஒழுகுகின்ருய்; ஆதலின், நீ போய் இராம பிரானை யடைந்தது நேர்மையே. யானே புலைத்தொழில் புரிவேன்; ஆதலின், இன்னுயிரிழத்தலே ஏற்புடையது. நம் அண்ணல் தீத்தொழிலில் மனங்கொண்டால், அதனை மாற்றுதல் நமது கடமை. அஃது இயலாதாயின், நாம் அவருக்குமுன் இறந்துபடுதலே சிறந்தது. அதுவே செஞ்சோற்றுக்கடனும் ஆகும். அவ்வாறன்றி, யான் நின்னேடு அங்கு வருவேனுயின், செய்ந்நன்றி கொன்றவனுவேன்.

"அமரரை வென்று அரும்புகழ் படைத்த அண்ணலார், துணைவரின்றித் தமியராய்ச் சாகுதல் தகுமோ? என் ஐயனுக்குப் பகைவ்ராயிருக்கும் அவர்பால் சரணம்புக்கு உயிர்வாழ்தலினும் இழிவு வேறு யாதுளது? யான் அவ்வாருன இழி தொழில் புரியேன்.

'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்.'

"யான் இராம இலக்குவரையும், அநுமன், அங்கதன், சுக்கிரீவன் முதலாயினேரையும் நொடியில் மடித்து, வெற்றி பெறுவேன், என் முன் எதிர்ப்போர் எவரேயாயினும், அவர் இரவிமுன் பனியேபோல் விரைவில்கெடுவர். அன்றியும், ஆகுங் காலத்தில் ஆதலும், போகுங்காலத்திற் போதலும் இயற்கை. அவை ஒருவர் தடுப்பினும் அடுக்காமல் அகலா. ஆதலின், நீ என்னைக் குறித்து இரங்குதல் வேண்டா; இராமரிடம் இப்பொழுதே ஏகு: இங்கு நின்று கவலாதே. யாங்கள் நரகில் அழுந்தாவாறு எங்களுக்கு எள்ளும் நீரும் இறை; அதுவே நீ எங்கட்குச் செய்யவேண்டுவது. நீ அகத்துயர் விடுத்து, அவர் பால் அடைந்து உய்தி."

இவ்வாறு தன் மனநிலை கூறிய கும்பகருணன், மீட்டும் இளவலையெடுத்து மார்புறத்தழுவி, அவனைநோக்கி, "இன்ருேடு நம் உடன்பிறப்பு ஒழிந்தது", என்று, கண்ணீர் வடியக் கரைந்தான். அதனைக் கேட்ட விபீடணன் அருந்துயர் மேலிட்டு

அவனடிகளில் வீழ்ந்து வணங்கி, உடலொடுங்கி, உரையொடுங்கி, அவன்பால் விடைபெற்று மீண்டான். மீண்டு இராமரைச் சார்ந்து, கும்பகருணன் மனநிலை கூறி மாழ்கினன்.

பின்னர், கும்பகருணனுக்கும் இராமருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. கும்பகருணன் கண்டோர் வெருவுமாறு கடும்போர் புரிந்து, பல வானரங்களை மாய்த்துத் தன் சோற்றுக்கடனையாற்றி, முடிவில் இராமனாற் கொல்லப்பட்டு வீரசொர்க்கத்து விளங்கினன். அவனது அருஞ் செயலும் பெருங் குணமும் என்றும் அழியாது நிலவுதலாயின.

5. அச்சுவித்தையின் வரலாறு

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள்

கல்வியைப் பரப்புவதற்குரிய சாதனங்களில் அச்சுப் புத்தகங்கள் மிகச் சிறந்தன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளிவருகின்றன. அவை விரித்துணர்த்தும் பொருள்களும் பல வேறு வகைப்பட்டன. அவை விரைந்து பரந்து சென்று தம் நோக்கத்தை நிறைவேற்ற முயல்வதும், நாடு, நகரம், கிராமம், குக்கிராமம் முதலிய எல்லாப் பிரதேசங்களிலுமாம். சிறந்த நூல்கள், தாம் தோன்றியவுடன் மொழி பெயர்க்கப்பெற்று, பல அந்நிய தேசங்களிலுஞ் சென்றுலவுகின்றன. இக்காலத்தில் ஒரே நூலின் பிரதிகள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் வெளிவருவதனாலே காலமென்னும் காலன் வாயினையும் தப்பிநின்று மக்களுக்கு நிலைத்த பயனுதவத்தக்க வலிமையினை அடைகின்றன.

இங்ஙனம் காலதேசாதி நியதியைக் கூடியவரை வெற்றி கொண்டு பொதுக்கல்வியை நாடெங்கும் ஆட்சிபுரியச்செய்வது மாத்திரமேயன்றி, அறிவென்னும் தெய்வச் சுடரொளியை மேன்மேலும் பிரகாசங்கொள்ளும்படி செய்து உலகெங்கும் அதன் தேசோமயமாக்குதற்கும் அச்சுப் புத்தகங்களே சிறந்த கருவியாய் உள்ளன. நமது மூதாதையர் கனவிலும் நினைத்திராத பிரகிருதி சாஸ்திரப் பேருண்மைகளையெல்லாம் மிக எளிதிற் சாதாரண மக்களும் அப்போதைக் கப்போது அறிந்து

கொள்ளுதற்குப் புத்தகங்கள் பயன்படுகின்றன. நூதன நூதனமாய் நிருமிக்கப்படும் அற்புத யந்திர விசேடங்களை யெல்லாம் அனைவரும் உடனுடன் அறிந்து பயன்படுத்திக்கொள்ளும் சௌகரியங்கள் புத்தகங்களால் வாய்த்திருக்கின்றன. ஏகதேசத்தில் ஒருவரிருவருக்கு உரிமையாயிருக்கும் அறிவுச் செல்வத்தை அனைவரும் பகிர்ந்தனுபவிக்கும்படி புத்தகங்கள் செய்கின்றன.

இதன் மேலும், கல்வி யறிவால் உண்டாகும் நிலைத்த இன்பத்தை நாம் நுகரும்படி செய்வனவும் புத்தகங்களேயாம். எவ்வகை நிலையிலுள்ளார்க்கும் அறிவினால் விளையும் இன்பம் போற்றத் தகுவதாகவேயுள்ளது. இந்திரிய நுகர்ச்சி எத்துணையின்றியமையாததோ அத்துணையாக அறிவு நுகர்ச்சியும் மக்கட்கு இன்றியமையாததே. கல்வி யறிவில்லாது கேவலம் மிருகப்பிராயமா யிருப்போரும் இனிய கதைகளை வாசித்துக் கேட்டவளவில் அதன் சுவையிலே லயித்து நின்று பரவசமெய்தியின்புற்றிருப்பர். அவர்களுக்குச் சிறிதளவேனும் கல்வியறிவிருப்பின், அறிவு நுகர்ச்சியை எத்துணையளவாகப் போற்றுவரென்பது கூறவும் வேண்டுமோ?

ஆகவே, அச்சுப் புத்தகங்கள் நமது வாழ்க்கை யின்பத்திற்குக் காரணமாய், உயிரோடு உயிராயும், அறிவோடு அறிவாயும், உணர்வோடு உணர்வாயும் ஒன்றிக் கலந்து விட்டன. அவைகளின்றி நாம் எவ்வாறு உயிர் வாழ்வது என்று நினைக்கவும் இயலவில்லை.

இவ்வண்ணம் மக்கள் வாழுமுலகை விண்ணுலகு என்றெண்ணும்படியாக்கி அவர்களை அறிவின்பப் பெருவாரியிலே திளைக்கும்படி செய்கின்ற புத்தகங்கள் அச்சில் இயன்று வெளிவருமுறையைக் கண்டுபிடித்த பேருபகாரி இன்னாரென நாம் தெரிந்துகொள்ளுதல் அவசியம். வேதகாலத்திலேயே உருவங்கள் பொறித்துள்ள நாணயங்கள் இருந்தனவென்று அறிகின்றோம். (D. R. Bhandarkar's Lectures on Ancient Indian Numismatics, 68-69). எனவே இங்கிலாந்து முதலிய மேலைத் தேசங்களில்நாகரிகம் என்ற மணங்கூட வீசியறியாத பண்டைக்காலத்திலேயே, கிறிஸ்துவப்தத்திற்கு மிக மிக முன்பு தொட்டே, நமது பாரத தேசத்தில் நாணயம் முதலியவற்றில் உருவங்கள் முதலிய பொறிப்பதற்கு ஏற்ற அச்சுக் கருவிகள் இருந்தன. அக்கருவிகளை மேன்மேலும் நயம்பெற அமைத்துப் புத்தகம்

அச்சிடும் முறையை நம் முன்னோர்கள் தெரிந்துகொண்டார்க ளெனக் கூறமுடியவில்லை. கிறிஸ்துவப்தம் ஆருவது நூற்ருண்டில் சீன தேசத்தில் ஒரு வகையான அச்சுவேலை நடைபெற்று வந்தது. அத்தேசத்தில் மரப் பலகையிலே ஒவ்வொரு பக்கத்திற்கும் உரிய எழுத்துக்கள் முழுவதும் செதுக்கப் பெற்றிருந்தன. இதனுல் ஒவ்வோர் அச்சுப்பலகையும் புத்தகத்தின் ஒரு பக்கத்திற்கு மட்டுமே யுதவும்; பிறிதொன்றற்கு உதவமாட்டாது. ஆகவே புத்தகங்களைத் தற்காலத்திற் செய்வதுபோல் அச்சியற்ற முடியவில்லை. இப்போது ஒவ்வோரெழுத்தும் மிகப் பலவாய்த் தனித் தனியே வார்க்கப்படுகிறது. ஒரு பக்கம் அல்லது 'பாரம்' முழுமையும் அச்சுக்கோத்து அதனை அச்சியற்றிய பின்னர், பழையபடியும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக் கோத்துப் பயன்படுத்தலாம். இவ்வாறே மேன் மேலும் செய்துகொள்ளலாம். தனித் தனியாக எழுத்துக்கள் வார்க்கப்படுதலின் பயன் இதுவேயாகும்; இதற்குத் தக்கபடி யமைந்த எழுத்துக்கள் 'சலனவச்சு' (Movable type) என்று கூறப்படும்.

இவ்வகையான 'சலனவச்சு' **ஜான் கூடன்பேர்க்** என்னும் ஜெர்மனியரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் கி.பி. 1400-இல் ஜெர்மனி தேசத்தில், ரயின் நதிக்கரையிலுள்ள மேயென்ஸ் நகரத்தில் பிறந்தவர். அந்நகரத்தில் ஏற்பட்டிருந்த உட்குழப்பத்திஞல், இவரும் இவர் கட்சியாரும் நகருக்கு வெளியே பல முறை துரத்தப்பட்டனர். முடிவில் இவர் குடும்பச் சொத்தை அரசாங்கத்தினர் அபகரித்துக்கொண்டனர். இதன்பின் இவர் தமது நகருக்குத் திரும்பும் கருத்தை அறவே யொழித்துவிட்டு 'ஸ்ட்ராஸ்பெர்க்' என்ற நகரில் வசித்துவந்தார். அந் நகரத்து மக்களின் அன்பும் நன்மதிப்பும் பெற்று அங்கே வாழ்ந்துவரும் நாளில் அவர்கள் உதவியால் இவருடைய ஆஸ்தி இவருக்குத் திரும்பக் கிடைத்தது. இப்பொருளைப் பல விடங்களுக்குஞ் சென்று அழிவில்லாத கல்விப் பொருளை ஈட்டுவதற்குப் பயன் படுத்தி வந்தனர்.

ஹாலண்டு தேசத்தில் ஹார்லெம் நகரில் இவர் இருக்கும் பொழுது, ஒருநாள் இவர் நண்பராகிய லாரென்ஸ் கோஸ்டெர் என்பவர் ஒரு மரப்பலகையிற் செதுக்கப்பட்டிருந்த லத்தீன் இலக்கணத்தை இவருக்குக் காண்பித்தார். அன்று முதல் அச்சு வித்தையைக் கண்டுபிடிக்கும் பெருங்காதலொன்று இவர் மனத்

தில் வேரூன்றிவிட்டது. ஆண் மக்களுக்கு இயற்கையாயுள்ள பிறிதொரு பெருங்காதலும் இவரது உள்ளத்தை இப்போது கொள்ளை கொண்டது. நகர்ப்புறத்தேயுள்ள ஒரு சிங்காரவனத்திற்குச் சென்று அங்கே தம் காதலியை நினைத்துப் பாடுவதும், அவர் பெயரையும் தம்பெயரையும் மரப்பட்டைகளிற் பலமுறை யெழுதிப் பார்த்து மகிழ்வதும் இவரது வழக்கமாயிருந்தன. ஒரு முறை அப்பெயர்களை ஈரமான இளம்பட்டையிற் செதுக்கி, அப்பட்டையைத் தம்மிடத்திருந்த தோற்கடுதாசியிற் சுற்றி வைத்திருந்தார். மறுநாள் தம் காதலியிடத்தில் அதனைச் சமர்ப்பிக்க வெண்ணிப் பிரித்துப் பார்த்தபோது பசும்பட்டையிலுள்ள எழுத்துக்கள் தோற்கடுதாசியில் தெளிவாய்ப் படிந்திருத்தலைக் கண்டனர். இவருக்குண்டான மகிழ்ச்சி அளவிடக்கூடாததாயிருந்தது. தமது இயற்கைக் காதல் செயற்கைக் காதற்குரிய அரும்பொருளை யடைதற்கு உதவியதென்று நினைக்கும்போதெல்லாம் தமது ஒருயிரிற் பன்னூறுயிர்கள் புகுந்து இயக்குவதுபோல் ஊக்கக்கொண்டனர். பெரிய பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கி, மரப்பட்டை ரசத்திற்குப் பதிலாகக் கறுப்பு மையை அப்பலகையின் மீது தடவி அச்சியற்ற முயன்றனர். இரவும் பகலும் இத்தொழிலிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து எத்தனையோ முறைகளைப் பரியாலோசனை செய்வதில் பல வருடங்கள் சென்றன. முடிவில் ஒவ்வோரெழுத்தையும் தனித்தனியே சிறு மரத்துண்டிற் செதுக்கி, வேண்டியபடி கோத்து அச்சியற்றுங் கருத்து இவர் மனத்தே திடீரென்று உதித்தது. இக் கருத்துத் தோன்றிய காலமுதற்கொண்டு, தனித்தனியே எழுத்துக்களைத் திருந்திய வடிவிற் செதுக்குவதற்கு வெகுகாலம் முயன்று அதிலே தக்க பயிற்சி பெற்றனர்.

பின்னர் ஹார்லெம் நகரத்தை விட்டு ஸ்விட்ஸெர்லாந்து சென்று மரத்துண்டில் அச்சுகள் செய்து வாக்கிய முறைப்படி அவற்றை நூல்களிற் கோத்து வரிவரியா யமைத்து அச்சுக்கள் விழுந்து விடாதபடி ஓரங்களில் முடிப்பிட்டுக் கட்டி ஒரு பக்க முழுவதும் அச்சடித்துப் பார்த்தனர். தாம் எதிர்பார்ப்பதற்கு மேலாகவே இது திருப்திகரமாயிருந்தது. இங்ஙனமே பலகாலும் முயன்று அப்பியசித்து வந்தனர். தாம் மேற்கொண்டுள்ள கருத்து முற்றவேண்டுமாயின், தொழிற்சாலையொன்று அவசியம் ஏற்படுத்தவேண்டுமென்று எண்ணினர். தொழிற்சாலை இவரது அறிவாற்றலாலும் இடைவிடாத வுழைப்பினாலும் மட்டும்

தாபிக்கக் கூடியதா? அதற்குப் பொருள் வேண்டுமன்றே? பொருள் பெறும்பொருட்டுப் பல தனவந்தர்களிடஞ் சென்றனர். அவர்களிடத்தே இவர் பெற்றவை நகைப்பும் இகழ்ச்சியும் இரக்கமுமேயன்றி வேறில்லை. இவருடைய 'ஆகாயக் கோட்டை'யெல்லாம் பொருளின்மையால் தொலைந்துவிடும் போலிருந்தது. ஆனால் அச்சியற்றும் நுண்மதியும் பேருழைப்புமுடையவர் அத்தனை யெளிதில் தோல்வியுறுவரா? சில தொழிலாளிகளோடு கூடி வைரம் முதலியன செதுக்கி ஆபரணஞ்செய்யுஞ் சாலையொன்று நிறுவிப் பகல் முழுவதும் அவ்வேலையையே செய்து, இரவில் தமது ஆத்மார்த்தமான வேலையைச் செய்து வந்தனர். அச்சியற்றுந்தொழில் முழுமையுந் தாமாகவே செய்து முடிப்பது அசாத்தியமென்று தோன்றியபடியால் தமது தொழிலின் மர்மத்தைச் சிறிது சிறிதாகத் தம் கூட்டாளிகளுக்குக் கூற நேர்ந்தது. இவர் மேற்கொண்டுள்ள தொழிலின் அருமை பெருமைகளை அவர்கள் உடனே நன்குணர்ந்தனர். எனினும், அதனால் ஏற்படும் புகழும் பொருளும் இவரடையாதபடி தம்தாகவே செய்து கொள்ளவேண்டுமென்ற கருத்து அவர்கள் மனத்திலெழுந்தது. அச்சுத்தொழிற்குரிய இரகசியங்கள் அனைத்தையும் தாங்கள் கிரகித்துப் பொருளிலாபத்தைத் தாமே அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு, இவருடைய கூட்டுத் தொழிலாளர்கள் இவருக்குப் பொருள் முதலிய உதவி செய்ய முடியாதெனக் கூறினர். தமது பெருநோக்கம் நிறைவேறுந் தறுவாயில், உதவியை இழந்துவிட மனமின்றி அவர்களுடைய உட்கிடைக்கெல்லாம் ஒருவாறு இணங்கித் தம் வேலையில் முயன்றுவந்தனர். அச்சு வேலையிற் பொருள் வருவாய்மிகுதியாயுண்டாயிற்று. அவ்வூதியம் முழுமையும் கூட்டாளர்கள் தாமேயெடுத்துக்கொண்டது மாத்திரமன்றி, இவரைக் கேவலம் கூலியாளாகக் கருதி இழிவாக நடத்தத் தொடங்கினர். பின்னர். அச்சுவித்தை இவருக்குரியதன்றென்றும் அவ்வித்தையைக் கைக்கொண்டு அச்சுத் தொழிலியற்றும் உரிமை இவருக்குக் கிடையாதென்றும் வழக்குத் தொடுத்தனர். இறைவனருளால் இவ்விடையூறுகளெல்லாம் ஒருவாறு நீங்கின. தாம் முழு மனத்தோடும் காதலித்து வந்த அச்சு வித்தை இவரது உரிமைப் பொருளாகவே முடிந்தது. தமது தாய்நகரான மேயென்ஸுக்குத் திரும்பி வந்தனர். பிறிதொரு காதல் வெற்றியையும் கூடன்பெர்க் இப்பொழுது அடைந்தனர். துன்பமயமாகிய இவரது

வாழ்க்கையிலே சிறிது இன்பவொளியும் தோன்றலாயிற்று. நெடுங் காலமாகத் தாம் காதலித்து வந்த மாதரசியை இப்பொழுது மணந்து மகிழ்வுற்றனர். எனினும் தம்பதிகள் தமக்குரிய செல்வமாக அனுபவித்து வந்தது வறுமையே யன்றி வேறன்று. பொருட்செல்வம் போன்றே மக்கட் செல்வமும் இவர்கட்கு இல்லாததாயிற்று.

மேயென்ஸில் மீண்டும் குழப்பம் உண்டாயிற்று. மீண்டும் கூடன்பெர்க் வெளியேற நேர்ந்தது. ஸ்விட்ஸெர்லாந்துக்கு மறுமுறையுஞ் சென்று அச்சுயந்திரசாலை தாபித்து விவிலிய நூல் முதலியவற்றைப் பிரசுரஞ் செய்தனர். மீண்டும் இவருடைய வேலையாட்கள் இவரை மோசஞ்செய்து அலட்சியமாக நடத்த, மீண்டும் தமது தாய் நகருக்குத் திரும்பி வந்தனர். இத் துன்பங்களிலெல்லாம் இவருக்குத் துணையாய் நின்று மனம் சலிப்பின்றி உழைத்து வரும்படி தூண்டிக்கொண்டிருந்தவர் இவரது உத்தம பத்தினியாகிய ஆன்னெட் (Annette) அம்மாள் தான். தம் தாய்நகர் வந்ததும் ஃபூஸ்டு (Fust) ஷோபெர் (Schoffer) என்பவர்களுடன் சேர்ந்து கிறிஸ்துமத நூல்கள் பலவற்றை அச்சியற்றி வெளியிட்டனர். துரதிருஷ்டம் இவர் காலடி வைக்குமிடமெல்லாந் தொடர்ந்து கொண்டேயிருந்தது. அளவற்ற கஷ்ட நஷ்டங்கள் இவர்க்கு ஏற்பட்டன. பிரான்சு மன்னராகிய லூயி (Louis XI) என்பவர் இவரைச் சிறிது காலம் ஆதரித்து வந்தனர். அப்போது புதிய கூட்டாளிகள் சிலரைத் துணையாகக் கொண்டு இவர் தம் தொழிலில் முயன்று வந்தனர். இக்கூட்டாளிகளும் இவரை வஞ்சிக்க நினைத்து முடிவில் அந்நோக்கம் கைகூடா தொழிந்தார்கள். மீண்டும் தம் நகரக் குழப்பத்தினுல் இவரும் இவருடைய மனைவியாரும் வெளியே துரத்தப்பட்டு அகதிகளாய் யாதொரு புகலிடமுமின்றி அந்நிய நாடுகளில் அலைந்து திரிந்துகொண்டிருந்தனர். இக்காலத்தில் நாஸ்ஸோ (Nasso) என்ற நாட்டின் அதிபதியால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்து வந்து தமது அறுபத்தொன்பதாம் வயதில் மண்ணுலகிற் புகழ் நிறுவி விண்ணுல கடைந்தனர்.

இவர் இறந்த சில வருடங்களுக்குள்ளே ஐரோப்பாக்கண்டத்திற் பல நகரங்களிலும் அச்சுக்கூடங்கள் ஏற்படுத்தப்பெற்று அச்சு வித்தை பரவலாயிற்று. இங்கிலாந்தில் கி. பி. 1475-இல் காக்ஸ்டன் (Caxton) என்பவர் வெஸ்டுமினிஸ்டரில் முதன் முதலாக அச்சுக்கூடம் தாபித்தனர்.

6. தமிழர் கடலாட்சி

திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்

சுமார் நானூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால்தான் முதன்முதல் ஐரோப்பியர்கள் கடற்பிரயாணம் செய்து, இந்தியாவுக்கு வந்தார்கள். அதற்குமுன் பல்லாயிர வருஷங்களாக இந்திய வர்த்தகர்கள் கப்பல் ஏறிக் கடல்கடந்து சென்று வெளி நாடுகளில் வியாபாரம் செய்துவந்தார்கள். தெற்கு மகா சமுத்திரத்தையும், அரபிக் கடலையும் கடந்து மேற்கு ஆப்பிரிக்கா வரையிலும், கிழக்கே சீனம் வரையிலும் சென்று இந்திய வியாபாரிகள் தொழில் நடத்தி வந்தார்கள். இந்துமகா சமுத்திரத்திலுள்ள தீவுகளிலும், பசிபிக் மாகா சமுத்திரத்திலுள்ள தீவுகளிலும் ஹிநது சமயக் கோயில்கள் இன்றைக்கும் இருக்கின்றன. இந்தியப் பண்பாட்டின் வேறு சின்னங்களையும் அங்கேயெல்லாம் காணலாம். கடலுக்கு அப்பால் வெகு தூரத்திலுள்ள அந்தப் பிரதேசங்களுடன் புராதன இந்தியாவின் ஜனங்கள் நீடித்த போக்கு வரவு வைத்துக்கொண் டிருந்தார்கள் என்பதற்கு இந்தச் சின்னங்கள் அத்தாட்சி ஆகும்.

ஏசுநாதர் சகாப்தம் (பிறந்து) ஆயிரத்தைந்நூறு வருஷங்கள் கழிந்த பிறகுதான் ஐரோப்பாவில் கொலம்பஸ் என்பவர் பெருங்கடல் கடந்து செல்லும் முயற்சியில் முனைந்தார். அது வரையிலும் மேனாட்டு மாலுமிகள் எல்லோரும் கரையோரமாகவே கப்பல்களைச் செலுத்தி வந்தார்கள். நடுக்கடலுக்குப் போவதற்கு அவர்கள் அப்போது இன்னும் துணியவில்லை.

ஆனால் கிறிஸ்துசகாப்தத்திற்கு முன்னால் அதாவது இரண்டாயிர வருஷத்திற்கு முந்தியே ஹிந்துக்கள் கப்பல்களில் ஏறி மகா சமுத்திரங்களைத் தாண்டிச் சென்றார்கள். இந்த விவரங்களை எல்லாம் சில நாளைக்கு முன்னால் நமது கடற்படைத் தலைவர் W. E. பாரி ஒரு சமயத்தில் நன்கு எடுத்துக் காட்டிப் பேசியிருக்கிறார்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் அரபியர்கள் அரபிக்கடலைக் கடந்து எகிப்து தேசத்திற்கும் ரோமாபுரி சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளுக்கும் சென்று வியாபாரம் செய்து வந்தார்கள். இதை நிரூபிப்பதற்கு நம்முடைய பழைய

---

*வ. உ. சி. கப்பல் மிதக்கவிட்ட வமயம் ஆசிரியர் ஆற்றிய சொற்பொழிவு.

இலக்கியத்திலும் இந்தியச் சிற்பங்களிலும் அத்தாட்சிகளைக் காணலாம். கிரீஸ் கிரேக்க சரித்திரக்காரர்களும், ரோமாபுரி ஆசிரியர்களும் எழுதிய நூல்களில் இதைக்கண்டுகொள்ளலாம்.

மிகப் புராதன நாட்களிலேயே ஹிந்துக்கள் வங்காளக் குடாக்கடலையும், இந்து மகா சமுத்திரத்தையும் கப்பலில் கடந்து சென்று பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள தீவுகளில் குடியேறி வந்தார்கள். கிறிஸ்தவ சகாப்தம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ஹிந்துக்கள் மலேயா நாட்டுக்கும், சீன தேசத்திற்கும் இப்போது இந்தோனேஷியா என வழங்கும் சுமத்ரா, ஜாவா தீவுகளுக்கும் கப்பல் ஏறிச் சென்றிருக்கிறார்கள். மகத தேசத்து அரசர் சந்திரகுப்தன் முதலிய மௌரிய மன்னர்கள் 'கீழ்க்கடல்களின் அதிபதி' என்னும் பட்டத்தையும் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஐந்தாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாஹியான் என்னும் சீன யாத்திரிகர் தாம் இந்தியக் கப்பலில் ஒரு நீண்ட கடற்பிரயாணம் செய்ததைப் பற்றி எழுதிவைத்திருக்கிறார்கள். ஒரிஸாவிலிருந்து இலங்கைக்கும், இலங்கையிலிருந்து நிக்கோபார் தீவுகளுக்கும், அங்கிருந்து மலாக்கா வழியாகச் சீனாவுக்கும் இந்தியக் கப்பலில் அவர் பிரயாணம் செய்தார். இது ஆயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. அதே காலத்தில் தான் மலேயாவிலும், சுமத்ராவிலும், ஜாவாவிலும் இந்தியர்களின் ஆட்சி நிலைநாட்டப்பட்டிருந்தது. பிறகு ஆயிரவருஷகாலம் இந்துமகாசமுத்திரம் இந்துக்களின் ஆதிக்கத்தில் இருந்தது. அதற்குப் பிறகு அரபியர்களுடைய ஆதிக்கம் கடல்மேல் ஓங்கிற்று.

ஹிந்துக்கள் கடல் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் எந்த நாட்டுக் கப்பலும் தடையின்றிப் போக அனுமதி இருந்தது. கடற் கொள்ளைக்காரர்களை அடக்கிக் கடல் மார்க்கங்களில் பயமின்றிப் பயணம் செய்திருந்தார்கள். நமது முன்னோர்கள் தர்ம மார்க்கத்தில் பற்றுள்ளவர்கள். ஆகையால், கடல் மார்க்கத்தில் தனி ஆதிக்கம் கோரவில்லை. எல்லா தேசக் கப்பல்களும் கடற்பாதைகளில் சுதந்திரமாகவும், நிர்ப்பயமாகவும் போகக் கூடியனவா யிருந்தன. ஆனால் 1500-ஆம் வருஷத்தில் போர்ச்சுகல் நாட்டார் கடல் ஆதிக்கம் பெற்ற போது கடல் மார்க்கங்களுக்குத் தனி உரிமை ஸ்தாபிக்க முயன்றார்கள் ; பிறதேசக் கப்பல்களைத் தடைசெய்தனர். இவ்

விதம் போர்ச்சுகீசியர்கள் கடல் மார்க்கங்களில் ஏகபோக உரிமை கொண்டாடியதைக் கோழிக்கோடு மலையாளத்துத் தம்புரான்கள் தீவிரமாக எதிர்த்துப் போராடினர்.

அப்போது நடந்த மூன்று கடல் யுத்தங்களில் தம்புரான் தோல்வி யடைந்தபடியால், கடல் ஆதிக்கம் போர்ச்சுகீசியரின் கைக்கு மாறியது. இந்தச் சம்பவம் பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்தது. பிளாஸிச் சண்டையையும் கிளைவ் முதலியவர்கள் வெற்றிபெற்ற மற்றும் பல தரைச் சண்டைகளை யும் விட, 1503-லும் 1909-ஆம் வருஷத்திலும் நடந்த யுத்தங் களே அடுத்த நானூறு வருஷங்களுக்கு இந்தியாவின் விதியை நிர்ணயித்தனவென்று கடற்படை நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சிவாஜி மன்னரின் காலத்திலும் கடற்படை யுத்தம் நடந் தது. இதையெல்லாம் கவனித்தால், இந்திய மக்களுக்கு அலை கடல் தாண்டுதல் என்பது புதிய விஷயமன்று என்பதை அறிய லாம். இந்தக் காலத்தில் நமது செம்படவர்களின் வாழ்க்கை யைக் கவனித்துப் பாருங்கள்! எவ்வளவு சகஜமாக அவர்கள் கடலில் பாய்கிறார்கள். நம் நாட்டு மக்கள் இந்த விஷயத்தில் மேனாட்டு மக்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர் அல்லர் என்பது நிச்சயம். சமுத்திர ராஜனிடத்தில் மற்றைய தேசத் தாருக்குள்ள உறவும் பாத்தியதையும் நமக்கும் நிச்சயமாக உண்டு. நவீன மாலுமிக் கருவிகளை உபயோகித்துக் கப்பல் ஓட்டுவதிலும் நமது இளைஞர்கள் திறமையுடன் விளங்குவார் கள் என்று இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. எனவே, நமது அன்பிற்குரிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, சுப்பிர மணிய சிவா, சுப்பிரமணிய பாரதியார் இவர்களின் கனவுகள் நம்முடைய காலத்தில் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்களுடன் கொஞ்சம் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. சில நாட்கள் சேலத்தில் என் குடிசையிலும் தங்கியிருந்தார்கள். இன்று நாம் தொடங்கும் காரியத்திற்கு அந்த ஆத்மாவின் ஆசியைப் பெறு வோமாக. இன்று இந்தக் கப்பலுக்கு அவருடைய திருநாமம் தந்து ஓட்டப் போகிறோம். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, ஆனந்தக் கண்ணீர் ததும்ப. தம் பெரிய கண்களை அகல விரித்து இந்த விழாவையும் என்னையும் பார்த்துக்கொண்டிருப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது. இன்றைய நிகழ்ச்சி அவருக்குக் கொஞ்சம் வேடிக்கையாகவும் இருக்கும். காரல் மில்ஸ்,

பி. ஐ. எஸ். என். கம்பெனி. இவற்றின் ஒத்துழைப்புடனும் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடனும் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இந்தக் கப்பல் போக்குவரவை இன்று நான் ஆரம்பித்து வைக்கிறேன். ஹார்வி கம்பெனி, காரல்மில்ஸ் பஞ்சாலையைச் சேர்ந்தவர்களும், பி.ஐ.எஸ்.என் கம்பெனியை நடத்தியவர்களும் அந்த நாளில் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை ஒரு பயங்கர எதிரியாகக் கருதினார்கள். திரு. ஆண்ட்ரூ ஹார்வியும், திரு. சாப்மனும் ராஜத் துவேஷக் குற்றம் சாட்டினார்கள். பின் ஹே துரையைக் கொண்டு விசாரணை நடத்தி ஆயுள் பரியந்தம் இரட்டிப்புத் தீவாந்தர தண்டனை விதிக்கச்செய்தார்கள். அந்தத் தீர்ப்பைக் கண்டு இந்தியா முழுவதும் வருத்தமும், வியப்பும், மனக் கசப்பும் பரவின. தேசமெங்கும் ஆத்திரம் பொங்கியது. ஹைகோர்ட்டார் ஆயுள் தண்டனையை ஏதோ நியாயம் கண்டு ஆறு வருஷச் சிறைத் தண்டனையாகக் குறைத்தார்கள். பெரும் அநீதிக்குச் சிறிது பரிகாரம் ஏற்பட்டது. இந்தத் தூத்துக்குடி மகா ஜனங்களை "வந்தே மாதரம்" என்று கூப்பாடு போடச் செய்தாரென்று ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை பேரில் குற்றம். ஸ்ரீ சுப்பிரமணிய சிவா பேசிய கூட்டங்களில் பிரசன்னமாயிருந்து "இந்தியா சுயராஜ்யம் பெறவேண்டும்" என்று அவர் கூறியதைப் பூரணமாகச் சிதம்பரம் பிள்ளையும் ஒப்புக்கொண்டார் என்பது இன்னொரு பெருங்குற்றம். இந்தக் குற்றங்களுக்காகத் தான் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை தண்டனை அடைந்தார். இது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அவர்களைத் தண்டித்த பின் ஹேயை ஹைகோர்ட் நீதிபதியாக உயர்த்தவேண்டும் என்று ஒரு யோசனை ஏற்பட்டது. அதை அங்கீகரிக்க அப்போது இந்திய மந்திரியாக இருந்த லார்டு மார்லி மறுத்துவிட்டார். மார்லி தம்முடைய "ஞாபகங்கள்" என்ற புத்தகத்தில் இது விஷயமாக எழுதியிருப்பது படித்தால் ரஸமாக இருக்கும். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும், ஸ்ரீ சுப்பிரமணிய சிவாவும் ஆறு வருஷம் சிறைவாசம் அனுபவித்துவிட்டு வெளியேவந்தார்கள்.

நாற்பது வருஷங்களில் சக்கரம் ஒரு பெரிய சுற்றுச் சுற்றிவிட்டது. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை எதற்காகச் சிறை சென்று கஷ்டப்பட்டாரோ, அந்த நோக்கம் நிறைவேறி விட்டது. நாம் பூரண சுதந்தரம் பெற்றுவிட்டோம். ஹார்வி கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் இன்று நான் விருந்தாளியாகத் தங்கி இருக்கிறேன். பி. ஐ. எஸ். என். கம்பெனியார்

தங்களுடைய கப்பலை நிறுத்திக்கொண்டு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் பெயர் பூண்ட இந்தக் கப்பல் செல்வதற்கு இடமளித்திருக்கிறார்கள்.

தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இப்போது பரிகாரம் ஏற்பட்டுவிட்டது. கப்பலுக்குச் சிதம்பரம் பிள்ளை அவர்களின் பெயரை வைத்து நாமகரணம் செய்து ஆரம்பித்து வைக்கிறேன். வீரனை ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்களின் திருநாமத்தை இந்தக் கப்பலுக்குச் சூட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் கப்பல் பாரதக் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு கடலில் செல்லும்.

இந்தியக் கப்பல் தொழிலைப் புனர் நிர்மாணம் செய்யத் திறமையும் சிறந்த நிர்வாக அனுபவமுள்ள 'ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார்' ஏற்கெனவே எவ்வளவோ சேவைகள் செய்திருக்கிறார்கள். இன்னும் செய்து வருகிறார்கள்.

இந்தியா ஒரே நாடு. இந்தியாவின் பெருமையைப் பிரித்துப் பங்கிட முடியாது. எனினும், இந்தியக் கப்பற் போக்குவரவை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சி தூத்துக்குடியில்தான் முதன் முதலில் ஆரம்பித்தது. இந்த ஆரம்ப வைபவத்துக்குச் சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணியசிவா இவர்களின் பலிதானமே ஆரம்ப வேள்வியாக 1908-ஆம் வருஷத்தில் அமைந்தது. இதை எண்ணித் தமிழர்கள் பெருமிதம் கொள்ளலாம்.

சென்றுபோன காலத்திய மாற்சரியமும், அறியாமையும் துவேஷமும் மறந்து விடப்படும். சுதந்திர இந்தியா மகோன்னதமாக விளங்கும். இந்தக் கப்பலின் எல்லா மாலுமிகளுக்கும் இந்தக் கூட்டை நடத்தும் நிர்வாகிகளுக்கும் என் ஆசி கூறுகிறேன். திறமையுடன் இடைவிடாது தொழில் முறையில் உழைப்பதே உயர்தர தேசபக்தி என்பதைத் தங்களுடைய செயலால் இவர்கள் நிரூபித்துக் காட்டுவார்களாக.

7. எனது இலங்கைச் செலவு

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்

'இலங்கைச்செலவு' என்னும் தலைப்பைநோக்கியதும் சிலர் 'இலங்கைக்குச்சென்று திரும்பியதற்கு நேர்ந்த செலவுபோலும்' என்று நினைக்கலாம். ஈண்டுச் 'செலவு' என்னுஞ் சொல்லைப் பொருட்செலவென்னும் பொருளில் பெய்தேனில்லை. தரை-நீர்ச்-செலவு என்னும் பொருளில் அச்சொல்லைப் பெய்தேன்.

இந்நாளில் செலவு என்னுஞ் சொற்குப் பதிலாகப் பெரிதும் 'யாத்திரை' என்னுஞ் சொல்லே ஆட்சி பெற்றிருக்கிறது. பண்டைத் தமிழ் நூல்களில் செலவு என்னுஞ் சொல்லே ஆட்சி பெற்றிருத்தல் காணலாம். 'செங்கோன் தரைச் செலவு' என்று பெயர் தாங்கிய தமிழ் நூலுண்மையும் கவனிக்கற்பாலது.

* * *

நாங்கள் கப்பலினின்றும் இறங்கி, இலங்கைப் புகைவண்டியில் ஏறினோம். வழி நெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும், சூழலும், நிறையும், அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகிற் குழாங்கள் மூண்டெழுந்து படிப்படியே அசைந்தும் ஆடியும் ஓடியும் மலைமுகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகை போல் பொலியுங் காட்சியும்—அம் மலைகளின் உடல் புலனாகாவாறு பசும்பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் துதைந்துள்ள அழகும்-புலன்களை ஒன்றச் செய்கின்றன. மலையுச்சியினின்றும் தரைவரை, நிரை நிரையாகச் சரிந்தும் செறிந்தும் நிற்கும் தெங்கின்பெருக்கும், அவ்வாறே தெங்கைவிட்டுப் பிரியாது அணித்தே புடைசூழ்ந்து நிற்கும் கமுகின் உயர்வும், அவைகளுடன் நீக்கமின்றி வாழ்க்கைத் துணையெனச் சுற்றிச்சுற்றிப் பின்னிக் கிடக்கும் கான்பரந்த செடிகொடிகளின் ஈட்டமும், வானுலகேறப்பச்சைப்படாம்விரித்த படைகளெனத் திகழ்கின்றனவோ என்றும் ஐயுறலாம். புகைவண்டி அப்பசுமை நிலத்தில் பறந்தோடுவதை நோக்குழி, அது பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத் தோன்றுகிறது. பசுமைக் காட்சியில்லாத இடனும் உண்டோ? கண்ணுக்கும் மனத்துக்கும் இனிமையூட்டும் பசுமையின் பெற்றியை என்னென்றுரைப்பேன்!

புகைவண்டியின் விரைவில், இடையிடை யோடுஞ் சிற்றருவிகளின் தோற்றம், பசிய வானில் மின்னொளி தோன்றி மறைவதுபோலப் புலப்படுகிறது. பச்சைப் பசுங் கடலில் சிறு சிறு தீவுகள் நிலவுவதை மான கூரை வேய்ந்த சிறு சிறு குடில்கள் நிலவுகின்றன. அக் குடில்களின் நடுவண் ஆடவர் மகளிர் குழந்தைகள், காளை மயில் கன்றுகளென நிற்கின்றனர். அவ்வீட்டமும் இக் கூட்டமும் இயற்கையோடியைந்த இன்பமாகப் பொலிகின்றன. ஆங்காங்கே சிற்சில இடங்களில் தற்கால நாகரிகக் கட்டடங்களும் புலனாகின்றன. அவைகளைக் காணுந்தோறும் காணுந்தோறும் பொல்லா அரக்கர் குழுவைப் பார்ப்பது போன்ற நிகழ்ச்சி யுள்ளத்துருமற் போகாது.

கூரை வேய்ந்த வீடுகள் இயற்கையோ டியைந்து இன்பூட்டு வதுபோலப் பெரும் பெரும் மாடிகள் இயற்கையோ டியைந்து நிற்பினும் இன்பூட்டுவ தில்லை.

இந்நிலையில், வண்டி, குறித்த காலத்துக்கு இரண்டரை மணி நேரங் கடந்து, நிலையம் சேர்ந்தது. சேர்ந்ததும்,கொழும்பி லுள்ள 'இந்திய வாலிப சங்க' நேயர்கள், ஆண்டுப் போந்து, 'தென்னா டுடைய சிவனே போற்றி' என்று ஒருவர் முழங்க, மற்றவர், 'எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி' என்று எதி ரொலிபோல் முழங்க, எங்களை வரவேற்றார்கள். செயற்கை வெம்மையில் வீழ்ந்து வருந்திக்கொண்டிருந்த எனதுள்ளம் தமிழ்மறைமீது ஓடிற்று.'தென்னாட்டவர்க்குச் சிறுவனாக விளங்கு வோனே,எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்குகிறான்' என்று எண்ணி எண்ணி, அம்மறை அருளிய மாணிக்கவாசகனாரை உள்ளத்தால் போற்றிப் போந்தேன். எனது எளிய வாழ்வுக் கும் எனது மனத்துக்கும் இனியதாய், வெளியில் போந்ததும் கடற்காட்சி நல்க வல்லதாயுள்ள ஓர் இன்ப நிலயத்தில் வதியு மாறு அன்பர்கள் என்னையும் நண்பரையும் விடுத்தார்கள்.

கொழும்பிற் கணித்தாயுள்ள வெள்ளவத்தையில் நாங்கள் தங்கி யிருந்தோம். நாங்கள் சென்ற காலம் ஆடி வேல்விழாக் காலம். கதிர்வேற் பெருமான் வெள்ளித் தேர்மீது இவர்ந்து கொழும்பினின்றும் வெள்ளவத்தைக்கு எழுந்தருளி அடியவர்க் கருள் செய்கிறார்.

* * *

அவ் விழாவில் முருகப் பெருமானைப் போற்றாத குலத்தார் இல்லை.எல்லாச் சமயத்தாரும் சாதியாரும் காணிக்கை செலுத்தி நெற்றியில் திருநீறணிந்து செல்லுகின்றனர். 'முருகக்கடவுள் தமிழ்க் கடவுள்' என்பது அவ்விழாவில் நன்கு தெரிகிறது. பல சமயக்கொள்கை உடைய தமிழ் மக்கள் அனைவரும் முருகக் கடவுளை வழிபடுதல் கருதத்தக்கது. நமது தென்னாட்டில் வேறு மதம் புகுந்த தமிழ் மக்கள் முருகககடவுளை வழிபடுகிறார்க ளில்லை. இலங்கைத் தமிழ் மக்கள் முருகன் வழிபாட்டில் ஒன்றி நிற்கிறார்கள்.

கொழும்பு இந்திய வாலிப சங்கத்தின் ஆண்டு விழாவில் தலைமை வகிக்கவே யான் அழைக்கப்பட்டேன். அவ்விழா அழகியதொரு கொட்டகையில் நடைபெற்றது. எனக்குச் சங் கச் சார்பாக வழங்கப்பெற்ற நன்மொழியில் சங்கத்தார் என் மாட்டுள்ள முழு அன்பையும் காட்டி யிருக்கிறார். அவர்க்கு

நன்றி கூறுமுகத்தான், அந் நன்மொழியைத் தழுவியே எனது முன்னுரைக் கடனாற்றினேன். அம் முன்னுரைக்கண் இந்தியாவில் பல குறைகள் இருக்கின்றன என்றும்—அவை (1) பெண்ணை அடிமைப்படுத்தி யிருத்தல், (2) மக்களுள் பிறப்பால் உயர்வு தாழ்வு கொண்டமை, (3) பிறப்பில் தீண்டாமை வகுத்தது, (4) கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடாமை, (5) பொறாமை என்பன என்றும்—பேசி, அவைகளைப் பீடிகையாகக்கொண்டு சுமார் ஒன்றரை மணிநேரம் சொற்பொழிவு நிகழ்த்தினேன். இந்திய இளைஞருலகில் அவ் வைம்பெருங் குறைகள் இருத்தலாகாதென்றும், அக் குறைபாடுகள் உள்ள மட்டும் இந்தியா உரிமை பெறல் அரிதென்றும் அவைகளை அன்புவழி நின்று களைய இளைஞர்கள் முயலல் வேண்டுமென்றும் இளைஞர்களுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டேன்.

* * *

இலங்கை வாசிகளில் பெரும்பான்மையோர் சிங்களவரே. அவருள் ஆங்கிலம் பயின்ற ஆண் மக்களும் பெண் மக்களும் ஐரோப்பிய நடை உடை பாவனைகளைக் கொண்டிருந்ததால் அவர்களைப்பற்றி ஒன்றுங் கூறவேண்டுவதில்லை. ஐரோப்பிய நாகரிகத்தில் தோயாத சிங்களவ ஆண்மகன் மிக வலியனாய், கூரிய நோக்குடையனாய்க் காணப்படுகிறான். அவன் முகத்தில் சாந்தம் காணோம். அவன் எளிய உடையே அணிகிறான். பலர் மயிரைக் கோலிக்கட்டி, வளைந்த தந்தச் சீப்பைச் செருகி யிருக்கின்றனர். பெண் மகள் மிகத் திண்ணமாயிருக்கிறாள். அறிவு விளக்கம் புலப்படவில்லை. அவள் தன் அரையில் நான்கு முழத் துண்டையும், மார்பு மறைய ஒரு கஞ்சுகத்தையும் அணிந்திருக்கிறாள். மற்ற மேலாடை ஒன்றுமில்லை.

கொழும்பினின்றும் கண்டிக்குப் புறப்பட்டோம். எங்களை வழிகூட்டி அனுப்பப் போந்த அன்பர்களோடு நாங்கள் பேசிக்கொண்டிருந்தமையால், எங்கட்குச் செயற்கை வெம்மை புலனாகாம லிருந்தது. வண்டி புறப்பட்டதும் அவ் வெம்மைக் கொடுமை வருத்தத் தொடங்கிற்று. சிறிது நேரத்துக்குள் இயற்கை அன்னை காட்சி வழங்கினாள். அவ்வழியின் இயற்கை வளத்தை என்னென்று சொல்லுவேன்! ஸ்ரீநகர், டார்ஜிலிங், ஆல்ப்ஸ் முதலிய இடங்களிலுள்ள இயற்கை வளப்பங்களைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன்; நூல்கள் வாயிலாகப் படித்துமிருக்கிறேன்: அவைகளை நேரே கண்டதில்லை. கண்டிக்குச் செல்லும் வழி நெடுக இயற்கை அன்னையின் திருவோலக்க மன்றி

வேறென்ன இருக்கிறது ? எங்கணும் மலைகள்—மலைத்தொடர் கள்—மலைச் சூழல்கள்; எங்கணுஞ் சோலைகள்—சாலைகள்—செடிகள்—கொடிகள்—பைங்கூழ்கள்; எங்கணும் அருவிகள்—ஆறுகள்—நீர் நிலைகள். இவை யாவும் ஒன்றோடொன்று கலந்து அளிக்குங் காட்சி யன்றோ கடவுட் காட்சி? நூற்றுக் கணக் கான குற்றாலங்கள்—நூற்றுக்கணக்கான பாபநாசங்கள் ஆண் டுள்ளன. மலைகள் எத்துணை எத்துணை விதமாகக் காட்சி வழங்குகின்றன! சில இடங்களில் மலைகள் படிப் படியாக இழிந்து இடைவெளியிட்டு இவர்ந்துநிற்குந் தோற்றம் இயற்கை ஊசல்போல் விளங்குகின்றது. சில இடங்களில் மலைகள் சிங்கம் எழுந்து நின்று பாயவருந் தோற்றத்தை வழங்கிக் கொண்டு நிற்கின்றன. சில இடங்களில் அவைகள் செய்கரைபோல் நேர்மையாக நிற்கின்றன. பசுமை நிலவாத மலைப்பாங்கரே காணேம். தெங்கும், கமுகும், ரப்பர் மரங்களும் ஒரு பெரும் பசுங்கடல் பொங்கி வருதல்போல் காணப்படுகின்றன. சில இடங்களில் நாலா பக்கங்களிலும் மலைசூழ்ந்து நிற்ப, அவைகளி னின்றும் பொழியும் அருவி அவைகளினடியில் நீரரண் என ஓடித் திகழ, நடுவண் பச்சைப் பசேலென வான்பயிர் தலை யசைத்து நிற்கும் அழகைக் கண்டு உவந்தேன். பசிய மலைச் சோலைகளைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் இயற்கை இன்பவாழ்வு உள்ளத்தில் தோற்றமுறு நிற்கும். இப்பொழுது ஐரோப்பியத் தோட்டக்காரரும் மற்றவரும் இப்பசுங்காடுகளைப் பண்படுத்திப் பொருளீட்டுந் துறை கண்டிருக்கின்றனர். நம் முன்னோர் அவ்வியற்கை நிலையங்களிடைவதிந்து, இயற்கையின் வாயிலாக இறைவனைக் காணும் எளிய வாழ்வு நடாத்தினர். பசுமை பொங்கும் மலைகளைப் பார்த்துக்கொண்டே கண்டி சேர்ந்தோம். நிலையத்தருகே கண்டித் தமிழ் மக்கள் அன்போடு எங்களை வரவேற்றார்கள். நாங்கள் 'தமிழக' நிலையத்தில் தங்கி யிருந்தோம். ஆங்குச் 'சைவம்', 'தமிழ் வரலாறு' என்னும் இரண்டு சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஆங்குள்ள தமி ழர், தமிழ் மனத்தோடு எங்களுடன் உறவாடினர் என்று சுருங் கச் சொல்லி மேலே செல்கிறேன்.

கண்டி, கண்டின் புறத்தக்க இடங்களில் ஒன்று, கண்டியை இயற்கைக்குடில் என்று கூறுவது மிகையாகாது. கண்டியி லுள்ள விவசாயக் கல்லூரி, தோட்டம் முதலியனவற்றைக் கண் டோம். அத் தோட்ட வனப்பை வருணிக்கப் புகுந்தால் இக்

கட்டுரை வருணனை உரையாகவே முடியும். இயற்கை அரசியின் உறையுளெல்லாங் கண்டு, பின்னர்ப் பௌத்த மடம்—கலாசாலை-கோயில் முதலிய அறநிலையங்களுக்குச் சென்றோம். மடத்தில் பெரிய பௌத்த குருவைப் பார்த்து உரையாடப் போனேன். அவருக்குத் தமிழுந் தெரியவில்லை ; ஆங்கிலமுந் தெரியவில்லை. அவர் ஆணைப்படி பௌத்த வித்தியாலயம் போந்து, ஆண்டுள்ள ஓர் ஐரோப்பியர்பால் உரையாடினேன். அவர் பௌத்த நூல்களில் ஆராய்ச்சியுடையவர் என்பது, அவரது அன்பார்ந்த பேச்சால் தெரியவந்தது. சம்பாஷணையால் நாங்கள் ஒருமை முடிவே பெற்றோம்.

* * *

கண்டியின் பலதிறக் காட்சி கண்டு, அன்பர்கள்பால் விடை பெற்று, யாழ்ப்பாணம் நோக்கினோம். யாழ்ப்பாணத்தின் இயற்கை வளம் நமது தென்னாட்டு இயற்கை வளத்துக்கு அரண் செய்வது. இலங்கையின் மற்றப் பகுதியின் இயற்கை வளம் யாழ்ப்பாணத்தில் இல்லை. புகையிலைப் பெருக்குக் குறிக்கத்தக்கது. கொழும்புவழியிலும் கண்டிவழியிலும் தெங்கின் பசுமை கண்ணுக்கு விருந்தளித்தது. யாழ்ப்பாணத்திலோ அத் தென்னங்கீற்றுகளின் வேலிகள் கண்ணைக் கவர்ந்து நின்றன. யாழ்ப்பாணத்தில் சொற்பொழிவுகள் பல நிகழ்ந்தன. ஒரே நாள் நான்கு இடங்களில் சொற்பொழிவு நிகழ்தலும் நேர்ந்தது. பல கல்லூரிகளிலும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கல்லூரிகளில் எனதுள்ளத்தைக் கவர்ந்தது, சர். பொன்னம்பலம் இராமநாதன் பெண்மக்கள் கல்லூரி. அக் கல்லூரியைப் பெருஞ் சிதம்பரமாக மனத்தால் தொழுதேன். தமிழும் சைவமும் ஆண்டிருந்து புத்துயிர் பெறும் என்னும் உறுதியும் எனக்குத் தோன்றிற்று.

யாழ்ப்பாணக் குடிமக்கள் தமிழர் ; வேளாளர் ; சைவர். அவர் நமது தமிழ் நாட்டினின்றும் அவண் குடிபுகுந்தவர். அவருடன் போந்த வேறு சிலருமிருக்கின்றனர். தாய் நாட்டின் நினைவு தோன்ற ஆண்டுள்ள தமிழ் மக்கள் சில இடங்களுக்குத் திருநெல்வேலி, பட்டுக்கோட்டை முதலிய பெயர்களைச் சூட்டி இருக்கிறார்கள். யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எங்கள் பால் காட்டிய அன்பு என்றும் மறக்கற் பாலதன்று. தென்னாட்டுத் தமிழ்மக்களுக்கும் தங்கட்கும் இடையறாத் தொடர்பிருத்தல் வேண்டுமென்று கூறாத அன்பர்கள் இல்லை.

(1926)

8. நீதி நூல்களில் இலக்கிய நயம்

திரு. டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எம்.ஏ.,பிஎச்.டி., அவர்கள்

நீதி நூல்களில் இலக்கிய நயம் என்பதைப் பற்றிக் கூறு தற்கு முன்னால் பொதுவாக நீதி நூல்களில் இலக்கிய நயம் மிக்கக் காணப்படுவது இயல்பன்று என்று கூறுதல் வேண்டும். நீதிகளைக் கூற எழுந்தவை நீதி நூல்கள் ஆனதால், இவ்வாறு நடக்கக்கூடாது என்று விலக்கியும் செல்வது நீதி நூல்களின் இயல்பு ஆனதால், அந் நூல்களிற் சிறந்த கவிநயம் காண்பது அரிதாகத்தான் இருக்கும். நல்ல கவிதையின் நோக்கம் மக்கட்கு நீதி கூறுவதன்று என்று சொல்லத் துணியும் மேனாட்டு ஆராச்சியாளர் சிலர் கருத்திற்கேற்ப, நம் நாட்டிலும் சிலர் இக்காலத்தில் ''காவியத்தில், இலக்கியத்தில் வரும் கருத்தை நோக்க வேண்டா ; இன்பத்தை மாத்திரம் கொள்ளுங்கள்'' என்கிறார்கள். இஃது ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. இலக்கியங்கள் சிற்பத்தைப்போல, ஓவியத்தைப்போல, நடனத்தைப் போல ஒரு நுண்கலையாக மதிக்கப்பட்டு இன்பம் நல்குமென்று எதிர்பார்க்கப்பட வேண்டுவது உண்மைதான். ஆனால் இவ் வருங்கலைகளுக்கும் இலக்கியமாகிய கலைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அது யாதென்றால் சிற்பம், சித்திரம் முதலியவற்றினுடைய நோக்கம் இன்பம் பயப்பதொன்றே ஆகவும் இலக்கியத்தினுடைய நோக்கம் அதனோடு நில்லாமல் மக்களுடைய வாழ்க்கையைச் சீர்ப்படுத்த உதவுவதாகவும் இருத்தல் வேண்டும் என்பதே.

இதனால் அறிந்து கொள்ளத்தக்கன இரண்டு உண்மைகள். வாழ்க்கையைச் சீர்ப்படுத்த அமைந்த நீதிநூல்கள் சில இலக்கிய நயம் பெற்றிருத்தல் கூடும் என்பது ஒன்று. நல்ல இலக்கியங்களிற் சில இன்பம் பயப்பதோடு நில்லாமல் வாழ்க்கையை மேம்படுத்தவும் கூடும் என்பது மற்றொன்று.

தமிழிலுள்ள நீதி நூல்களைப்பற்றிப் பேசத் தொடங்கும் எவரும் திருக்குறளை முதலில் நினைத்தல் இயல்பு. ஈ, இன்சொற் கூறுக, விருந்தோம்புக என விதித்தும், பொய் கூறற்க, கள் உண்ணற்க, கொலைசெய்யற்க என விலக்கியும் சொல்லும் இந்த நீதி நூலிலே இலக்கிய நயம் இருக்குமோ என ஐயப்பட வேண்டா. நீதி கூறும்போது நயம்படச் சொல்லுதற்குச் சாதாரண மனிதனுக்குத் தெரியாது. ஆனால் திருவள்ளுவர்க்குத்

தெரியவில்லை யெனின் யாருக்குத்தான் தெரியும்? இரக்கின்ற ஒருவனுக்கு இல்லையென்று கூருது பொருளுள்ளவர் கொடுக்க வேண்டுமென்று கூற விரும்புகிருர் திருவள்ளுவர். ஒருபொருளை எனக்கு ஈக என ஒருவன் இரத்தல் இழிவுடைத்து என்பதை அறிவார். ஏதோ ஓர் அவசியம் ஏற்பட்டு, யாசித்தே தீர வேண்டும் என்ற நிலையில், ஒருவன் இரப்பதாக வைத்துக் கொள்வோம். அந்நிலையில் வேருெருவன் வீட்டிற் புகுந்து, தன் குறை இன்னது எனச் சொல்லத்தொடங்கிச் சொல்ல நா எழா மல் அவன் நிற்கின்ருன். அவன் வந்து நிற்கிற நிலையைக் கண்ட வுடனே, இவன் தன்னிடம் ஒரு பொருள் வேண்டி வந்திருக் கிருன் என்பதை அறியும் செல்வன் கூசாது "இல்லை" எனச் சொல்லுகிருன். இல்லையென்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் இரக்கிறவன் உயிர் போய்விடுகிறது. இல்லையென்ற விடமோ சொல்லுகிறவன் வாய்வழியே வந்தது. ஆனல், அவனை ஒன் றுஞ் செய்யவில்லையே! என்ன விந்தை! எந்த நேரத்தில் அப் படிச் சொல் சொன்னவன் உயிர் எங்கேயாவது மறைந்திருக்க வேண்டும். எந்தப் புரையிலே புகுந்து அந்நேரம் ஒளித்துக் கொண்டதோ தெரியவில்லையே! இல்லையெனக் கேட்டவன் மாய்ந்தான். கூறினவன் மாயவில்லை! பொருளை வைத்துக் கொண்டு வழங்காமற் கெடுகின்றவன் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? இந்தக் கருத்துக்கள் அனைத்தையும் திருவள் ளுவர் கூறக் கருதினர். அவற்றைக் கூறுதற்குப் பெரிய கட்டுரை எழுதவில்லையே. அன்றி, நீளமாக ஆசிரியப்பா பாடவில்லை. பின் என் செய்தார்? இரண்டு அடியிலே, அதிலேயும் ஒன்றே முக்கால் அடியிலே ஒரு குறட்பா இயற்றினர். அதுதான் இது:

> **'கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ, இரப்பவர்**
> **சொல்லாடப் போஒம் உயிர்.'**

இல்லையென்று ஒருவர் சொல்லாடவும், இரப்பவர்க்கு உயிர் போகிறது; இல்லை யென்று மறைப்பவர் உயிர் எங்கே போய் ஒளித்துக்கொள்கிறதோ தெரியவில்லையே என்ற அளவே இக் குறட்பா சொல்லுவது போல மேற்போக்காகப் பார்ப்போர்க் குத் தோன்றும். ஆழ்ந்து நோக்கினல், எவ்வளவு சிறந்த நயங் களைத் தன்பால் அடக்கிக் கொண்டிருக்கிறது இச் சிறுசெய்யுள் என்பது விளங்கும். அதனுல்தான், "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என இடைக்காடனர் கூறினர் போலும்!

உலகிற் பலருக்கு பல தொழிலை இறைவர் படைக்கும் காலத்திலேயே அமைத்திருக்கிருர் என்ற சொல்லைத் திருவள்ளுவர் கேட்டிருக்கிருர். ஒருநாள் அவர் எதிரே ஒருவன் கனவில் வந்தான் போலும். வந்தவன் ஒரு பிச்சைக்காரன். அவன் நேற்று யாசித்தவன், மூன்ரும்நாள் யாசித்தவன், இன்றும் யாசிக்கத்தான் வேண்டுமோ என அஞ்சுகிருன். ஆம், என் செய்வது? தலையில் எழுதிய வண்ணந்தானே நடக்கும். இரந்துதான் ஆக வேண்டும் என்று எண்ணினுன். அதற்குள்ளாக இன்னுமோர் எண்ணம் அவனுக்குத் தோன்றிற்று. யாசிப்பதும் ஒரு தொழிலா? உலகில் இன்னருக்கு இன்னது தொழில் எனப் பிரமன் வகுப்பதாக வைத்துக் கொள்வோம். அத் தொழில்களில் ஒன்ருக யாசித்தலையுஞ் சேர்த்து எண்ணினுனு பிரமன்? எண்ணினுனல் அவனே அந்தத் தொழிலைக் கொஞ்சம் பார்க்கட்டும். இடத்தைவிட்டு அசையாமற் படுத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு இந்த உலகிற்கு வரட்டும். வந்து தெருத்தெருவாக அல்லற்பட்டு அலையட்டும். அப்பொழுது தான் இரத்தல் எவ்வளவு இழிவானது என்பதை அறிவான். இழிவானதொன்றை எனக்கும் என் போன்றவர்க்கும் ஒரு தொழிலாகப் பிரமன் வகுத்தான் என்ருல், அவன் ஒரு பாவி. அந்தப் பாவத்தால் அவன் ஒரு பிறவி எடுக்கட்டும். அப் பிறவி மானிடப் பிறவியாய் இருக்கட்டும். மானிடனுய், மானம்விட்டு யாசகனுய் வந்து சேரட்டும். போகிற இடத்திலே உடனே உணவைக் காசைப் பிச்சையைப் பெருமல் பல வீடுகளில் பல தெருக்களில் அலையட்டும். அலைந்து கெட்டொழியட்டும்! இவ்வாறு அப் பிச்சைக்காரன் கருதியதாய் ஒரு கனக் கண்டார் போலும் திருவள்ளுவர்! அதன் பயனுய் ஒரு குறள் எழுதினுர். அக்குறள்,

> " இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து—
> கெடுக உலகியற்றி யான் "

என்பதே. எவ்வளவு பெரிய கனவை எத்துணைக் குறுகிய அடிகளில் தெரிவித்துவிட்டார். இதுதான் இலக்கிய நயம். 'இவ்வுலகைப் படைத்தவன் யாவனுயினும், அவன் இரத்தலையும் ஒரு தொழிலெனப் படைத்து அத்தொழிலாற் சிலர் உயிர் வாழ்வாராக என விதித்திருப்பானுயின், அவனும் தெருத்தோறும் பரந்து திரிந்து துன்புறுவானுக,' எனக் கூறுகின்ற இக்குறள் இரப்பினுல் வரும் அச்சத்தை எவ்வளவு கொடுமை

யுடையதாகப படம் பிடித்துக் காட்டுகின்றது! இரத்தல் கொடிது என்ற நீதியைக் காட்ட விரும்பும் திருவள்ளுவர் எவ்வளவு சிறந்த இலக்கியமாக இவ்விரண்டடிகளை அமைத்து விட்டார்!

சில உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் மிக்க நயமுண்டாகக் குறளமைத்திருப்பதைக் காண்கிறோம். உதாரணமாக,

"அறை பறை யன்னர் கயவர் தாம்கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்"

என்பதை நோக்குவோம். கயவர் கீழ் மக்கள். கீழ் மக்களைத் தம்பட்டம் ஆகிய பறைக்குச் சமானமாகச் சொன்னார். சொன்னதற்குக் காரணம் யாது? பறையைத் தட்டுகிறான் ஒருவன். பறையினிடத்திலே அவன் கையினால் ஒன்றை அறிவிக்கிறான். அதை அந்தப் பறை பலர் காதிற் சேர்க்கிறது; பல இடங்களிற் கொண்டு சேர்க்கிறது. அதைப்போல, இரகசியத்தைப் பிறரிடம் போய்க் கீழ்மக்கள் தெரிவித்து விடுகிறார்கள். யாரோ ஒருவர் ஒரு விஷயம் இரகசியம் என்று ஒருவனிடத்தில் தெரிவித்தார். அவன் என்ன செய்தான் என்பது தெரியுமா? அதனை மூட்டை கட்டிக்கொண்டு பலரிடம் போனான். அந்த இரகசியமான பாரத்தை அவனால் தாங்க முடியவில்லை. அதனால் அதைக் கொண்டுபோய்ப் பலருக்கும் பங்குப் போட்டுப் பிரித்து எடுத்து எடுத்துக் கொடுத்தான். இவனை அறைபறை யன்னவன் எனத் திருவள்ளுவர் கூறிய அழகு நோக்கத்தக்கது. இரகசியம் அவனுக்குப் பாரமாக இருந்தது என்பதும், அதனைக் கொண்டு போய்ப் பிறர்க்குச் சேர்த்தான் என்பதும், 'உய்த்து' என்ற சொல்லினாலே பெறப்படுகின்றன. 'உய்த்து' என்ற சொல் இக் குறட்பாவிற்கு உயிர்நிலை. அதனை எடுத்துவிட்டு வேறு எந்தச் சொல்லை அவ்விடத்துச் சேர்த்தாலும், அவ்வளவு சிறந்த நயங்கள் தோன்றமாட்டா. இச்சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தக்க இடம் பார்த்துவைத்த பெருமை திருவள்ளுவருடையது. கயவரிடம் இரகசியம் கூறக்கூடாது என்னும் நீதியை எவ்வளவு நயம்படத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

இரண்டடி நீதி நூலிலிருந்து இப்பொழுது நாலடி நீதி நூலிற்குப் போவோம். செல்வம் நிலை பேறுடையதன்று; அழிந்துபோகும் தன்மையது என்னும் கருத்துடைய நாலடியார்ப் பாட்டு ஒன்றை நோக்குவோம்;

" அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற்று அன்று "

அறுசுவை யுண்டியை உண்டு களித்த பெருஞ்செல்வரும் ஒரு காலத்திலே கூழை இரந்துண்ண நேர்ந்தாலும்நேரும். ஆதலால் செல்வத்தை ஒரு பெரும் பொருளாக மதிக்கவேண்டா என இச் செய்யுள் செப்புகின்றது. இதனுள் ஒன்றிற்கு ஒன்று மறுதலையாக வைத்துத் தொடுப்பதில்தான் அழகு திகழ்கிறது. அன்று அறுசுவையுண்டி உண்டவன், இன்று உப்பில்லாக் கூழ் குடிக்கிறான். அன்று ஆசனத்தில் அமர்ந்து உண்டவன், இன்று நடந்துகொண்டே குடிக்கிறான். அன்று மனைவி ஊட்ட உண்டவன் இன்று தனியே ஓரிடத்துக் குடிக்கிறான். அன்று மறுபிடி சோறு வேண்டாம் வேண்டாம் என மறுத்து உண்டவன், இன்று ஒரு பிடியின்றி வறிஞனாகி இரக்கிறான்; இப்படி ஒன்றிற்கு ஒன்று முரண்பட வைத்துக் காட்டிய வகையினாலே, எத்துணைச் சிறந்த செல்வனும் மிகவும் இழிந்த வறிஞனாதல் கூடும்; ஆதலால். உள்ளபோழ்தே அறஞ்செய்க என்னும் கருத்தைத் திறம்பட எடுத்துக்காட்டுகிறது இந்நாலடி. இப் பாட்டிற்கு இவ்வாறு பொருள் கொள்ளாமல் 'அமர்ந்து' என்னும் சொல்லை 'இல்லாள்' என்பதோடு சேர்த்து, மனைவி விரும்பி ஊட்டவும் மறுத்து உண்டவர்கள் என்றவாறு இயைத்துப் பொருள் சொல்லப்பட்டு வருகிறது. அப்படிச் சொல்வதைக் காட்டிலும் அறுசுவையுண்டியை மனைவி ஊட்டவும் அமர்ந்து உண்டவர்கள் பிறகு வறிஞராய் இரக்கவும் நேரிடும் என்று இயைத்துக் கூறுவதுதான் தக்கது எனத் தோற்றுகிறது. அப்படிக் கொண்டால்தான் பாட்டினுடைய முழு அழகும் விளங்கும். அறுசுவை யுண்டிக்கு மாறாகக் கூழினைக் கூறினார்; இல்லாள் ஊட்ட உண்டவன் ஓரிடத்து யாசித்து உண்கிறான், மறுசிகை நீக்கி யுண்டவன் ஒன்றுமில்லாது வறிஞனாய்த் திரிகிறான். இவ்வாறெல்லாம் மாறுபட வைத்துக் கூறியதற்கேற்ப, அமர்ந்து உண்டவன் சென்று இரக்கிறான் என்றே கவிஞர் கூறக் கருதியிருப்பார் என நினைக்கிறேன். இத்துணை நயம் பொதியச் செய்யுளைச் செய்த கவிஞர் இன்னார் என்று அறிய வழியில்லை. அவர் இயற்றிய பாட்டு மாத்திரம் 'நாலடியார்' என்னும் நீதிநூலிலே காணப்படுகிறது.

உலகிலே இச்சகம் பேசி வாழும் மாந்தருள் ஒருவனைப் புலவர் ஒருவர் நோக்குகிறார்; ஒருநாள் ஒருவரும் அறியாமலே அவன் வீட்டினுள் நுழைந்து அவன் செய்பவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவன், "போற்றி போற்றி புண்ணியா போற்றி, போற்றி போற்றி! பாரியே போற்றி, போற்றி காரி, போற்றி ஓரி, போற்றி கன்னு, போற்றி பேகா" என்று என்னென்னவோ உருப்போட்டபடி இருக்கிறான். இதனை மறைந்திருந்து கவனித்தார் புலவர். பிறகு அவன் வெளியே புறப்பட்டுப் போகிறான். புலவரும் பின் தொடருகிறார். புதுப் பணக்காரன் ஒருவன் வீட்டில் அவன் நுழைந்தான். "போற்றி போற்றி" என்று தொடங்கி, "அடியேனைக் காத்தருள வேண்டியது ஆண்டவனுக்குச் சமமான தங்களால்தான் இயலும். இறைவனே அருள் புரிக. தங்கள் அருள்நோக்கி வாழ்கிறேன். பயிருக்கு மழை எப்படியோ, என்போன்ற வறிஞர்கருத் தாங்கள் அப்படி," என்று சொல்லிப் பின்னும் பல அடுக்கத் தொடங்கினன். பார்த்தார் புலவர் ; பாடினார் ஒரு பாட்டு.

"போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாம் தொண்டேபோல்—ஆற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு"

என்பதே அப்பாட்டு. புலவர் தாம் கண்ட பெரிய காட்சியைச் சிறு பாட்டிலே அமைத்துக் கொடுத்தார். அவர் கூறக் கருதியதெல்லாம் வயிற்றை வளர்ப்பதற்காக இச்சகம் பேசித் திரிய வேண்டாம் என்பதே. அதனை எவ்வளவு அழகாக முனைப்பாடியார் அறநெறிச் சாரத்தில் அமைத்து வைத்திருக்கிறார் என நோக்குங்கள். இச்சகம் பேசுவோன் இழிந்தவன் என்று நேரே சொல்லாமல் அவன் வயிற்றினை மகேசுவரனுக்கிப்பெருமைப் படுத்துவதுபோல் சிறுமைப் படுத்திய திறம் வியக்கத் தக்கது. வயிருகிய தம்பிரான் இருக்கிறாரே, அந்தக் கடவுளைக் காப்பாற்ற எத்தனை பொய்யும் புனைசுருட்டும் செய்து மக்கள் வாழ்கிறார்கள் என்று கவிஞர் இவ்விடத்தில் இரங்குகிறார். இப்படிப் பொய் சொல்லியாவது வயிறுவளர்க்க வேண்டுமா எனப் புலவர் கேட்பதுபோலத்தோற்றுகிறது. இப்படி வளர்க்கப்படும் வயிறு வயிரு, குதிரா எனப் புலவர் கேட்பதுபோலத் தோற்றுகிறது. வயிற்றுச்சாமியை நம்பி உண்மைக்கடவுளை மக்கள விடுகிறார்களே எனப் புலவர் கலங்குவதுபோலத் தோன்றுகிறது.

இத்துணை நயம்பட " வயிற்றுப் பெருமான் பொருட்டு " என்று ஒரு தொடரால் எவ்வளவு அரிய பெரிய நீதிகளை அறநெறிச் சாரச் செய்யுள் காட்டுகிறது!

எனவே நீதிநூல்கள் மிகவும் மிக்க இலக்கிய நயமுடையனவாகத் திகழ்கின்றன என்பது விளங்கும்.

9. பேரறிஞர் பெர்னர்ட் ஷா

திரு. புலவர் தணிகை. உலகநாதன் அவர்கள்

ஒருநாள் மகாத்மா காந்தியடிகள் கவியரசர் இரவீந்திரநாத தாகூரைக் காணச் சென்ற அமயம், "எழுபத்து நான்கு வயதுடைய இளைஞராகிய தங்களை அறுபத்து நான்கு வயதுடைய கிழவனாகிய யான் காண வந்துள்ளேன்," என்று கூறினாராம். அறிஞர்கள் தங்கள் உள்ளத்து உணர்ச்சியால் என்றும் இளமை நலம் கமழப்பெறுவர் என்பதே இப்பேச்சின் உட்கோளாகும். அறிவாராய்ச்சிகளில் வல்ல புலவர்கள் எவ்வூரிற்பிறப்பினும் என்ன? எந்த ஊரையும் அவர்கள் தம் சொந்த ஊராகவே பாராட்டுவர். உலக மக்கள் அனைவரும் அறிஞர்களைத் தத்தம் நாட்டுக் கண்களாகப் பாராட்டி அவர்கள் கூறும் அறவழிகளில் நின்று நலம் பெறுவர். அன்னார் எழுதும் கவிதைகளும், கட்டுரைகளும், நாடகங்களும், நவீனங்களும் மக்களுக்கு நல்வழி காட்டும் அறிவுக் களஞ்சியமாகவே விளங்கும். அங்ஙனம் அறிவுப்பணியில் முன்னின்ற திருவள்ளுவர், விவேகானந்தர், தாகூர், காந்தியடிகள் முதலியவர்களைப் போலவே ஆங்கில நாட்டிலும் பெர்னர்ட் ஷா என்னும் பேரறிஞர் தம் தொண்ணூற்று நான்கு வயதிலும் ஏடும் கையுமாகவே இருந்து நாடகங்களும், கடிதங்களும், கட்டுரைகளும் எழுதிக்கொண்டிருந்தார். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு வாழ்வுபெற்ற இவ்வறிஞரை 'உலகப் பேரறிஞர்களின் திலகம்' என்றே போற்றினும் பொருந்தும். வாழ்க்கைச் சிக்கல் எதுவாயினும் தம் நுண்மாண் நுழை புலமையினால் அதன் அடிப்படையான காரணத்தைக் குறிப்பிட்டு எளிதில் திருத்தும் ஆற்றலை அவர்தம் எழுத்தோவியங்களில் காணலாம். அதனாலேயே பெர்னர்ட் ஷா உலகப் புகழ் பெற்றனர்.

ஜார்ஜ் பெர்னார்ட் ஷா 1856-ஆம் ஆண்டு ஜூலை 26-ஆம் தேதியில் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் பிறந்தார். ஷாவின் தந்தையார் குடும்பப் பொறுப்பற்ற ஒரு குடிகாரர்; ஆயினும் தம் மைந்தரின் நல்வாழ்க்கையில் விருப்பமுடையவர். இசைக் கலையிலும் அவருக்குப் பயிற்சி உண்டு. ஷாவின் அன்னையோ நற்குணங்கள் பலவற்றுக்கும் உறைவிடமான நங்கை. அவர் பெண்மைக் குணங்கள் எல்லாம் நிரம்பிக் குடும்ப விளக்காகத் திகழ்ந்தார். கணவரின் குடிப்பழக்கத்தால் மனம் வெறுத்து அவர், தம் பெண் குழந்தைகள் இருவருடனும் ஆண் குழந்தை ஒன்றுடனும் பிரிந்து தனியாய் வாழ்ந்து வந்தார். குழந்தைகள் மூவரில் பெண்கள் இருவரும் மூத்தவர்கள். அவர்களின் தம்பிதான் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா. ஷாவின் தாய் குடும்பப் பாதுகாப்புக்கு வேண்டும் பொருளீட்டும் முயற்சியில் ஈடு பட்டார். அவ் வம்மையாருக்கும் இசையில் நல்ல பயிற்சி உண்டு. அவர் தம் பெண் குழந்தைகளை மட்டும் அழைத்துக் கொண்டு இலண்டன் நகரம் சென்று அங்கே இசை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.

ஜார்ஜ் பெர்னார்ட் ஷா மீண்டும் தந்தையாருடன் டப்ளினில் வாழ்ந்து வந்தார். ஆனால் அவர் தந்தையார் தொழில் புரிந்து வந்த அலுவலகத்தில் அவரை வேலையைவிட்டு நீக்கிவிட்டனர். அவர் தமக்குக் கிடைத்த ஓய்வு நிதியைக்கொண்டு வேறு ஒருவருடன் சேர்ந்து ஒரு மாவரைக்கும் இயந்திரம் அமைத்துத் தொழில் நடத்தினார். அத்தொழிலிலும் அவருக்குப் போதிய வருவாய் இல்லை. ஒருநாள் ஷாவின் தந்தை குடித்துவிட்டு விழுந்து பெருந் துன்பப்பட்டார். அன்றுதொட்டு அவர் குடிப் பழக்கத்தைக் கைவிட்டார். எனினும் தம் இறுதிக் காலத்திலேயே இந் நல்லறிவு பெற்றதால் அவர் குடும்பத்திற்கு எத்தகைய நன்மையும் ஏற்படவில்லை.

பதினைந்தாம் அகவையில் ஷா உத்தியோக வேட்டையில் நுழையலானார். அவர் டப்ளினில் ஒரு சிறிய குமாஸ்தா வேலையில் அமர்த்தப்பட்டார். வேலையில் இருக்கும்போதும் ஷா ஆங்கில நூல்கள் பலவற்றைப் பயின்று வந்தார். ஷாவின் புலமை வளர்ந்ததுபோல் வறுமைப் பிணியும் முதிர்ந்து அவரை வருத்தத் தொடங்கிற்று. அவர் தம் நெருங்கிய நண்பர்களிடமும் கடன் வாங்க அஞ்சினார். 'ஒரு நண்பனிடம் மூன்று பவுன் கடன் வாங்கினேனென்றால் அதனைத் திருப்பிக் கொடுக்

காத நிலைமையில் அவன் நட்பை மூன்று பவுனுக்கு விற்றுத் துறந்ததுபோல் ஆகுமே' என்னும் உணர்ச்சி இளமையிலேயே அவர்பால் குடிகொண்டிருந்தது. அவர் தாமாகவே முன் வந்து உதவிய நண்பர்களின் பொருளையும் வாங்க மறுத்தார். பிற ரிடம் ஊழியம் செய்து வாழும் அடிமைத் தொழிலிலும் ஷாவுக்கு வெறுப்பு ஏற்பட்டது. 1876-இல் அவர் தம் அன்னையார் வாழும் இலண்டன் மாநகருக்குச் சென்றார்.

இலண்டனில் இருக்கும்போதுதான் அவர் நவீனங்கள் எழுதத்தொடங்கினார். தொடக்கத்தில் அவை யாவும் பத்திரிகை யாசிரியர்களால் புறக்கணிக்கப்பட்டன. எனினும் அவர் மேன்மேலும் தமது பயிற்சியில் முயற்சியுடையவராய் இருந் தார். சின்னாட்களில் எச். ஜி. வெல்ஸ், கிரஹாம், வேல்ஸ் போன்ற அறிஞர்களின் தொடர்பு ஷாவுக்குக் கிடைத்தது. ஷா அவர்களுடன் சேர்ந்து சமூகச் சீர்திருத்தப் பிரசாரங்களில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். அவர் ஞாயிறுதோறும் மேடைமீதேறிச் சீர்திருத்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இருபதாண்டுகள் முழு மூச்சுடன் சமூகப் பணியாற்றி வந்தார். சமூகத்தில் உள்ள குறைபாடுகளையும், மூடப் பழக்கவழக்கங் களையும் சுட்டிக்காட்டி மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் செல்லுமாறு ஊக்கினார். பெண்கள் முன்னேற்றத்துக்காக ஷா அரிய பணிகள் ஆற்றினார். அதற்காகவே பல இனிய கதைகளும் நாடகங்களும் இயற்றினார்.

நாளடைவில் அறிஞர் ஷாவின் கருத்துக்களும் இனிய எழுத்துக்களும் மக்களுள்ளத்துக்கு நல்விருந்தாயின. அவர் எழுதும் நாடகங்கள் உலக மக்களால் பெரிதும் பாராட்டப் பட்டன. அவர் நவீனங்கள் எழுதியபோது கிட்டாத பேரும் புகழும் பெருஞ்செல்வமும் நாடகம் எழுதத்தொடங்கியபோது வந்து குவிந்தன. நாடகங்களில் அவர் எழுதிய முன்னுரையே பிறரால் பெரிதும் மதிக்கப்பட்டதெனின் உள்ளுரை பற்றி உரைக்கவும் வேண்டுமோ? அவர் எழுதிய நாடகங்களில் 'பேயின் சீடன்' என்பது ஒன்று. அந் நாடகம் அமெரிக்காவில் நடந்தபோது நாடக நிலையங்களில் எள்விழுவதற்கும் இடமில்லை என்னுமாறு மக்கள் திரள் திரளாகக் கூடி அறிஞரின் சொற் சுவை பொருட்சுவை மிக்க கருத்துக்களைக் கேட்டுக் களித்தனர். அதனால் அளவற்ற செல்வமும் அவருக்குக் கிடைத்தது. நாடக உலகில் தமக்குக் கிடைத்த நல்வரவேற்பைக் கண்ட ஷா அது

காறும் தாம் ஆற்றிவந்த பத்திரிகைத் தொழிலினின்று விலகிக் கொண்டார்.

1898-இல் ஷா தம் அறிவுக்கும் திறமைக்கும் பொருத்தமான சார்லட் பிரான்சிஸ் டவுன்ஷண்ட் என்னும் ஆரணங்கை மணந்து இல்லற மென்னும் நல்லறம் ஆற்றினர். உருவும் திருவும் வாய்ந்த அந்த அம்மையாரும் தம் கணவனரிடம் மாருத அன்பும் பணிவும் உடையவராய் விளங்கினர். நெடு நாட்களாக அவர்களுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. இங்ஙன மிருக்கும் நாளில் அம்மையார் நோய்வாய்ப்பட்டு 1943-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தம் அருமைத் துணைவியை இழந்த ஷா மிகவும் வருந்தினுராயினும் தமது கடமையை மறவாமல் இலக்கியப் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர்தம் இலக்கியச் சேவையைப் பாராட்டி நோபல் பரிசுச் சங்கத்தார் 1926-ஆம் ஆண்டில் அவருக்கு உலகம் புகழும் அப் பரிசை யளித்துச் சிறப்பித்தனர். அவர் பெற்ற பரிசுத் தொகையாகிய 8000 பவுனையும் இலக்கிய வளர்ச்சிக்காகவே நன்கொடையாகக் கொடுத்தமை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

ஷா தமது வாழ்க்கையில் ஐம்பது நாடகங்களுக்குமேல் எழுதியுள்ளார். அவை உலகமெங்கும் பரவியுள்ளன; வெள்ளித் திரையிலும் காட்டப்படுகின்றன. ஷாவின் நாடக மென்ருல் மக்களுக்குப் பேரானந்தம். நாடகங்களின் மூலம் தமக்குக் கிடைத்த திரண்ட செல்வத்தை அவர் வீண் செலவு செய்ததில்லை. தம் சொந்த உழைப்பால் அவரவர் மிகுந்த செல்வம் ஈட்டுதல் வேண்டும் என்பதே அவர்தம் உயர்ந்த எண்ணமாகும். நாடகங்கள் எழுதித் திரண்ட பொருள் ஈட்டியவர்கள் உலகில் ஷா வன்றி வேருெருவரும் இலர் என்றே கூறலாம். உலகின் பல்வேறு பொருள்களின் நுட்பங்களையும் ஷா நன்கு உணர்ந்தவர். அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவர் தம்மைத் தாமே ஒரு பத்திரிகையாளன், விமர்சகன், நாவலாசிரியன், நாடகாசிரியன், கிளர்ச்சிக்காரன், தத்துவ ஞானி, அரசியல்வாதி, மதாசிரியன், பொருளாதார அறிஞன் என்று கூறிக் கொள்வதில் மிகவும் பெருமிதம் கொள்வார்.

மாணவர்கள் விரும்பிப் படிக்கும் 'அந்திரோகிளிஸ்' என்னும் கதை அவர் எழுதியதேயாகும். அவரது 'காண்டிடா, 'டாக்டரின் தருமசங்கடம்', 'மகாத்மா ஜோன்' என்னும் நாடகங்கள் படிக்கப்படிக்கத் தெவிட்டா இன்பம் தருவன.

பெர்னார்ட் ஷா உடல் ஓம்புவதில் வல்லவர். தினமும் அவர் தவருமல் உடற் பயிற்சி செய்வார். அவர் நாடோறும் நீரில் கண்ணை வைத்துக் கழுவி வந்தமையால் முதுமைப் பருவத்திலும் மங்காத பார்வையைப் பெற்றிருந்தார். ஷா தெளிந்த அறிவுவன்மை வாய்க்கப் பெற்றவர். அவர் தம் ஆயுளைப் பற்றியோ மரணத்தைப் பற்றியோ ஒருபோதும் கவலை கொள்ளவில்லை. சென்ற இரண்டாம் மகாயுத்தத்தின் போது ஜெர்மனியரின் குண்டுகள் இலண்டன் நகரத் தெருக்களைத் துளைத்துக்கொண்டிருந்த போதும் அவர் அஞ்சாமல் தனியே திரியும் ஆற்றல் பெற்றிருந்தமையே இதற்குத் தகுந்ததோர் சான்ருகும். ஷா உழைப்பால் உயர்ந்தவர். தம் தொண்ணூற்று நான்காம் பிராயத்திலும் அவர் நாவல்கள் எழுதிக் கொண்டிருந்தார். தம் கையிஞலேயே கடிதங்களும் கடிதங்களுக்குப் பதிலும் எழுதுவார். அவர் தம் கருத்துக்கு உண்மை என்று பட்டதை எங்கும் யாரிடத்தும் அஞ்சாது நின்று புகலும் மன உறுதி பெற்றவர். தாம் ஓர் ஆங்கிலேயராக இருந்தும் ஆங்கிலேய ஆட்சியாளரின் ஊழல்களை அடிக்கடி எடுத்துக் காட்டித் திருத்திய தனிப் பெரும் செம்மல் அவரே. அவர் உண்மைக்கும் நேர்மைக்கும் உறைவிடமாய் இருந்தார், ஆடம்பர வாழ்வை அவர் இம்மியும் விரும்பவில்லை; இறுதி வரையில் எளிய வாழ்வே நடத்திவந்தார்.

ஷா உயிர்களிடத்தில் அன்புமிக்கவர். 'எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்க லாகாது' என்பது அவர் கொள்கை. மதுவருந்துதலும், புலால் உண்ணுதலும், வேட்டையாடுதலும் மாபெரும் பாதகங்கள் என்று அவர் அடிக்கடி கூறுவது உண்டு. "நான் சர்வ வல்லமையுள்ள சர்வாதிகாரியாக இருந்தால், என் குடிமக்கள் தங்களுடைய வாழ்க்கைப் பொறுப்புக்களைத் தாங்கி நடத்துவதற்காக உணர்ச்சியகற்றும் பொருள்கள், போதைப் பொருள்கள், காபி முதலிய கிளர்ச்சிப் பொருள்கள், புகையிலை, மீன், புலால் ஆகிய இவற்றின் சார்பிலிருந்து மீட்டு இயற்கைச் சக்திகள் நிறைந்த தாவர உணவுப் பொருள்களைப் பங்கிடு செய்யுமாறு உத்தரவு பிறப்பிப்பேன்" என்று அவரே ஒரு முறை கூறியுள்ளார்.

அவர் பேரறிஞராக இருந்தும், எல்லோரிடமும் எளிதாகவும் அன்பாகவும் உரையாடுவார்; அவர் பேச்சில் எப்போதும் நகைச்சுவையுடன் உண்மைக் கருத்துக்களும் நிறைந்திருக்கும்.

அவருக்கு மூளை வேலை அதிகமாய் இருந்தமையின், அடிக்கடி தலைவலி வருவதுண்டு. ஒரு சமயம் நான்சென் என்பவர் அவரைக் காண வந்திருந்தார். நான்சென் ஒரு நிலநூல் வல்லுநர். அவரே வடதுருவத்தைக் கண்டுபிடித்தவர். அவரைப் பார்த்து ஷா, "நீங்கள் தலைவலிக்கு ஏதாவது மருந்து கண்டுபிடித்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான்சென் : இல்லையே!

ஷா : தலைவலி மருந்தைக் கண்டுபிடிக்க நீங்கள் முயற்சி யாவது செய்ததுண்டா?

நான்சென் : இல்லையே! தலைவலியைப் பற்றி நான் ஒன்றும் கவலைப்படுவதில்லை.

ஷா : நன்று! இது மிகவும் வியப்பே! யாருமே கவலைப் படாத வட துருவத்தைக் கண்டு பிடிக்க உங்கள் ஆயுள் முழுவதையும் செலவழித்திருக்கிறீர்கள். ஆனால் ஒவ்வொரு மனிதனையும் கதற வைக்கும் தலைவலியைப் பற்றித் தாங்கள் கவலைப்படவே இல்லை என்கிறீர்களே!

பெர்னார்ட் ஷாவின் இவ்வுரையைக்கேட்ட நான்சென் தம் அறியாமைக்காக வெட்கப்பட்டுப் புலவரைப் பாராட்டிச் சென்றார். பெர்னார்ட் ஷா நாம் வாழும் காலத்தில் வாழ்ந்தார். அதனால் நமக்குப் பெருமையைத் தந்தார். அவர் 2—11—'50-இல் தமது தொண்ணூற்று நான்காம் பிராயத்தில் மண்ணுலகை நீத்து, விண்ணுலகு எய்தினர் என்ற செய்தி கேட்டு உலக மக்கள் அனைவரும் திடுக்கிட்டனர். தள்ளாத வயதிலும் தளரா உழைப்புடைய அறிவுக் கருவூலத்தை இழந்தோமே என்று ஏங்கினர். அவர் மறைந்தார்; ஆனால் நாம் அவரை மறககவில்லை. அவர் வாழ்க்கை முடிவுற்றது; ஆனால் அவர் தம் சீர்திருத்தக் கருத்துக்கள் அமைந்த இலக்கியச் செல்வங்கள் நம்மை விட்டு மறையவில்லை. அவை உலகின் எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு இலக்கியச் சோலையில் என்றென்றும் மலர்ந்து குலுங்கும் வாடா மலர்களாகும். பேரறிஞர் பெர்னார்ட் ஷாவின் புகழ் ஓங்குக.

10. புகழ்த் துறவு

திரு. புலவர் வ. சுப. மாணிக்கம், எம். ஓ. எல்., அவர்கள்

களம் : காடு

காலம் : நண்பகல்

கூற்று : வல்வில்ஓரி, வன்பரணர், பாணர் முதலாயவர்.

(தொலைவிலே மரச்செறிவுக் கிடையே வல்விலோரி வருகின்றான். தலையில் திருமணி ; முதுகில் வலப்புறத்தில் அம்பறுத் தூணி ; இடத்தோளில் வில் ; மார்பில் அரசச் சின்னங்கள் ; காலில் குருதி தோய்ந்த கழல் என்றின்ன கோலமுடையவனை வன்பரணர் காண்கிறார்.)

வன்பரணர் : *(வாய்பொத்தி)* ஆரவாரஞ் செய்யாதீர்கள். அக்கொலைவன் இவனேதான். *(மூக்கிற் சுட்டு விரல் சேர்த்து)* இவன் யாராக இருக்கலாம். முன்பின் அறிந்த முகமாகவும் தெரியவில்லை. கொலைவன் என்பதிலும் ஐயமில்லை. ஒருகால், ஊன் விலை வாணிகத்திற்குக் கொல்லுபவனாக இருக்கலாம். *(சிறிது தயங்கி)* அப்படியானால் யானையையும் புலியையும் ஏன் கொல்லுகிறான் ?

பண்ணன்: ஐயா, யானையின் ஊனைப் புலிக்கு விற்பதற்கும் துறவிகட்குப் புலித்தோலை விற்பதற்கும் கொன்றிருப்பான்.

(ஓரி நெருங்கி வருகிறான். பல அணிகலன்களை வன்பரணர் பார்க்கிறார்.)

வன்பரணர் : நான் நினைத்தது தவறு. இவன் சொல்லியதும் அப்படியே. ஆயிர நரம்பியாழ்போலும் பெருஞ் செல்வமுடையவன். மார்பிற் கிடக்கும் முத்தாரம் ஒன்றே இவன் திருமகள் நோக்குடையவன் என்று காட்டுகின்றதே. கையில் மணிக் கடகங்கள் உடைய இவனோ இறைச்சி விற்கும் பாசவன். *(ஓரி அணிமையில் வர அரசச் சின்னங்கள் விளங்குகின்றன)* யான் நினைத்தது ஒவ்வொன்றும் பிழை. இவன் செல்வன் மட்டும் அல்லன்; ஓர் அரசன்; வேட்டுவ அரசன் வேட்டையாடி உயிர்களைக் கொல்லும் மறம் இவனுக்கு அறமேயாதலின் கொலைவனும் அல்லன் ; விலைவனுமல்லன்; கொடியோனுமல்லன். விளங்காதன எல்லாம் விளங்கிவிட்டன. கொடையாளனா அல்லனா என்பதும் இன்னுஞ் சிறிது போழ்தில் அறியலாம் ; *(பாணர்களைப் பார்த்து)* தவக்கம் வேண்டா. பல இயங்களை

இயக்குங்கள். முழவதிர்ட்டும். ஆகுளி தொடுமின். பண்ணை யாழிற் பாடுமின். (விறலியரைப் பார்த்து) வண்ணம் பாடுதிர். (விரைவாக) நம் பாண் தொழிலுக்கு அடையாளமான அந்தக் கரிய கோல் எங்கே? என் கையிற் கொடுப்பீர்.

(வல்வில் ஓரி அணிமையில் வரவே, எல்லாருந் தொழு கிறார்கள். இருந்து பாடும்படி கைகவித்து, ஒவ்வொரு வரையும் இருக்கும்படிச் செய்கிறான்).

வன்பரணர் : (கை கூப்பி) அரசே, ஒன்று சொல்ல அருளல் வேண்டும்.

ஓரி : நீங்கள் சொல்ல விழைவது இதுவெனத் தெரிந்து கொண்டேன். மிகப் பசியாக இருக்கிறீர்கள். (மான் தசைத் துண்டை நெருப்பில் வாட்டிக்கொண்டு வந்து) பாணர் தலைவரே! எல்லாரும் இவற்றைத் தின்று பசியாறுங்கள்.

வன்பரணர் : (தின்றுகொண்டே) மன்ன, யான் சொல்ல நினைத்திருப்பது வேறு.

ஓரி : உங்கள் உள்ளத்தை என்னுள்ளத்தால் அறிந்து கொண்டேன். நீடு பசித்திருப்பதால், மான் சூட்டினைத் தின்றவுடன் விக்குள் உண்டாகின்றது. (ஆவின் நெய்போன்ற தேன் அடைத்த புட்டில்களை முன்னர் வைத்து) இத்தேனைச் சிறிது சிறிது குடித்துக்கொண்டு, மான் சூட்டிறைச்சியை அருந்துங்கள்; அழிபசி நீங்கும்.

வன்பரணர் : (மதுவையும் இறைச்சியையும் மாறி மாறி உண்டு) கோவே! நாங்கள் நாடு நாடாக, ஊர் ஊராகப் போய் வரும் நாடோடிகள் ; ஓரிடத்திலாவது தங்களுக்கு ஒப்பாகச் சொல்லத்தக்க வேட்டுவரைக் கண்டதில்லை ; உண்டென்று சொல்லக் கேட்டதுமில்லை. தாங்களே மற்றைய வேட்டுவர்களுக்கு உவமையாகத் தக்கவர்கள். சேர வேந்தன் தனக்குப் பொறியாக வரைந்திருப்பது உங்கள் கை வல்வில்லன்றோ! (அம்பைக் கையில் எடுத்துக்கொண்டு) வரிசையாக நிறுத்தினால், சாய்கோணம் என்னும்படி, யானை செவி நுழைந்து புலி வாய் பிளந்து, மானுடல் வழியாகப் பன்றியின் குடர் சரித்து, உடும்புத் தலையில் செங்கோலாக நின்றது இவ் வம்பு என்றால், புகழ்ச்சிக் குரியது முனை மழுங்கிய இவ் வம்போ, அன்றி எய்த பெரியவன் வலிமையோ?

ஓரி: ஐயப்படாதே பொருளில் ஐயப்படுகின்றீர். உயிரில்லாப் பொருளாகிய அம்புக்குப் புகழ், பழி என்ற வினைப் பயன்

உண்டோ? வினையில் பொருள்களைக் கருவியாகக் கொண்டு வினை செய்தவனே அவற்றை எய்தற் குரியவன். பல்லுயிர் களைப் பதறக் கொல்லல் அறநூல்கள் பழிக்குஞ் செயல். ஆதலின், எய்தவன் பழியுடையவன் என்று சொல்ல ஏனோ தயக்கம்? அப்பழிச் சாவுகளை நேரிற்கண்டு, இறந்த உயிர்களிடம் இரக்கமும், இறவாத அவனிடம் கண்ணோட்டமுங் கொள்ளும் நீங்களே புகழ்ச்சிக் குரியவர்கள்.

(எதனையோ உள்ளத்துக் கொண்டு இங்ஙனம் புறம்பே தன்னைப் புகழ்கிறார்கள் என்று எண்ணியவனாய்) பெரும் பாணரே! பிறரிடம் இரந்து இரந்து எவ்வளவு நாள்தான் காய் பசியைத் தீர்த்துக் கொள்வீர்கள். வெயிலில் அலைந்து கால் களும் செருப்புப்போல் தேய்ந்து விட்டன; கண்களும் ஒளி மழுங்கின. அற்றமறைக்கும் அளவே ஆடையணிந்திருக்கிறீர் கள். இளமையிலேயே முதுமையடைந்து விட்டீர்கள். எவ்வுயிரும் விரும்பும் இசைக் கல்வியுடைமையினாலே, உயிரில்லாத வறுமையும் உங்களை விரும்பி உயிர்பெற்றிருக்கின்றது. நாங்கள் வறியராவதாயினும், உங்களை வண்மைச் செல்வராக்குவதே எங்கள் தொழில்.

(மார்பிற் கிடந்த முத்தாரத்தைக் கழற்றி அவர் மார்பிற் போடுகிறான். மற்றைய பாணர்கள் அது தங்கள் கழுத்திடைக் கிடப்பதேபோல் மகிழ்கிறார்கள்.)

வன்பரணர்: வள்ளலே! இந்த அம்பை உடையவரிடஞ் சேர்ப்பிக்கவேண்டுமென்றுதான் எடுத்துக்கொண்டுவந்தோம். இதனை உடைய வல்வில்வேட்டுவர் தாங்களே யாவீர். தங்களைக் காணுமுன், இதனை எய்தாரை வேறுவிதமாக எண்ணி இருந்தோம். இப்பொழுதோ கொடையிற் சிறந்த தங்களைக் கண்டு வேறு விதமாக எண்ணுகிறோம். ஆனால் இன்னும் ஓர் ஐயம்.

ஓரி: எம் புகழ்ச்சிக்கு உம் வறுமையே காரணம். ஐயம் நீர் கேட்பது இயல்புதானே. மனம் உவக்கும், முகமலரும் பொருள்தர நினைப்பினும், இவ்வமயம் காட்டில் உறைதலில் வேறு கலன்கள் கொடுத்தற் கில்லாத வறியவனாயிருக்கிறேன். (கையிலணிந்திருந்த இரு மணிக் கடகங்களையும் கொடுத்து இன்னுந்தர விரும்பினன்.)

வன்பரணர்: (பெருமகிழ்வோடு) என் ஐயம் நீங்கியது. மறத்தினுங் கொடையே விஞ்சியது என்ற தெளிவு பிறந்தது. கொடையரசே! தங்கள் குடை நிழலிற்பட்ட நாடும், இரவலர்

புரவலராகிய தங்கள் பெயரும், எங்கள் செவி குளிர மனம் இனிப்பச் சொல்லி யருளுக.

(இதனைச் செவி கைப்பக் கேட்ட ஓரி தன்புகழ் கேட்க நாணி ஒன்றுஞ் சொல்லாது மறைந்து விடுகிறான்.)

வன்பரணர்: (அவன் சென்ற திசை நோக்கித் தொழுது) என்னுள்ளம் நிறையக் கண் மறையச்சென்ற இந் நம்பி வாழிய. ஆவுராய்தற்கு நடுங் கல்லிலும் தம் பெயர் பொறிக்கும் மக்களுடைய இவ்வுலகத்து, இக் குரிசில் போல்வார் அரியரோ அரியர். புகழ்வாங்கப் பொருள் விற்கும் வாணிக வள்ளல் இவரல்லர்; மறுமையில் நற்பிறவியை அல்லது பிறவாமையைத் தரவல்லது என்று இம்மையில் கொடை செய்யும் வினையுடையாருமல்லர். குடிகாத்தல் கருதி மகனுக்குத் தன் பொருளைவிடுந் தன்மையுமல்லர். முதுமையிற் காப்பான் மகனென வளர்க்குந் தாயுமல்லர். வெயிலிற் காய்ந்தும், மழையில் நனைந்தும், பனியில் நடுங்கியும் வாடையில் உலர்ந்தும் பசி தணிக்குமளவே கூழைக் குடித்து, மானங்காக்குமளவே கோவணம் அணிந்து மரமுதலா அரசனீரு எல்லாஉயிர்க்கும் நினைப்பின்றி உழைக்கும் உழவனே இச் செம்மலுக்கு ஒப்பாவான். கல்லா மறவர் போலுங் கல்லாக் கொடையாளி. (ஏதோ ஒரு நினைவு எழ அவன் கொடுத்த முத்தாரத்தையும் கடகத்தையும் பார்க்கிறார்.) என்னே இவருள்ளத்தின் உயர்வு; இவற்றிற்கூடப் பெயரில்லையே! இவையெல்லாம் உடைமைப்பொருளில், பிறர்வைத்தஅடைக்கலப்பொருள்கள் என்ற நினைவினர் போலும். தம்மையே பிறருடைமை என்ற துறவிற்கு வந்த ஆண்டகை இவற்றைத் தமதாகக் கருதுஞ் சிறு செல்வரோ! தெரிந்துகொண்டேன். அம்பிற் பெயர் பொறியாத காரணம் அறிந்துகொண்டேன். தம் பெயரை மறத்தினும் அறத்தினும் வெளிப்படுத்த விரும்பாத மறையோரிவர். பெயரும் நாடுங் கேட்டதும், நம்கண் துணுக்குறப் பின் வாங்கினரே! அஃது அவர்க்கு ஒக்கும். போரில் நெடுமொழி கூறப் பின் வாங்கப் பொருநர், புகழ் கேட்க நாணிப் பின்வாங்கல் ஒக்கும்.

நடமாடத் தெரிந்த பிள்ளையை யாரோ எடுத்துப் பாராட்டுவர்? தன் புகழ் பரப்புவதைத் தனது தொழிலாகவும், கடனுகவும் கொண்டுவிட்டவனுக்குத் துணையாக யாரும் வாரார்; துணை வேண்டுவதுமின்று. கைப்பிள்ளையை முத்தி ஆரத்தழுவி அணைத்துச்செல்ல எல்லாருங் காதலிப்பதுபோலத் தன்னைப் புகழாதான் புகழே ஞாலத்துப் பலரால் சொல்லப்படு

மன்றோ? ஆதலின், அத் தோன்றலின் புகழை மண் தேயப் பரப்புவதே நமது பிறப்பின் தொழில்: அப்பெருமகனார் பெயரை யாழிற் பண்படுத்துவதே நங் கல்வியின் பயன்.

வெளியன்: பெயர் தெரிந்தாலும் போதும். நாடு இது வெனத் தெரிந்தாலும் போதும், இவற்றை ஏன் உடனே கேட்டீர்கள்? கேளாதிருந்தால் இவண் நெடிது தங்கியிருப்பார். கேட்டதால், கொடைஞர் கள்வன்போல் மறைந்து விட்டனர். சிறிது போழ்திருந்தாரேல், நாமும் இசைபாடி யிருப்போம்: அவரும் பண்ணில் மயங்கியிருப்பர். பின்னர்ப் பெயரும் நாடுங் கேட்டக்காற் சொல்லியு மிருப்பர்.

பண்ணன்: அதனை முன்னர்த் தெரிந்துதான் புறப்பட்டுப் போயினர் போலும்!

வன்பரணர்: தம்மைப் பற்றிய முத்தமிழையும் முனிபவர் காண் இவர்; என்றாலும் முத்தமிழ் இத்தகையோரைப் பற்றாம லிருக்குமா? பண்ணிசைத்துக் கைம்மாறு காட்டுவர் என்று கருதிச் சென்ற அவர் புகழே புகழ்! தம் புகழ் தம் முன்னர்க் கூறக் கேளா அவர் நாணமே நாணம்! செய்ந்நன்றி எனைத் துணையும் எண்ணு அவர் கொடையே கொடை!

(அப்பொழுது வில் ஏந்திய கையினராய்ச் சிலர் விரைந்து நடந்து கொண்டே, 'எம்மரசர் இவ்வழியாகச் சென்றதைக் கண்டதுண்டோ?' என்று வினவுகின்றனர்.)

வன்பரணர்: (விரைந்து) அவ் வள்ளலின் புகழ்ப்பெயர் யாதோ?

வந்தவர்கள்: (ஏளனமாக) அவர் பெயரை அறியாதிருக் கின்ற உம்பெயர் என்னவோ?

வெளியன்: (சிரித்துக் கொண்டு) இசையுலகிற் பெயர் போகிய வன்பரணர் என்றிவரை அறியாத உம்பெயர் என் னவோ?

மூவன்: (பரணர் மார்பின் ஆரத்தையுங் கைக்கடகத் தையுங் காட்டி) இக் கலன்கள் அவர் கையால் கழற்றி இவ ருக்கு எம் மனமார அணியப்பட்டவை.

வந்தவர்கள்: இவையுந் தருவார். இக்காடு கடந்து உதுக் காண் தோன்றும் கொல்லிமலை நாட்டிற்கு நீவிர் வருக. எல்லாந் தருவார்.

வன்பரணர்: (மகிழ்ந்து) உண்மை உணர்த்திய நீங்கள் யாரோ? உங்கட்கு என்ன கைம்மாறு செய்வோம்? (என்று பாடத் தொடங்குதல்)

வந்தவர்கள்: நாங்கள் அவரைப் பின் தொடர்பவர்கள். அவர் சென்ற வழிகாட்டிய உங்கட்கு......(ஒருவன் மோதிரத்தைக் கழற்றி அவர் விரற்கண் போடுகிறான். வந்தவர் எல்லாரும் விரைந்து புறப்பட்டு விடுகின்றனர். பாணர்கள் கொல்லி மலையையும் ஓரியையும் பாடிக்கொண்டு அம்பையும் எடுத்துக் கொண்டு வழி நடக்கின்றார்கள்.)

வெண்பா

உடைமை யெனப்படுவதி யாதெனில் யாதுங்
கொடைமை யிலாத குணமே—கொடைமை
உடையான் தொகுத்த துலகமே யாக
உடையான் இரப்புவனென் றோது.

11. பட்டுத் தொழில்

திரு. சி. பெருமாள்சாமி ரெட்டியார் அவர்கள்

பட்டின் ஆதி வரலாற்றைப் பற்றிய ரசமான சரித்திரம் சீனாவின் பண்டைக் காலத்து அரச குடும்பங்களின் பழங்கதைகளில் பொதிந்து கிடக்கின்றது. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை இது. சீன தேசத்து மகாராணி ஹஸி-லிங்-சி தேயிலை சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். அவள் எதிரில் மேஜையில் கொதிக்கும் தேயிலைப் பானம் வைக்கப் பட்டிருந்தது. திடீரென்று அவள் புதல்வி இளவரசி அங்கு ஒரு கூட்டுப் புழுவைக் கொண்டு வந்தாள். விளையாட்டாக அதைத் தேயிலைக் கோப்பையில் போட்டாள். என்ன ஆச்சரியம்! அக் கூட்டுப் புழுவில் உள்ள சக்திப் பொருள் நீக்கப் பட்டதும், அது நூலிழையாகப் பிரிந்துவந்தது. இச் சம்பவம் தான் முதல் முதலாகப் பட்டு நூலைக் கண்டுபிடிக்கக் காரணமாயிருந்தது. இதுதான் காலடைவில் புராதன சீனாவின் செல்வத்தின் அடிப்படையாகவும் அமைந்தது. திறமை மிகுந்த சீன தேசத்தவர் தயாரித்த தறிகளில் இப் பட்டு இழைகள் நெய்யப்பட்டன. இவ்வாறு நெய்யப்பட்ட கண்ணைக் கவரும் பட்டு ஆடைகள் மேல்நாட்டு அரசர்கள், பிரபுக்கள், சீமாட்டிகள் முதலியவர்களால் கேட்ட விலைகள் கொடுத்து ஆசையுடன்

வாங்கப்பட்டன. இந்தப் பட்டுப் பூச்சியைப் பற்றிய ரகசியத்தை வெளி நாட்டவர்கள் தெரிந்துகொள்ள அரும்பாடு பட்டார்கள். ஆனால் சீன தேசத்தவர் மிக ஜாக்கிரதையுடன் இவ்விரகசியத்தைக் காத்து வந்ததால் இது சுமார் மூவாயிரம் ஆண்டுகள் வரை சீனாவின் பெரும் அரணுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தது. பிறகு இந்தியா தேசத்து இளவரசன் ஒருவன் சீன தேசத்து அரச குடும்பத்துப் பெண் ஒருத்தியை மணந்தான். அப்பொழுதுதான் அவளுடைய ஸ்ரீதனத்தின் ஒரு பகுதியாகப் பட்டுப் பூச்சி முட்டைகளும், முசுக்கட்டை (Mulberry) மரத்தின் ஊற்றுக் கொப்புகள் சிலவும், இந்தியாவுக்குக் கொண்டுவரப் பட்டன. தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் பட்டின் சரித்திரம், மைசூர் அரசன் திப்பு சுல்தான் காலத்திலிருந்தே ஆரம்பித்திருக்கிறது என்று தெரிகிறது.

பட்டு நூல்தான் நெய்யப்படும் பொருள்கள் யாவற்றிலும் சிறந்தது என்பது மிகவும் சரியே. அதற்குள்ள தனிப் பளபளப்பு வேறு எவ்வித நூலிழைக்கும் இல்லை. நன்றாகவும், பளபளப்பான வர்ணங்களிலும் அதில் சாயமேற்றலாம். தினம் புதுப் புதுச் செயற்கைப் பட்டு நூல்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், இயற்கைப் பட்டுக்கு உலகில் உள்ள தேவை நிலையானது எந்நாளும் இதன் மதிப்பு குறையாது.

பட்டுத் தொழிலின் பொருளாதாரச் சூழ்நிலை ஒரு ரசமான ஆராய்ச்சிக்கு ஏற்றது. இதில் ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்ட மூன்று கிளைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித் தனிப் பொருளாதார அந்தஸ்து உடையவை. முட்டைகளை உற்பத்தி செய்தல் ஒரு கிளையாகும். இதில் சம்பந்தப்பட்ட அலுவல்கள் கூட்டுப் புழுக்கள் (cocoons) உற்பத்தியினின்றும் முற்றிலும் வேறுபட்டவைகள். மேலும் பட்டு இழையைச் சுற்றுதல் சம்பந்தமான கிளை பிரத்தியேகமான அம்சங்களையுடையது. இவ் வம்சங்கள் உற்பத்தித் தொழிலைக் காட்டிலும் ஆலைத் தொழிலை அதிகம் ஒத்திருக்கின்றன. இதில் முதல் பாகம், அஃதாவது பட்டுப் புழு வளர்த்தல் முசுக்கட்டைச் சாகுபடி முதலியன வீட்டுத் தொழிலாகும். விவசாயிகள் உப தொழிலாக-ஒரு குடிசைத் தொழிலாக-அதைக் கொள்ளலாம். ஒரு விவசாயியின் குடும்பத்தைச் சேர்ந்த யாவருமே கூட்டுப் புழு உற்பத்தித் தொழிலில் பங்கெடுத்துக்கொள்ளலாம். அநேகமாக, இந்தத் தொழில் ஒன்றில்தான் இரவு பகலாக, வருஷ

முழுவதும், ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்கள் யாவரும் பங்கெடுத்துக்கொள்ள முடியும்.

முசுக்கட்டை மரத்தைப் பயிர் செய்தலும், பட்டுப் புழு வளர்த்தலும் இரட்டைக் குழந்தைகள் போன்ற தொழில்கள். முசுக்கட்டை மரம் எந்தப் பிரதேசத்திலும் வளருமென்ருலும் கூட்டுப் புழுக்கள் சௌகரியமான நிலைமைகளில்தான் வளரும். ஆகையால் இத்தொழில் எல்லையின்றி விரிவடைய முடியாது. உஷ்ணநாடுகளில் பட்டுப் பூச்சியின் வளர்ச்சிக்கேற்ற தட்பமும் வெப்பமும் சமுத்திர மட்டத்திற்கு 2000 அடி உயரமுள்ள பிரதேசங்களில்தான் கிடைக்கும். அதனுல் இத் தொழில், கோயம்புத்தூர் ஜில்லாவில் கொள்ளேகாலிலும், சேலம் ஜில்லாவில் ஹொசூர் தாலுக்காவிலும், சித்தூர் ஜில்லாவில் பால்மனூர், மதனப்பள்ளி முதலிய இடங்களிலும், கோபிசெட்டிபாளையம் தாலுக்கா தலவாடி பிர்க்காவிலும் நடைபெறுகிறது.

மேலும் சீடட் ஜில்லாக்களில் (Ceded Districts) வட சர்க்கார் ஜில்லாக்களிலும் இத் தொழில் மிக்க இலாபகரமாய் நடத்தப்பட வசதிகள் இருக்கின்றன என்று சமீப ஆராய்ச்சிகள் மூலம் தெரிகிறது. இப் புதுப் பிரதேசங்களில் இப்பொழுது, முசுக்கட்டை மரம் பயிரிடுதல் ஆரம்பமாகி விட்டது.

பட்டுப் புழுவின் ஆகாரம் முசுக்கட்டை இலைதான். ஓர் ஏக்கர் நிலத்தில் மழை நீரை உபயோகித்து முசுக்கட்டை மரங்கள் பயிர் செய்வதால், ஆரம்பத்தில் சராசரியாக ரூ. 200-ம் பிறகு இதைப் பேண வருஷாவருஷம் ரூ. 100-ம் செலவு ஆகும். வருஷத்திற்குச் சராசரியாக ஓர் ஏக்கரிலிருந்து 750 ராத்தல் இலைகள் கிடைக்கும். நீர்ப்பாசன வசதி யிருக்குமானுல், கிடைக்கும் இலைகளின் நிறையை நல்ல பயிர் முறைகளைக் கையாளுவதால் இரட்டிக்கவோ அல்லது மூன்று மடங்கு பயிராக்கவோ கூடச் செய்யலாம். இந்த இலைகளை ஒரு வருஷத்தில் ஒன்றன்பின் ஒன்ருக ஏழு தலைமுறை மட்டும் புழு வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம். சாதாரணமாய் ஒரு முசுக்கட்டைத் தோட்டம் ஒரு தடவை ஆரம்பித்தால், பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு நீடிக்கும்.

புதிதாக ஆரம்பித்த முசுக்கட்டைத் தோட்டம் செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் இலைகளைக் கொடுக்க ஆரம்பிக்கும். அப்பொழுதுதான் பட்டுப் புழுக்களை வளர்த்தல் ஆரம்பிக்கப்படும். முதலில் இதற்குச் செலவும் ரூபாய் 50-க்கு மேல்

போகாது. வளர்ச்சி 'ஸ்டாண்டுகள்,' மூங்கில் பெட்டிகள், புழுக் குழிகள், வெட்டும் கத்திகள், இலைக் கூடைகள், போர் எனப்படும் தட்டுகள் விளக்கு முதலியன வாங்க வேண்டும். நாலைந்து பேர்களடங்கிய ஒரு குடியானவன் குடும்பம் வருஷத்திற்குச் சுமார் 250 ராத்தல் கூட்டுப் புழுக்களைச் சிரமமின்றி ஐந்தாறு தடவைகளாக வளர்க்கலாம். இதனால் சுமார் 300 ரூபாய் வருமானம் வரும். இதற்குக் குடியானவன், தன் வீட்டில் ஒரு பகுதியைப் புழு வளர்ச்சிக்காக ஒதுக்கி விடுவான். தேவையான அளவு பட்டுப்பூச்சி முட்டைகளை வாங்கி, மூங்கில் டிரேக்களில் (Tray) பரப்பி, அந்த டிரேக்களை 'ஸ்டாண்டு'களில் வைத்து விடுவான். முட்டைகள் பொறிப்பதற்குப் பத்து நாட்கள் ஆகும். சிறு புழுக்கள் முட்டையிலிருந்து வெளிவரும். அவைகளை உடனே சிறு தூள்களாக நறுக்கப்பட்ட முசுக்கட்டை இலைகளின்மேல் விடுவார்கள். இப் புழுக்களுக்குப் பகலில் இரண்டுமணி நேரத்துக்கு ஒரு முறையும் இரவில் மூன்று மணிக்கு ஒரு முறையும் ஆகாரம் கொடுக்கப்படும். பட்டுப் புழுக்கள் அதிக அளவில் உணவு உட்கொள்ளும். வளர வளரத் தோலை உரிக்கும். இப் புழுக்கள் முழு வளர்ச்சியடைய 25-லிருந்து 30 நாட்கள் வரையாகும். பிறகு உண்ணுவதை நிறுத்திவிட்டு நூற்பதற்குத் தயாராகும். நூற்றல் இரண்டு மூன்று நாட்கள்வரை நீடிக்கும். புழு நூற்க ஆரம்பித்த பிறகுதான் கூட்டுப் புழுக்கள் 'மகசூல்' கொடுக்கத் தயாராகிவிட்டன எனலாம்.

இன விருத்திக்கு வாங்கப்படும் கூட்டுப் புழுக்கள், எண்ணிக்கை கணக்கில் விற்கப்படும். ஆனால் நூலெடுப்பதற்கு வாங்கப்படும் கூட்டுப் புழுக்கள் நிறைக்கணக்கில் விற்கப்படும்.

இத் தொழிலில் அடுத்த பாகம் நூலெடுத்தலும் செய்தலுமாம். இதுவும் மிக முக்கியமானதே. உண்மையில் இந்தத் தொழில் மனிதனின் ஆக்க முயற்சிக்கு அதிக வேலை கொடுத்திருக்கிறது. 'ரீலிங்' (Reeling) எனப்படும் பட்டினைத் தொகுப்பது, பிரிப்பது, சுற்றுவது முதலிய வேலைகள் பட்டின் மதிப்பையே நிர்ணயிக்கும். இதற்குக் கையாளும் முறை நன்றாயிருந்தால்தான் பட்டின் இயற்கையான சிறப்பை நன்றாய் எடுத்துக் காட்ட முடியும். ஆகையால் 'ரீலிங்' முறையை உயர்ந்ததாக வைத்திருக்க வேண்டும். இந்தியாவில் பெரும் பாகம் சர்க்கா முறையால் 'ரீல்' செய்யப்படுகின்றது. சர்க்கா முறையில்,

சாதனங்களும் செய்முறைகளும் நேர்த்தியானவை. ஆகையால் இந்தக் குடிசை முறையானது மாறி பிலேசர் என்ற ஆலைத் தொழில்முறை அனுசரிக்கப்பட வேண்டும். இந்த ரீலிங் முறையைச் சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், தொழில் வியாபார இலாகா அதிகாரிகள் ஜப்பானிய ரீலிங் இயந்திரங்களை நம் நாட்டில் புகுத்தினார்கள், ஆனால் உயர்ந்த பட்டு 'பிலேசர்' முறையில்தான் தயாரிக்க முடிகின்றது. ரீல் செய்யப்பட்ட பட்டின் மதிப்பை அறிய, அதன் மீட்சித்தன்மை, அடர்த்தி, பளபளப்பு, முறுக்கு இவைகள் சோதிக்கப்படு கின்றன.

சமீபத்தில் நடந்த உலக மகாயுத்தம் இந்தியாவின் 'பிலே சர் பட்டு' உற்பத்தியைப் பெருக்கப் பெருந் தூண்டுகோலாக இருந்தது. இந்திய அரசியலார் பட்டுத் தொழிலைப் பெருக்க நடத்திய அனேக திட்டங்களின் பயனாகப் பிலேசர் பேசின் களின் (Filature Basins) எண்ணிக்கை 1939-இல் 1290 ஆக இருந்தது; 1948-இல் 5550 ஆகப் பெருகிற்று. கச்சாப் பட்டின் உற்பத்தியும் வருஷத்திற்கு 1,523,000 ராத்தலாக இருந்தது, 2,232,000 ராத்தலாகப் பெருகிற்று. அப்படியிருந் தும் நம் பட்டு உற்பத்தி இன்னும் நம் தேவைக்கு மிகவும் குறைவாகவே இருக்கிறது. இக்குறைவை ஈடுசெய்யவே, மத் திய சர்க்கார் வெளிநாட்டுப் பட்டின் இறக்குமதியைச் சற்றுத் தாராளமாகவே அனுமதித்திருக்கின்றனர்.

நம் ராஜ்யத்தில் முசுக்கட்டை மரங்கள் பயிராகும் ஏக் கர்கள் சுமார் இரண்டாயிரம் ஆகும். கொள்ளேகாலில் அரசிய லார் பிலேசர்களில் உள்ள பேசின் (Basin)களின் எண்ணிக் கையும் சுமார் ஐந்நூறு ஆகும். கொள்ளேகாலில், தொழில் வியாபார இலாகாவின் பிரிவாக, 1919-ஆம் வருஷம் 'செரிகல் சர்' (Sericulture) எனப்படும் பட்டு உற்பத்தியும் நிறுவப்பட்டது. இப்பகுதி ஒரு பட்டுத் தொழில் நிபுணரின் நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. அவருக்கு உதவியாக அநேக பயிற்சி பெற்ற நிபுணர்கள் வேறு இருக்கிறார்கள். இந்தப் பட்டுத் தொழில் அதிகாரிகள் விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களுக்குப் பட்டுப்பூச்சிகளை வளர்க்கும் விதம் அவற்றிற்கு நோய் வராமல் தடுக்கும் முறை முதலியவற் றைப் பற்றிய புத்திமதிகளைக் கூறி உதவிசெய்கிறார்கள். அவர் களுடைய கவனத்தைக்கவரும் மிகவும் முக்கியமான பிரச்சினை

எவ்வாறு பட்டுப் பூச்சி வளர்ப்பாளருக்கு நோயற்ற முட்டைகளைத் தேவையான அளவில் கிடைக்கும்படி செய்யலாம் என்பதே. ஏனெனில் பட்டுத் தொழில் முழுவதுமே நோயற்ற முட்டைகளைப் பொறுத்தே இருக்கிறது என்று சொல்லலாம். தற்போதுள்ள, முட்டைகள் தரும் ஏற்பாடு விவசாயிகளின் தேவைக்குத் தகுந்த அளவில் இல்லை. ஆகையால் அரசாங்க உதவி பெற்றுத் தனி மனிதர்களால் நடத்தப்படும், ‘கிரெயினேஜ்கள் (Grainage - பட்டுப் பூச்சி முட்டைகள் விற்கும் ஸ்தாபனம்) அரசாங்க அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ்ப் பட்டுப்பூச்சி முட்டைகள் சப்ளை செய்ய அனுமதிக்கப்படுகின்றன. மேலும் பட்டுத் தொழிலுக்காக நாளுக்கு நாள் அதிகமாகும் தேவையை நிறைவேற்ற முசுக்கட்டை பயிராகும் ஏக்கர்களை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்காக அரசாங்கத்தார் கீழ்க்கண்ட சலுகைகளை அளித்திருக்கிறார்கள்.

1. புறம்போக்கு நிலங்களைச்சாசுவதமாகஇனமாகஉரிமை செய்தல். முசுக்கட்டைக் கொப்புகளை இலவசமாக அளித்தல்.

2. முசுக்கட்டைப் பயிருக்காக ஏக்கருக்கு ரூ. 50 வீதம் விவசாயிகளுக்குக் கடனளித்தல்.

3. புதிதாக முசுக்கட்டைப் பயிருக்குக் கொண்டுவந்த நிலங்களுக்கு, மூன்று வருஷத்திற்கு வரியே இல்லாது செய்தல்.

முக்கியமான பிரதேசங்களில் அநேக பட்டுப் பண்ணைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவைகள், வெளிநாட்டு ஜாதிகளில், நோயற்ற முட்டைகளை உற்பத்தி செய்து பட்டுப் பூச்சி வளர்ப்பவர்களுக்குத் தருகின்றன. வெளிநாட்டு ஜாதிப் பூச்சிகளின் வம்சங்களைப் பாதுகாக்க மலை வளர்ப்பு ஸ்தலம் ஒன்று குன்னூரில் இருக்கிறது. வைத்தியத் தேவைக்காகப் பெருவாரியாகப் பட்டுப் புழுவிடமிருந்து குடல் நார் தயார் செய்யும் பகுதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் கொள்ளேகாலில் ஓர் ஆராய்ச்சிச்சாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கு முசுக்கட்டை மரம், பட்டுப் புழுக்கள் இவைகளைப் பற்றிய அநேக ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. எவ்வாறு முசுக்கட்டை இலைகளில் மகசூலைப் பெருக்கலாம், எவ்வாறு பட்டுப் புழுக்களுக்கு நோய்களே வராமல் தடுக்கலாம், புதுப்புது ஜாதிப்பூச்சிகளை உண்டாக்கி எவ்வாறு பட்டு நூல் மிகுந்த அளவில் தரும்படி அப்பூச்சிகளை வளர்க்கலாம் என்பவை போன்ற பல விஷயங்கள் அந்த ஆராய்ச்சிச் சாலையில் சோதிக்கப்படுகின்றன.

டாசா பட்டு உற்பத்தியும், எரி பட்டு உற்பத்தியும் செரிகல்சரின் பாகங்களாகத்தான் கருதப்படுகின்றன. இத் தொழில்களை வளர்க்க சீடட் ஜில்லாக்களிலும் வடசர்க்கார் ஜில்லாக்களிலும் தகுதியான பிரதேசங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். கிழக்கு கோதாவரி ஜில்லா, நூகூர் தாலுக்காவின் பக்கத்திலுள்ள காடுகளில் கோயா ஜாதியினரைக் கொண்டு, டாசர் பட்டு உற்பத்தியை விருத்திசெய்ய ஒரு பிரசார இயக்கம் வெங்கடபுரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது தவிர அரசாங்கத்தாரே, கொள்ளேகாலில் ஒரு 'பிலேசர்' தொழிற்சாலையை நடத்துகின்றனர். இதில் 800 வேலையாட்களுக்குப் பிழைப்பு கிடைக்கிறது. இத்தொழிற்சாலையில் கொள்ளேகாலில் உற்பத்தியாகும் கூட்டுப் புழுக்களை உபயோகித்து உயர்தரப் பட்டு தயாரிக்கப்படுகிறது.

இந்த ராஜ்யத்தில் உற்பத்தித் தொழில் இரண்டாயிரம் குடும்பங்களுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பிழைப்பைக் கொடுக்கிறது. ஆகையால் நாட்டின் செல்வத்தின் அடிப்படையாக இஃது இருக்கிறது. நம் பாரத நாட்டிற்கு வருஷத்திற்குச் சுமார் எண்பது லட்சம் ராத்தல் பட்டு தேவையாயிருக்கிறது. ஆனால் நம் நாட்டின் உற்பத்தியோ 22 லட்சம் இராத்தல்கள்தாம். ஆகையால் எல்லா விதமான விஞ்ஞான அறிவையும் முயற்சியையும் உபயோகப் படுத்தி உற்பத்தியைப் பெருக்கி நம் தேவையைப் பிறரை எதிர்பாராமல் நிறைவேற்ற வேண்டும். அரசாங்கத்தார் இதற்காக 'மத்திய சில்க் போர்டு' என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஸ்தாபனம் பட்டுத்தொழிலின் எல்லா அம்சங்களையும் அகில இந்திய முறையில் அபிவிருத்தி செய்யப் பாடுபடும். தொழில ஸ்தாபனங்களும், பட்டு உற்பத்தி செய்யும் ராஜ்யங்களும் இப் போர்டில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றன. இப் போர்டார் பட்டுத் தொழிலின் நிலைமையை அவ்வப்பொழுது கவனித்துக் கூடிய விரைவில் பட்டுத் தொழில் சுயபூர்த்தி நிலையை அடைவதற்கு வேண்டிய திட்டங்கள், நடவடிக்கைகள் இவைகளை எடுத்துக் கூறுகின்றனர். நம் ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக ஐந்து வருடத்திட்டம் ஒன்று வகுத்திருக்கின்றனர். அதில் அநேக பகுதிகள் இப்பொழுதே அமுல் நடத்தப்பட்டும் வருகின்றன. இத்திட்டம் மத்திய போர்டிலும் ஆதரிக்கப் பட்டிருக்கிறது.

வேறு ராஜ்யங்களும் இத்திட்டத்தைப் பின்பற்ற ஆலோசனை செய்து வருகின்றன. இப்போது நம் ராஜ்யத்தில், நோயற்ற முட்டைகளை விநியோகித்தல், ஒழுங்காக நடத்தப்பட்ட கூட்டுப் புழுச் சந்தைகளில் நல்ல கூட்டுப் புழுக்களை விநியோகித்தல், தற்கால முன்னேற்றமடைந்த 'ரீலிங்' முறைகளைக் கையாளுதல் முதலியவற்றால், பட்டு உற்பத்தித் தொழில் ஒரு நல்ல கட்டத்தை அடைந்துவிட்டது என்பதில் எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை. இப்பொழுது பட்டுத் தொழிலுக்கு அளிக்கப் பட்டுள்ள பாதுகாப்பு சிறிதுகாலத்தில் நீக்கப்பட்டு விட்டாலும் அதனால் பாதிக்கப்படாமல் மேன்மேலும் விருத்தியடையும் என்பதில் எனக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கிறது.

12. வீடும் கலையும்

திரு. சி. பெரியநாயகி அம்மையார் அவர்கள்

கலை என்பது என்ன என்னும் கேள்விக்கு எங்கும் விடை கிடைப்பது அரிதாயிருக்கிறது. கலை கண்ட இடங்களில் கருத்துக்கியையக் காணப்படும் பொருளைக் கொடுக்கும்; கண்டோரைக் கவரும், உள்ளத்தில் உண்டாகும் கற்பனையை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்திக் கவரச் செய்வதே கலை. அஃது அழகிய கதையிலே இருக்கலாம்; கவிதையிலே இருக்கலாம்; அல்லது ஓவியத்தில் இருக்கலாம்; நாட்டியத்திலே பேச்சிலே சாதாரண வாழ்க்கையிலே விளங்கலாம.

சாதாரண வாழ்க்கையில் அல்லது வீட்டில் கலையைக்காண முடியுமா? ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு வீட்டிலேதான் வாழ்கின்றான். ஆனால்எல்லா வீட்டிலும் கலைபரிணமிப்பதில்லை; கலை என்பது எங்குந் தோன்றுவதில்லை. இயற்கையில் கலை இருக்கிறது. ஏனென்றால், அஃது இறைவன் என்னும் கலைஞனின் படைப்பு. கலைஞன் உள்ள இடத்தில் கலை உண்டு. ஆகவே, வீட்டிலே கலையுள்ளம் படைத்த ஒருவர் இருந்து தம் உணர்ச்சியை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்தும் நிலையில் வாழ்ந்தால் கலையைக் காணலாம். மனிதன் இறைவனாகிய கலைஞனால் படைக்கப்பட்டவன். அவன் கலையுள்ளம்

படைத்தவனுகவே இருக்கவேண்டும். எல்லாருக்கும் கலையைப் பெருக்க வழியுண்டு. ஆனுல், சோம்பல், சோர்வு என்னும் துர்ப்பழக்கங்கள் மக்களின் உள்ளத்தில் இக்கலை உணர்ச்சியை அழித்துவிடுகின்றன. ஆகையினுல்தான் கலை சில வீடுகளில் மிளிர்கின்றது; சில வீடுகளில் காணப்படுவதில்லை.

வீட்டின் அமைப்பிலே கலையை எந்தெந்த நிலையிற் காணலாம் என்ருல், வீட்டினுடைய உயரத்திலோ அன்றிப் பெருமையிலோ அன்று. ஆனுல், கம்பீரமான தோற்றத்திலே, கவர்ச்சிகரமான அமைப்பிலே, கலையைக் காணலாம். அது கட்டுபவனுடைய கலையுள்ளத்தைப் பெரும்பாலும் பொறுத்திருக்கிறது.

வீட்டினுட் காணப்படும் கலைக்கு வீட்டுத் தலைவன் அல்லது தலைவி பொறுப்பாளி. சிறப்பாகத் தலைவிதான் பொறுப்பாளி என்றுகூடச் சொல்லலாம். முதலாவதாக வீட்டிலே அறைகளைச் சரியான முறையிலே தேர்ந்தமைப்பதிலே கலையிருக்கிறது. சிலர் வசதியான முறையில் தேர்ந்தமைத்திருக்கலாம். அதுவும் அவசியம். ஆனுல் கலை அதில் இருக்கமுடியாது. தேவையைப் பூர்த்தி செய்வதோடு நில்லாமல் அழகு உணர்ச்சியுடன் அமைக்கப்படவேண்டும். ஒருத்தி தன் நெற்றியிற் பொட்டிட்டுக்கொள்கிருள்; அதிலே எப்பொழுதும் கலையிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. மேல்நாட்டு உடையணிந்த பெண்ணின் நெற்றியிலுள்ள திலகம் அழகை வெளிப்படுத்துவதில்லை. ஆனுல் கரிய கூந்தல் தவழ்ந்தாடும் அழகிய நெற்றியிலே நம் நாட்டு உடைக்கு ஏற்பக் குரங்குமத்தைத் தரித்துக்கொள்ளும்போது அங்கே கலையைக் காணலாம். நெற்றிக்கேற்ற வகையில் அளவு சிறியதாகவும் வர்ணம்பொருந்தியதாகவும் பொட்டிடுவதில் ஒரு கலை இருக்கிறது. அது போலத்தான் கலை அழகு தோன்றும்படி தேர்ந்தமைக்கப்பட்ட அறைகளிலே தேவையான பொருள்களை அமைத்து வைப்பதும் ஆகும்.

சில வீடுகளிலே அழகிய வர்ணம் பூசப்பட்ட சுவர், விலையுயர்ந்த கம்பளம் விரித்த தரை, அழகிய சாமான்கள், விலையுயர்ந்த பொருள்களின் குவியல்கள் இவற்றைக் காணலாம். ஆனுல் அங்கு வெண்மாவைக் கொண்டு கோலம் இடப்பட்ட முற்றத்தில் பசுஞ் சாணத்தால் மெழுகப்பட்ட ஒரு திண்ணையில் காணப்படும் கலை சில வேளைகளிற் காணப்படுவதில்லை. காரணம், அங்கேயும் பொருள்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்

கூடியவகையிலோ, அன்றிச் செல்வத்தின் பெருமிதத்தை வெளிக்குக் காட்ட வேண்டிய அளவிலோ சாமான்கள் நிரப்பப் பட்டிருப்பதுதான். சாமான்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதத் தில், எளிய முறையிலே ஆயினும், அழகுணர்ச்சி தோன்றக் கூடிய வகையில், தேவைக்கு அவசியமான பொருள்கள் இடத் திற்கு அமைந்தாற்போல வைப்பதுதான் கலே.

சாமான்களே இடத்திற்கேற்ப அமைப்பதில் கலே மிளிர் கின்றது என்ருல், சாமான்களேப் பொறுக்கி எடுப்பதிலும் கலே காணப்படவேண்டும். விலே மலிவு என்ற காரணத்தைக் கொண்டோ, பெருமைக்காகவோ, பொருள்களே வாங்கி நிரப் பிஞல், கலேயைக் காண முடியாது. ஆனல் நம் அறையின் அமைப்பு என்ன? அந்த அமைப்பிற்கேற்ப இப்பொருள் பொருந்துமா? பொருந்துவதோடன்றி அழகு காணப்படுமா? என்று உன்னிப் பார்த்துப் பயனுள்ள பொருள்களே வாங்கு வதில் கலே இருக்கிறது என்று சொல்லலாம்.

உதாரணமாக, ஒரு நடுத்தரமான வீட்டில் போதுமான அறைகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். வீட்டி லுள்ளோர் படித்த நாகரிக வாழ்க்கையிலுள்ளவர்களுடன் பழகுகின்றவர்கள். ஆகவே, அவர்களுக்குத் தங்கள் நண்பர் கள் வந்தால் அவர்களுடன் உட்கார்ந்து அளவளாவ ஒரு நலல அறை வேண்டும். அங்கே உட்காருவதற்கு ஓர் அழகான கட் டிலே வைத்திருப்பது கலேயன்று. தங்கள் தகுதிக் கேற்பச் சில நாற்காலிகள், அவற்ருேடு பொருந்தும் ஒரு சிறிய வட்ட மேசை, மேசையின் மீது விரிப்பு, அழகிய பூக்களேத் தாங்கி நிற்கும் ஒரு சிறிய செம்பு இவற்றை ஒழுங்கான முறையில் அமைப்பதிலே கலே காணப்படுகிறது.

பல நிறப் பூக்களே எடுத்துச் செம்பிலே தண்ணீர்விட்டு வைத்துவிட்டால், கலே அங்கே காணப்படுவதில்லே. ஆனல் செம்பின் தோற்றம், பூக்களின் தோற்றம் இரண்டிற்கும் பொருத்தம் காணப்படவேண்டும். ஒடுங்கி நீண்ட பூச்செம்பில் பருத்துத் திரட்சியாக காணப்படும் மலர்களேக் குட்டையான தண்டுகளுடன் வைத்தால் அது பொருந்தி நிற்காது. அது போலவே பருத்து விரிந்த செம்பில் நீண்ட தண்டுகளுடைய மெல்லிய அல்லி போன்ற மலர்களே விட்டுவைத்தால் பொருந் தாது. நிறங்களேயும் பார்த்தே அமைத்தல் வேண்டும். ஆகவே கலே என்பது பொருள்கள் ஒன்ருேடு ஒன்று பொருந்தும் நிலே

யிலேதான் காணப்படும். மாலையில் மதியமும், மலர்களும், தென்றலும் எவ்வாறு பொருந்தி வருகின்றனவோ, அமாவாசை யில் நள்ளிரவு, இடியின் முழக்கம், மின்னலின் பிளவு இவை எவ்வாறு பொருந்தி நிற்கின்றனவோ, அவ்வாறு அறையின் தேர்வு, அமைப்பு, சாமான்களின் தேர்வு முதலியவை பொருந்தி யிருக்கவேண்டும்.

நண்பர்களுடன் பேசும் அறையைத் தவிர வேறுபல அறை கள் தனித்தனி உபயோகத்திற்காக விட்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அந்தந்த அறையில் கலை எவ்வாறு பொலியும் என்பதைப் பாக்கலாம்.

வீட்டிலே வாசிப்பு அறை ஒன்று இருக்கிறது. அதிலே கண்ணைக் கவரும் நூல்கள் நிரம்ப உண்டு; மேசை உண்டு; நாற்காலியுண்டு; அழகிய விளக்கும் உண்டு; மேலே மின்சார விசிறியும் உண்டு. இவ்வளவுபொருள்கள் இருந்துவிட்டால்கலை உண்டு என்றுசொல்ல முடியுமா? அந்த அறையினுட் செல்லும் ஒருவருக்கு உட்கார்ந்து புத்தகங்களைப் படிக்கவேண்டும் என் னும் உணர்ச்சி உண்டாகும் நிலையில் அந்த அறையிற் பொருள் களை அமைத்திருக்க வேண்டும். விளக்கு வாசிப்பதற்குப் போது மான ஒளியை உடையதாய் இருக்கவேண்டும். நடுவிலே அழ கிய மேசை, சுற்றிலும் நாற்காலிகள், விரிப்புக்கள், பூஞ்செடிகள் அத்துணை அவசியமில்லை. இங்கேயும் கலையைக் காண வேண் டும். எங்கே என்றல், அலமாரியில், அலமாரிகளை அமைத்திருக் கும் நிலையில், அதிலே நூல்களை ஒழுங்காகவும், அழகாகவும், முறை தவருமலும் அடுக்கியிருக்கும் அந்தந்தத் தகுதியில் கலை யைக் காணலாம். வீடு சிறியதாய் இருக்குமானல் கலையழகு குன்ருத வண்ணம் அதை அலுவலக வேலைகளைச் செய்யும் ஓர் இடமாகவும் கொள்ளலாம். கலையழகு அதனல் குன்றிவிடுவ தில்லை. வைத்திருக்கும் முறை சரியானதாய் இருக்க வேண்டும்.

படுக்கை அறை ஒவ்வொரு வீட்டிற்கும் இன்றியமை யாதது. நல்ல காற்ருேட்டமுள்ள அறைகளே தேர்ந்தெடுக்கப் படவேண்டும். அங்கே, கட்டில் உபயோகிக்கப்படுமானல், அதனடியில் பெட்டியோ மற்றச் சாமான்களோ வைக்கப்படக் கூடாது. உடைகளை வைத்துக்கொள்ள ஒரு சிறிய அலமாரியும், அவசியமானல் உட்கார்ந்து வாசிக்க ஒரு சாய்வு நாற்காலியும் அதற்கென ஒரு மேசை விளக்கும் இருப்பது போதும். ஆனல் அங்கேயும் அவற்றை உபயோகிக்கும் முறையில் கலையைக்

காணலாம். படுக்கை விரிப்புக்களிலே தலையணை உறையிலே கொசு வலையிலே கலையுள்ளம் 'தையலில் பரிணமிப்பதைக் காணலாம்.

பின்னர்ச் சாப்பாட்டு அறைக்குச் செல்வோம். அங்கே அவசியமான பொருள்கள் அவரவர் வழக்கத்திற்கேற்ப மாறுபடலாம். கலை வேண்டுமானால், ஒரு முறையையே அனுசரிக்க வேண்டும்; மேனாட்டு முறையையாவது, தமிழ் நாட்டு முறையையாவது அனுசரிக்க வேண்டும்.

உண்கலங்கள் பெரும்பாலும், உபயோகத்திற்கேற்றாற் போல ஒரேவிதமான வேலைப்பாடுள்ளனவாய் இருக்கவேண்டும். அவற்றைச் சுத்தம் செய்து அடுக்கி வைத்திருக்கிற நிலையில் கலை கமழ வேண்டும். பால், மோர், தயிர், பழம், சர்க்கரை, வெண்ணெய் ஆகிய பொருள்களை ஓர் அலமாரியிலே, உள்ளே எறும்பு செல்லாதபடி, கால்களிலே தண்ணீர் ஊற்ற வசதியுடைய நிலையிலே அமைத்து வைப்பது வெறும் பயன் மட்டும் அன்றிக் கலையும் ஆகும். செல்வர்கள் அதற்குப் பதில் 'ரெபர்ஜரேட்டரை' வைத்துக்கொள்ளலாம்.

சமயலறைக்குச் சென்றால், அங்கேதான் கலை முழுதும் பிரதிபலிக்க வேண்டும். ஏழையின் குடிசையானாலும் சரி, செல்வந்தர்களின் சமயலறை என்றாலும் சரி, அங்கே பொருள்களை வைக்கும் முறையில் கலையைக் காணவேண்டும். நடுத்தரமான வீட்டின்கண் சமையல் அறையிற் கலையைக்காண முடியும் என்றால், எப்படி யிருக்கவேண்டும்? ஏனைய அறைகளைவிடச் சமையலறை சற்றுப் பெரிதாய் இருந்தால் நல்லது. அடுப்பு, அதற்குமேலே புகைபோக்கி, அடிப்பகுதியிலே மழைக் காலத்தில் மட்டும் விறகுகளைக் காயவைத்துக்கொள்ளப் போதுமான இடம் இவை வேண்டும். ஆனால், தரையிலே அடுப்புகளை அமைத்துவிட்டால் இந்த வசதி ஏற்படாது. அவ்வறையிலே பொருள்களை அமைத்திருக்கும் முறை உட்சென்றவுடன் அறை விசாலமானது என்பதைக் காட்டவேண்டும். ஆனால், வேலை செய்பவர்களுக்கு அலைச்சல் அதிகம் இருக்கக் கூடாது. அடுப்பின் பக்கத்திலே சிமிட்டியாலான ஒரு மேசை போன்ற உயரமான திண்ணை தினமும் கழுவி விடக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். சமையலறையின் ஒரு மூலையிலேயே ஒரு சிறிய தண்ணீர்க் குழாய், அதன் நீர் உள்ளே தெறித்து விழாத நிலையில் ஒரு சிறிய தொட்டி, இவைகளை

வைத்திருப்பது மிகவும் நல்லது. அம்மி, மாவாட்டும் உரல் இவ்வளவையும் சமையலறையிலேயே வைத்துக் கொள்ளக் கூடிய அளவில் அறை பெரியதாய் இருப்பது நல்லது.

ஒரு பெண்ணின் கலைத்திறன், கலையுணர்ச்சி முழுதும் அவள் சமையல் அறையிலேதான் விளங்க வேண்டும். சமையல் அறையிலே மட்டுமின்றி அதனை அடுத்துள்ள பொருள்களைச் சேகரித்து வைக்கும் அறையை மிகவும் சுத்தமாக வைத்திருப்பதிலும் பொருள்களை வைத்திருக்கும் பண்டங்களை அடுக்கிவைத்திருக்கும் எளிய முறையிலும் கலை இருக்கத்தான் செய்கிறது. பொருள்களை வைக்கும் பாண்டங்கள் கூடிய மட்டும் ஒரேவிதமான வேலைப்பாடுள்ளவைகளாயும் அமைந்திருந்தால் அதில் ஒரு தனிக் கலை காணப்படும்.

வீட்டைச் சுற்றியுள்ள பாகங்களுக்குச் சென்றால், அங்கேதான் கலை தன் உன்னத நிலையில் விளங்கவேண்டும். சுற்றுப்புற அமைப்பு பிறரைக் கவரக்கூடிய நிலையில் இருக்கும் பொழுது அங்கே கலை காணப்படுகிறது.

தோட்டத்தை எடுத்துக் கொள்வோம் ; பூந்தோட்டம் அமைப்பதிலும் கலையைக் காணலாம். வீட்டின் முன்பக்கத்திற் பூந்தோட்டமும் பின்பக்கத்திற் காய்கறித் தோட்டமும் அமைக்க வேண்டும். தோட்டம் என்பது செடிகளை நட்டுப் பயிராக்குவது என்று கொள்ளமுடியாது. ஆனால் அவற்றை வரிசைப் படுத்தி முறைப்படுத்தி அமைப்பதில் கலையிருக்கிறது. தரையில் வைக்கவேண்டிய செடிகளை அவைகளின் தோற்றம், நிறம் முதலியவைகளுக்கேற்ப. ஒழுங்குப்படுத்தித் தொட்டிகளில் நட்டு வைத்தலில் தனிக்கலை காணப்படுகிறது. மேலும் பாத்திகளின் இருகரைகளிலும் வெட்டிவிடக்கூடிய குட்டையான செடிகளை வைத்து அவைகளை அழகாக வெட்டிவிடுவதில் கலை காணப் படுகிறது. பின்னிப் பின்னி அடர்ந்து வளர்ந்து ஒழுங்கற்று நிற்கும் செடிகளை எவ்வளவு அழகான முறையில் வெட்டி வளர்க்கின்றார்கள் என்பது திருவனந்தபுரம், பங்களூர், நீலகிரி போன்ற இடங்களிற் சென்று பார்த்தால் நன்கு தெரியும்.

இவ்வாறு வீட்டில் பல பகுதிகளைப் பலவிதமாக வைத்திருப்பதால் என்னவிதமான கலையைக் காண்கிறோம்?

அங்கே கவிதையிலே காணும் கலை, சிற்பத்திலே காணும் கலை, சித்திரத்திலே காணும் கலை, ஆகிய பல கலைகளையுங் காண்கிறோம்.

கவிதையிலே காணும் கலையை எந்த நிலையில் காண்கிறோம் என்றால், அதுதான் வீட்டை அமைக்கும் முறையில், வீட்டில் பொருள்களை அமைக்கும் முறையில் கலை உள்ளத்தின் கற்பனைத் திறனைக் காண்கிறோம். இலக்கியத்திலே அல்லது கவிதையிலே காணப்படும் கலையின் தோற்றமும், வீட்டின் பொருள்களை அமைக்கும் முறையிலே காணப்படும் கலையின் தோற்றமும் ஒன்றே.

சித்திரக்கலையை அல்லது ஓவியக்கலையை நம் வீட்டிலே அழகுபடுத்துவதற்காக உபயோகிக்கும் படங்கள், விரிப்புகள், தொங்கல்கள் முதலியவைகளில் காண்கிறோம். சித்திரத் தையல்கள் வீட்டின் அழகை உயர்த்துகின்றன; ஆனால் அவைகளை உருவாக்கும் நிலையில் முழுச்சித்திரக் கலை காணப்படுகிறது. இயற்கையின் அழகைச் செயற்கை வாயிலாகக் காட்டுவதே ஒரு கலையன்றோ?

அடுத்தாற்போல, சிற்பக் கலையை எங்குக் காண்கிறோம்? அதை வீட்டைச் சுற்றியுள்ள தோட்டங்களிலே, செடிகளை நாம் வெட்டி விடுகின்ற நிலையிலே காண்கின்றோம். தோட்டத்திலே சிற்பக்கலையை மட்டும் காண்கின்றோம் என்று சொல்லுதல், சரியன்று. அங்கே கற்பனைக்கும் இடமுண்டு. ஆகவேதான் வீட்டிலே கலை, வீட்டின் அமைப்பிலே கலை, பொருள்களிலே கலை, பொருள்களை அமைக்கின்ற முறையிலே கலை, அகத்திலே கலை, புறத்திலே கலை, எங்கும் கலை என்று கூறுகிறோம்.

கலையுணர்ச்சியை எவ்வாறு தோற்றுவிக்கவேண்டும் என்றால், புதிதாக உண்டாக்கவேண்டிய அவசியமில்லை. இறைவன் படைத்த எல்லாப் பொருள்களிலும் கலை உண்டு. அறிவுள்ள பொருள்களிலே கலையுடனே, கலையுணர்ச்சியும் உண்டு. ஆகவே அக்கலையுணர்ச்சியை எழுப்பி விடுவதின் மூலம் கலையைப் பெருக்கவேண்டும்.

கலையின் பொலிவு நிறைந்த இடங்களைப் பார்க்க நேரிடுவதால் கலை உணர்ச்சி தூண்டப்படுகிறது. பலரோடு பழகுவதால் கலையுணர்ச்சி ஏற்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகச் சோம்பல், சோர்வு, ஆகியவை நீங்கி உழைப்பு ஊக்கம் ஆகியவை ஏற்படும்போது தொழிலிலே உள்ளம் ஈடுபடுகிறது. தொழில் சிறக்கும் நிலையில் கலை ஏற்படுகிறது.

வீட்டிலே மகளிர் வேலைக்காரர்களிடம் எல்லாப் பொறுப்பையும் ஒப்புவித்து விட்டு நிம்மதியாய் இருக்கலாமென்று நினைக்

கும் தவருன எண்ணம் நீங்கினுல்தான் எல்லாருடைய வீட்டி லும் கலை கமழும். வேலைக்காரர்களைக் கொண்டு வேலைகளைச் செய்ய வைத்துப் பொறுப்பை மட்டும் தாங்களே ஏற்று நடத்த வேண்டும். அப்பொழுதே வீட்டிலே கலை நிறைந்திருக்கும். கலை நிறைந்த வீட்டிலே வாழ்வு மகிழ்ச்சியா யிருக்கும். மகிழ்ச்சி நோயைப் போக்கும்; நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வ மாகும்.

ஆகவே, எத்தகைய வாழ்விற்கும் கலை அவசியம்; அதுவே அடிப்படையென்றே கூறலாம். எனவே, கலை நிறைந்திருந்தால் வீடு, வீடாகும் அன்ருே?

செய்யுட் பாடக் குறிப்புரை

பொது

I. கடவுள் வாழ்த்து

1. 'இச்செய்யுளை இயற்றிய தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்; பல்லாண்டுகளாக நாட்டுக்கும் மொழிக்கும் தொண்டாற்றி வந்த பேரறிஞராவர். இவர் சென்னையைச் சார்ந்த ராயப்பேட்டையில் வசித்துவந்தார். தொழிலாளர் குறைகளை நீக்குவதற்கும் இவர் அரும்பாடு பட்டவர்; பெண்கள் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உழைத்தவர். இவர்தம் இனிய உரைநடை நூல்களும், செய்யுள் நூல்களும் மாணவர்கள் படித்து இன்புறத் தக்கவை.

இச் செய்யுளால் ஆசிரியர் எம்மதமும் சம்மதம் என்னும் பொது நோக்கு உடையவர் என்பது புலனாகும்.

நஞ்சை உடையவர் - சிவபெருமான். சிலுவையில் நின்று செந்நீர் சிந்திய வர் - ஏசுநாதர். அரசை நீத்தவர் - புத்தர். மாடு மேய்க்க விரும்பினவர் - திருமால். செந்நீர் - இரத்தம். இலகினை - விளங்கினாய். நீத்து - துறந்து.

2. இச் செய்யுள் குறுந்தொகை என்னும் கடைச்சங்க நூலிலிருந்து எடுக்கப் பெற்றது. இஃது எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. அவை: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். குறுந்தொகை நாலடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் உடையது. இது நானூறு செய்யுட்களைக்கொண்ட ஓர் அகத்திணை நூலாகும். இச் செய்யுளை இயற்றியவர் பாரதம் பாடிய பெருந் தேவனார். இஃது இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளாகும். இவரது கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, ஐங்குறு நூறு முதலிய பிற நூல்களிலும் காணப்படும். இவர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர்.

தாமரை புரையும் - தாமரையைப் போன்ற. காமர் - அழகிய, விருப்பமான அன்ன - போன்ற. குன்றி - குன்றிமணி. பக - பிளக்க. ஏமம் - இன்பம். வைகல் - தினமும். எய்தின்று - அடைந்தது. உலகு - உலகத்தில் உள்ள உயிர்கள்; இடவாகுபெயர்.

3. இச் செய்யுளும் பாரதம் பாடிய பெருந்தேவனாராலேயே இயற்றப் பெற்றது.

வாலிழை - தூய்மையான அணி. முகிழ்த்தன - தோன்றின. ஒருவன், இருதாள், மூவகைவுலகு என எண்ணுப் பெயர்கள் வந்த நயங் காண்க. முரண் தொடை.

4. இப் பாடல் ஆழ்வார்கள் பன்னிருவர் பாடிய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் நூலிலிருந்து தொகுக்கப் பெற்றது. இச் செய்யுளை இயற்றி யவர் குலசேகர ஆழ்வார். இவர் சேர நாட்டை ஆண்ட மன்னர். இச்செய்யுள் இவர் இயற்றிய 'பெருமாள் திருமொழி' என்னும் பகுதியில் இருக்கின்றது. இவரது காலம் 8-ஆம் நூற்றாண்டு. 9-ஆம் நூற்றாண்டு என்று கூறுவாருமுளர். இவர் இராமபிரானிடத்தில் என்றும் நீங்காத அன்புடையவர்.

இரிய - நீங்க. துத்தி - பாம்பின் படத்தில் உள்ள புள்ளி. ஆர்ந்த - பொருந்திய. பணம் - பாம்பின் படம். அரவரசன் - பாம்புகளுக்கெல்லாம் அரசனாகிய ஆதிசேடன். பொன்னி-காவிரியாறு, காரணப் பெயர். கண்ணிணை-இரண்டு கண்கள்.

5. இச் செய்யுள் ‘ குண்டலகேசி ’ என்னும் பௌத்த நூலில் காணப்படும் கடவுள் வாழ்த்து ஆகும். இதனைப் பாடியவர் இன்னார் என்று தெரியவில்லை. இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. ஐம்பெருங் காப்பியங்களாவன - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். இச்செய்யுள் சமரச நோக்குடையது.

பெருமைக்கண் - பெருமை பொருந்திய வழியில். நன்றே நினைந்தான் - நன்மையானவற்றையே நினைப்பவன். குணமே மொழிந்தான் -பிறருக்கும் நல்ல அறங்களையே எடுத்துக் கூறியவன். அன்றே இறைவன் - இப்பெருமைகளை உடையவனன்றோ தலைவன் ? சரணம் - அடைக்கலம்.

கலைமகள் வாழ்த்து

6. தமிழர்களுக்கு நாட்டுப் பற்றும், புத்துணர்ச்சியும் ஊட்டிய கவிஞர்களுள் பாரதியார் தலைசிறந்தவர். இவரைப் புதுமைக்கவி, புரட்சிக்கவி, உயிர்க் கவி, அமரகவி, தேசியகவி, வரகவி என எப்படிப் பாராட்டினாலும் பொருத்தமாகவே இருக்கும். பாரதியார் பிறப்பிடம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரமாகும். இவர் தம் பெற்றோர் சின்னச்சாமி ஐயரும் இலக்குமி அம்மையாருமாவர். இவர் கி. பி. 1882 முதல் 1921 வரையில் வாழ்ந்தார். இவர் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு முதலிய பாடல் நூல்களும், ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை நூல்களும் எழுதியுள்ளார்.

தீமை காட்டி - தீமை இன்னதென்று விளக்கிக் காட்டி. உய்வம் - வாழ்வோம்.

தமிழ்த்தாய் வாழ்த்து

7. இப்பாடல் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் இயற்றிய மாரிவாயில் என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றது. இது பாண்டியன் மகள் ஒருத்தி தன் கணவனாய அருச்சுனனிடம் மேகத்தைத் தூதனுப்புவதாக இயற்றப்பட்ட ஒரு சிறு நூலாகும். நாவலர் அவர்கள் பல்லாண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

தெய்வதம் - தெய்வம். தனி - ஒப்பற்ற. தகவு - தகுதி. சீர்த்த - சிறந்த. துமி - துளி. அலவன் - சந்திரன்.

II. நீதிப் பகுதி

1. திருமந்திரம்

பன்னிரண்டு திருமுறைகளில் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகச் சைவ சமயத்தவரால் கொண்டாடப் பெறுகின்றது. இதில் ஞானக் கருத்தை

உட்கொண்ட மூவாயிரம் பாடல்கள் அடங்கியுள்ளன. இது மிகவும் பழைமை யுடையது. இதனை இயற்றி யருளியவர் திருமூல நாயனார். இவரை நந்தி தேவரின் மாணவர்களில் ஒருவர் என்பர்.

1. சித்தம் - உள்ளம். நமன் - யமன்.

2. கடனன்று - தகாது, கடமையன்று.

3. சிவம் - கடவுள். அறிகிலார் - அறியவில்லை.

4. ஆ - பசு. பாவை - பெண். திருவேடத்தார் - சிவவேடம் பூண்டவர்கள். காவலன் - மன்னன்.

5. ஆய்வரும் - உண்டாகும். அறுமின்கள் - விட்டுவிடுங்கள்.

2. பழமொழி

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு பழமொழியைக் கொண்ட நானூறு செய்யுட்களால் ஆன நூலாகையால் இது பழமொழி நானூறு எனவும் வழங்கும். இதன் ஆசிரியர் முன்றுறை யரையனார். இவர் சமண சமயத்தவர். இவர் காலம் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டு என்பர்.

1. தொக்கக்கால் - கூடினராயினும். மா இரு - மிகவும் பெரிய. பாய் இருள் - பரவிய இருள். மதி - நிலா. ஞாலம் - உலகு.

2. வழங்கல் - பிறருக்குக் கொடுத்தல். துய்த்தல் - தான் அனுபவித்தல். தேற்றாதான் - தெளிந்து செய்யாதவன். தழங்கு - ஒலிக்கின்ற. வேய் - மூங்கில்.

3. கரப்பவர் - ஒளிப்பவர். தூங்கு - செறிந்த. இறை - இறைத்தல்.

4. நெடுவரை - பெரிய சக்கரவாள மலை. ஈண்டிய - தொகுதியாக உள்ள. கல் தேயும் - மலைகள் தேய்வடையும். வடு - பழி. ஆழி - கடல்.

5. நெடியது - பல காலத்துக்குப் பின்னால் உண்டாகும் பயனை. மன்ற - நிச்சயமாக. அடியுளே - அதே நிலைமையில்.

3. புறநானூறு

புறநானூறு சங்கத்தொகை நூல்களில் எட்டுத் தொகையைச் சேர்ந்தது. புறப்பொருளைப் பற்றிக் கூறும் நானூறு செய்யுட்களைக் கொண்ட நூலாகை யால் இதற்குப் புறநானூறு என்று பெயர். புறநானூற்றுச் செய்திகளால் பண்டைக்கால அரசர், மக்கள் முதலியவர்களின் நடையுடை பாவனைகளையும், வீரம், அரசியல், வாணிபம் முதலியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். இது புறம் எனவும், புறப்பாட்டு எனவும் வழங்கும்

1. இந்திரர் - தேவர்கள். தமியர் - தனித்தவராய். தாள் - முயற்சி. முயலுநர் - முயல்வோர். கொள்ளலர் - பெறமாட்டார். அயர்விலர் - சோர்வு இலர். மாட்சி - பெருமை.

2. யாதும் - எல்லா ஊரும். கேளிர் - சுற்றத்தினர். தீது - தீமை. நன்று - நன்மை. வானம் - மழை. தலைஇ - பெய்தலால். ஆனாது - அமை யாமல். பொருது - அலைத்து. மல்லல் - செழிப்புடைய. புணை - மிதவை. முறை - ஊழ். காட்சியில் - நூலால்.

3. உயிர்த்து - உயிராக உடையது. மலர்தலை - விரிந்த இடத்தை யுடைய. அறிகை - அறிவது. தானை - படை. உயிரைக் காக்கும் நெல்லும்

நீரும் மன்னன் முறையுடன் காப்பினல்லது உளவாகா என்பது இதனுல் பெறப்படும்.

4. ஒருதிசை - ஓரிடத்தில். ஒருவனை உள்ளி - ஒருவனை நினைத்து. பரிசில் மாக்கள் - பரிசில் பெறும் மனிதர். வரிசை - முறைமை. மா வண்தோன்றல்- சிறந்த கொடைத்தன்மையுடைய தலைவனே. நற்கு - நன்ருக. பொது நோக்கு - எல்லோரையும் ஒப்ப நோக்குதல். ஒழிமதி - விட்டுவிடு. புலவர் மாட்டு - புலவர்களிடத்தில்.

4. திருக்குறள்

திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆக்கப்பெற்றது; எல்லோரும் விரும்பி ஏற்கும் இனிய கருத்துக்களைக் கொண்டது; அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களை உடையது; பல நூலாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப் பெற்று வருவது; உலகில் பிறமொழி வல்லுநர்களும் பாராட்டி, அவரவர்கள் மொழிகளில் பெயர்க்கப் பெற்றது; பொதுமைக் கருத்துக்களால் வான்புகழ் பெற்று இலங்குவது. இந்நூலின்கண் 1,330 குறட்பாக்கள் உள்ளன.

இந்நூலை இயற்றியவர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். இவர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தவர். சிறந்த அறிஞர்; நிறைந்த புகழாளர். இவரது வாழ்க்கை வரலாற்றைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளத் தக்க உறுதியான உண்மைச் சான்று, இதுவரை எதுவும் கிடைத்திலது. ஆனுல், இவர் மதுரையிலோ—மயிலாப்பூரிலோ வாழ்ந்திருக்க வேண்டும்; ஒரு தமிழ்ப் பெரு வேந்தனின் உட்படுதொழில் தலைவராய் இருந்திருக்கவேண்டும்—என்பது தற்காலத் தமிழறிஞர் பலரின் துணிபு.

1. வேண்டுதல் - விரும்புதல் (விருப்பு) × வேண்டாமை - விரும்பாமை (வெறுப்பு). யாண்டும் - எப்பொழுதும், எவ்விடத்தும். இடும்பை - துன்பம்.
2. வான் - மழை. ஒழுக்கு - ஒழுக்கம்.
3. அந்தணர் (அம்+தண்+அர்) - அருளாளர். செந்தண்மை - கருணை.
4. பொன்ரு - அழியாத. துணை - பற்றுக்கோடு, பாதுகாப்பு.
5. நோற்பார் - தவம் செய்வார்.
6. தகை - பெருமை. சோர்வு - தளர்ச்சி, ஊக்கமின்மை.
8. வன்பாற்கண் - வலிய பாலை நிலத்திலே, வற்றல் மரம் - உலர்ந்த மரம்.
9. இணைத்துணைத்து - இவ்வளவினது.
10. ஈரம் - இரக்கம், அன்பு. அளை இ - கலந்து. படிறு - வஞ்சகம்.
11. கேண்மை - உறவு. துப்பு - உதவி.
12. இல்லல்ல - இல்லாதவை யல்ல. கோடாமை - சாயாமை.
13. ஐந்து அடக்கல் - ஐம்பொறிகளை அடக்கிக் கொள்ளுதல்.

[ஐம்பொறிகள்: மெய், வாய், கண், மூக்கு, செவி.] ஏமாப்பு - பாதுகாப்பு.

14. ஒல்கார் - சுருங்கார். உரவோர் - மனவலியாளர். ஏதம் - குற்றம், துன்பம். படுபாக்கு - உண்டாதல்.
15. மிகுதி - செருக்கு. மிக்கவை - தீயவை. தகுதி - பொறுமை.

16. அழுக்காறு - பொறாமை. ஒன்னார் - பகைவர்.
17. பொய்த்து - கண்டபோது புகழ்ந்து. அறம் - அறநூல். ஆக்கம் - மேன்மை, சிறப்பு.
19. அடல் - வருத்துதல்.
20. ஒப்புரவு - தியாகம், உதவி. கோள்தக்கது - கொள்ளத்தக்கது.
21. எவ்வம் - இழிவு, துன்பத்தை மிகுவிக்கும் இழிவு.
22. வசை - இகழ்ச்சி X இசை - புகழ்.
23. மன்னுயிர் - உடம்போடு நிலைபெற்ற உயிர். ஓம்பி - காத்து.
24. நோன்றல் - பொறுத்தல். உறுகண் - துன்பம். உரு - இலக்கணம், அமைப்பு.
25. படிறு - வஞ்சகம். நகும் - எள்ளி நகைக்கும், இகழ்ந்து சிரிக்கும்.
27. வெகுளி - கோபம்.
28. போற்று - காவாத. பேணாத.
30. சாக்காடு - இறப்பு, சாதல், மரணம்.
32. மெய்ப் பொருள் - உண்மைப் பொருள்.
33. தூய்மை - பரிசுத்தம்.
வாய்மை - உண்மை, மெய்ம்மை.
தூஉய்மை, வாஅய்மை - அளபெடை.
34. துய்த்தல் - அனுபவித்தல். தொகுத்தார் - சேர்த்தார்.
35. அளி - இரக்கம், அருள், கருணை. ஓம்பல் - பேணல், காத்தல்.
36. சாந்துணையும் - இறக்கு மளவும்.
38. எவ்வது - எங்ஙனம், எப்படி. உறைவது - வாழ்வது.
39. நயவற்க - விரும்பாதே. வியவற்க - வியந்து மதிக்காதே. நன்றி - நன்மை.
40. சூழ்வார் - சூழ்ந்திருப்போர் (ஐம்பெருங்குழுவும் - எண்பேர் ஆயமும்). சூழ்ந்து கொளல் - ஆராய்ந்து கொள்க.
41. ஊங்கு - மேலான, மிகுந்த. படுப்பது - உண்டாக்குவது, தோற்றுவிப்பது. படுப்பதூஉம் - இன்னிசை அளபெடை.
45. எள்ளற்க - இகழாதிருப்பாயாக.
46. தேறற்க - தெளியாதொழிக.
48. பொச்சாப்பு - மறதி. நிரப்பு - வறுமை.
49. முட்டா - முட்டுப்பாடில்லாமல், தவறாமல். முறை - செங்கோன்மை.
50. கூழ் - பொருள். குடி - குடிகள், மக்கள். கோடி - வளைந்து.
51. ஓச்சி - செலுத்தி. நெடிது ஆக்கம் - நிலைத்த செல்வம்.
52. கருமம் - செயல். கண்ணோட - இரக்கங்கொள்ள, அருள் நோக்கம்செய்ய.
53. ஒற்று - ஒற்றர். ஒற்றி - வேவு பார்த்து.
54. தள்ளினும் - கை கூடாது போயினும். நீர்த்து - தன்மைத்து.
55. மடி - சோம்பல். ஊர - நெருங்க.
56. உப்பக்கம் - புறமுதுகு, புறம். உலைவு - தளர்வு. தாழாது - குறையாது. உஞற்றுபவர் - முயல்வோர்.
57. மேல் - மேலோர். இடும்பை - துன்பம். இலக்கம் - இலக்கு, குறி. கையாறு - துன்பம்.

58. மதிநுட்பம் - அறிவுக் கூர்மை.
59. இகல் - பகை, மாறுபாடு.
60. இளிவந்த - கீழ்மையானவற்றை. நடுக்கு - துளக்கம், அசைவு. காட்சியவர் - அறிஞர்.
61. திட்டம் - உறுதியான தெளிவு, வலிமை.
62. இருள் தீர - ஐயம் நீங்க, மயக்கம் தீர.
63. கண் அஞ்சான் – கோபக் கண்ணுக்குப் பயப்படாதவன்.
64. தீக்காய்வார் குளிர் காய்வார்.
65. நுண்ணியம் - நுட்ப அறிவுடையோம். அளக்கும் கோல் - அளவு கோல்.
67. மிக்கார் - தன்னைவிடக் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் மிகுந்தவர்.
68. தலை - முதன்மை.
69. மாட்சித்து - மாட்சிமை (பெருமை) யுடையது. அரண் - பாதுகாப்பு.
70. பொருளாக - பொருட்படுத்த
71. அடற்றகை - அடல் தகை, பகைவரை அழிக்கும் பண்பு (திறமை). பாடு - பெருமை, சிறப்பு.
72. புரந்தர் - ஆட்சி செய்து பாதுகாத்தோர். கோட்டக்கது - கோள் தக்கது, கொள்ளத்தக்கது.
73. ஆறு - நல்வழி. உய்த்து - செலுத்தி. உழைப்பது - வருந்துவது.
74. அடுங்காலை - கொல்லும் பொழுது.
75. கெழுதகைமை - நிலைத்த உரிமை.
77. சாப்புல்லல் - அறவே நீங்குதல்.
78. பேதை - அறிவிலி.
79. காணாதான் - பிறரால் அறிய முடியாதவனை. காட்டுவான் - தெரிவிக்கத் துணிவோன். தான் காணான்-அவன் தானே அறியாதவனாவான். தான் கண்டவாறு - தான்தெரிந்த வழியில் (முறையில்).
80. இகலான் - பகைமையால் X நகலான் - நட்பால். நன்னயம் - நல்ல நீதி.
81. மன்ற - நிச்சயமாக. மாணாத - மாட்சிமை யல்லாத.
82. காழ்த்த விடத்து - முற்றிவிட்ட பொழுது. களையுநர் - வெட்டி நீக்குவோர். முண் மரம் - முள்ளையுடைய மரம் (கருவேல்).
84. கூற்றம் - உடலையும் உயிரையும் பிரித்து வேறு வேறாகக் கூறுபடுத்தும் நிலைமை, எமன் தன்மை. விளித்தற்று - அழைத்தது போன்றது.
86. தூண்டிற் பொன் - தூண்டலின் நுனியில் கட்டப்படும் கரும் பொன், (இரும்பு) முள்.
87. கழிபேர் இரையான் - மிகுதியாக உண்பவன்.
89. பீடு - பெருமை, சிறப்பு.
90. அற்றம் - இழிவு அவமானம்.
91. தலையல்லார் - இழிந்தவர், நடுநிலைமையில்லார்.
93. நச்சப்படாதவன் - விரும்பப்படாதவன் (நச்சுதல் – விரும்புதல்) நச்சு–நஞ்சு. நச்சுமரம் - எட்டி மரம்.

94. துறப்பர் - நீக்குவர் X துறவார் - நீக்கார்.
95. கைதூவேன் - கையொழியேன்.
96. கட்டபின் – களைகட்டபின், களை நீக்கிய பின்பு.
97. நெருநல் - நேற்று. நிரப்பு - வறுமை.
98. கரத்தல் - மறைத்தல், ஒளித்தல், மாட்டு - இடத்தில்.
99. புற்கை – கூழ். தாள் முயற்சி.
100. கயவர் - கயமைத்தன்மை யுடையோர், கீழோர்.

III. தொடர்நிலைச் செய்யுள்

1. சிலப்பதிகாரம்

கண்ணகியின் வஞ்சினம்

சிலம்பு காரணமாகப் பாடப்பெற்ற நூலாதலின் இதற்குச் சிலப்பதிகாரம் என்று பெயர். சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகும். இது கோவலன், கண்ணகி இவர்களின் வரலாற்றைக் கூறும் சிறந்த நூலாகும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ச் சுவையும் மிக்கது இந்நூல். இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். இவர் சேரலாதனின் மைந்தர்; சேரன் செங்குட்டுவனின் இளவல். இளமையிலேயே துறவு பூண்டமையின் இவர் அடிகள் என்று வழங்கப் பெற்றார். இவர் காலம் கி. பி இரண்டாம் நூற்றாண்டு என்பர். மணிமேகலை ஆசிரியராய மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் இளங்கோவடிகள் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவராவர்.

இப்பாடப் பகுதி மதுரைக் காண்டத்திலிருந்து எடுக்கப்பெற்றது. கண்ணகியின் சிலம்பை விற்கச் சென்ற கோவலன் பாண்டிய மன்னனால் ஆராயாமற் கொலை செய்யப்பட்டான். கண்ணகி தங்கி இருந்த ஆயர் சேரியில் பல தீச்சகுனங்கள் ஏற்படுவதைக் கண்டு ஆயர் மகளிர் 'குரவைக் கூத்து' என்னும் விழாவைக் கொண்டாடிக் கண்ணனை வழிபடலாயினர். அக்கூத்தின் முடிவில் ஐயை என்னும் ஆயர் மகள் கோவலன் கொலையுண்டு இறந்த செய்தியைக் கண்ணகிக்குத் தெரிவித்தாள். அது கேட்ட கண்ணகியின் வருத்தமும் வஞ்சினமும் இப்பகுதியில் விரித்துக் கூறப்படுகின்றன.

1. ஆயர் முதுமகள் - மாதரி. ஆடியசாயலள் - அசையும் சாயலை உடையவள்; இது ஐயையைக் குறிக்கும். மாதரி என்பவள் ஆயர் தலைவனின் மனைவி.

2. கண்ணி - மாலை. 3. நீடு நீர் - பரந்த நீர்ப்பகுதி. 4. துறைபடிய - நீராட. 5. ஊர் அரவம் - ஊரில் எழுந்த சொல். 9. தான் - கண்ணகி. 10. எல்லாவோ - தோழியே. (ஓகாரம் இரக்கப் பொருளில் வந்தது) 12. ஊது உலை - உலையில் ஊதும் துருத்தியின் வாய். 14. ஏதிலார் - அயலவர். 15. அரசு உறை கோயில் - அந்தப்புரம். ஞெகிழம் - சிலம்பு. 18. குரை கழல் - ஒலிக்கும் வீரக்கழல். 20. பொங்கி - சினந்து. 21. திங்கள் - சந்திரன். கேள்வன் - கணவன். 23. எங்கணை என்ன - நீ எவ்விடத்திற் சென்றாய் என்று.

இணைந்து - வருந்தி, 24. காணிகா - காண்பாயாக. 24. வாய்வதின் வந்தகுரவை - அறிவுக்குப் பொருந்துமாறு எடுத்த குரவை. ஈண்டிய - கூடிய. 26. கேட்டீமின்- கேளுங்கள். பாய்திரை - பரந்த கடல் சூழ்ந்த. வேலி-நிலம். படுபொருள் - உண்டானபொருள். 28. காய் கதிர்ச்செல்வன் - சூரியன். 30. ஒருகுரல் - அசரீரி. 32. ஈதொன்று - இஃது ஓர் அநியாயம். 34. விலை பொருட்டால் - விலை கொடாமைக்காக. சூரியனையுஞ் சான்று காட்டி இவன் தீதிலன் என்னும் நல்ல வார்த்தை கேட்பனென்றமையால், அநீதி புரிந்தார்கள் என்று எல்லோருக்கும் தோன்றிற்று. 34. மாதர்த் தகைய-தம் காதலர் விரும்பத் தக்க. 40. நோதக்க- வருத்தம் கொடுப்பனவற்றை. 45. நம் பொருட்டால் - நம்மைக் கெடுத்தற் பொருட்டால். 46. வம்ப-புதுமையையுடைய. 47. ஐயரி உண்கண்-வியக்கத் தக்க செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களை யுடையவள். 48. தெய்வமுற்றாள் - தெய்வத்தன்மை யுற்றாள். 49. இனைந்து ஏங்கி - மிகவும் வருந்தி. 51. கம்பலை மக்கள் - வேறுசிலர். 52. தான் - கோவலனைக் குறிக்குஞ் சொல்.

2. பெரிய புராணம்

அப்பூதியடிகள் புராணம்

சேக்கிழார் தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றினார். இவர் இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பது. ஆயினும் பிற்காலத்தில் குடிப்பெயரே இவருக்கு வந்து அமைவதாயிற்று. இரண்டாம் குலோத்துங்கன் இவர்தம் அறிவாற்றலை யுணர்ந்து முதன் மந்திரியாக்கிக் கொண்டான். பின்னர், சிவனடியார்களின் திருத்தொண்டின் நெறிவாழ, சுந்தரர் திருத்தொண்டத்தொகையினையும் நம்பியாண்டார் நம்பியின் திருவந்தாதியினையும் துணைகொண்டு பெரிய புராணத்தைப் பாடினார். இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது. செயற்கரிய செய்த சிவனடியார்கள்தம் வரலாற்றினைக் கூறுதலான் பெரிய புராணம் என்ற பெயர் வந்தது.

அப்பூதியடிகள் புராணம் :—பெரிய புராணத்தில் திருநின்ற சருக்கத்தில் வருகின்றது. அப்பூதிநாயனாரது வரலாற்றைக் கூறுவது.

1. வாச நிறை - மணம் நிறைந்த. மனந்தழைப்ப - மனம் மிகவும் மகிழ. அது நேர்ந்தார் - அதற்கு உடன்பட்டார். 2. திருமனையார் - அப்பூதியடிகளாரின் மனைவி. மைதிகழ் - கருமை விளங்குகின்ற; மிடறு - கழுத்து. மிடற்றினான் - கழுத்தையுடையவன் (நீலகண்டன்). 3. சேயவர் - பிள்ளைகள். வாழைமேய - வாழையிலே பொருந்திய. பொன்குருத்து - அழகான குருத்து. 4. ஒல்லை - விரைவு. மல்லல் - செழிப்பான. ஈரும்-அறுக்கும். வாள் அரா - ஒளி பொருந்திய பாம்பு. 5. எரி - நெருப்புப் பொறியினை. காந்துகின்ற - வீசுகின்ற. பை - படம். பாந்தள் - அரவு, பாம்பு. 6. மாசுணம் - பாம்பு. 7. ஏழாம் வேகம் - பாம்பினது ஏழாவது வேகமும்; அதாவது விஷ வேக முழுமையும். எயிறு - பற்கள். பரிகலக் குருத்தை - பறிமாறுவதற்கு இடுகின்ற காலமாகிய குருத்தை. 8. உதிரம் - இரத்தம். விடத்தினால் வீந்தான் - விஷத்தினால் இறந்தான். 9. ஓர் புடை - ஓரிடத்தில். விறல் - பெருமை. 10. கடிது - விரைந்து. அடிசில்- சோறு. படியில் - ஒப்பில்லாத. 11. அடியினை - இரண்டு திருவடிகள்.

12. மேதகு - மேன்மை பொருந்திய. பூதி - திருநீறு. 13. மெய்விரித்துரையும் - உண்மையை எடுத்துக் கூறுக. விதிர்ப்புற்று - நடுங்கி. 14. பரிவொடு - வருத்தத் துடன். 15. பாற்றுவித்தார் - நீக்கியருளினார். 16. சே உகைத்தவர் - எருதை வாகனமாக ஏறிச்செலுத்தும் சிவபெருமான். 18. மணி மார்பர் - அழகிய மார்பினையுடையவர். 19. கோமயம் - பசுஞ்சாணம். பொலிய நீவி - அழகுபெற மெழுகி. கதலி - வாழை. ஈர்வாய் - அறுத்த பக்கம். வான் கதையும் போக்கி - வெண்மையான கோலம் இட்டு. 21. கொத்து என்பது கொந்து எனத் திரிந்தது ; கொத்துக் கொத்தாக மலர்ந்துள்ள கொன்றை மலர். வேணி - சடைமுடி. அம் தமிழ் - அழகான தமிழை. ஆளியார் - ஆளுகின்றவர், திருநாவுக்கரசர். 23. ஆன்ற - பெருமை நிறைந்த. சொல்மாலை - பாமாலை. 2. மன்றுளாடும் - சபையிலே நடமாடுகின்ற. நவ்வி - மான், மான்போன்ற கண் ணினையுடைய உமையம்மையாரை இடது பாகத்தே கொண்ட சிவபெருமான் என்க. நற்கழல் - நல்ல கழலணிந்துள்ள திருவடிகளை. நண்ணினரே - சேர்ந்தார் கள். ' ஏ ' அசை.

3. நைடதம்

சூதாடு படலம்

நிடத நாட்டு மன்னனான நளனது வரலாற்றைக் கூறும் நூலுக்கு நைடதம் என்று பெயர். பாரதத்தில் நளன் கதை கிளைக்கதையாகக் கூறப்படுகின்றது. அதனை வெண்பாவாகப் பாடியவர் புகழேந்திப் புலவர். நைடதம் விருத்தப் பாக்களால் ஆகிய ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். நைஷதம் என்று வடமொழி யில் நூலொன்று உண்டு. நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியன் சொல் லழகும், பொருளழகும், கற்பனைத்திறனும் அமைத்துக் கவிபாடுவதில் வல்லவன். ' நைடதம் ' புலவர்க்கு ஔடதம் ' என்னும் பழமொழியே இந்நூலின் பெரு மையை விளக்குவதாகும்.

அதிவீரராம பாண்டியன் கொற்கையைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தான். இவன் தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமை உடையவன். இவன் காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு என்பர். காசிக் காண்டம், கூர்ம புராணம், வெற்றிவேற்கை முதலிய செய்யுள் நூல்களும் அதிவீரராம பாண்டிய னால் இயற்றப் பெற்றவை.

இங்கு, நளன் புட்கரனோடு சூதாடிய பகுதி கூறப்படுகின்றது.

1. காலும் - கக்கும். தொடுகடல் - வெட்டப்பட்ட கடல்.

2. சுடர்பட்ட காலை - சூரியன் மறையும் வேளையில். செய்கடன் - செய்ய வேண்டிய கடமை, சந்தியா வந்தனம். கருதுபு - நினைத்துக்கொண்டு.

3. மடந்தை - தமயந்தி. விட்புலத்தரசர் - தேவேந்திரன். மல்லல் - வளப்பம் பொருந்திய, விசாலமான.

4. கொடுவரி - புலி. மழவிடை - இளமை பொருந்திய எருது.

5. கொல் நவில் வேலினான் - பகைவரைக் கொல்லும் தொழிலில் பழகிய வேலை உடையவன் : நளன்.

6. கவிகை - குடை. புரக்கும் - காப்பாற்றும். இளவல் - நளனுக்குத் தம்பி முறையை யுடைய புட்கரன்.

7. ஏறு - காளை உருவம் எழுதப் பெற்ற. எல் உமிழ் - ஒளி வீசுகின்ற.

8. கலவை - மணமுள்ள சந்தனம். விடலை - ஆண்பால் சிறப்புப் பெயர் விளி வேற்றுமையில் வந்தது.

9. கவறுடல் - சூதாடுதல்.

10. கழகம் - சூதாடும் இடம். ஒன்னலர்க்கு - பகைவர்க்கு. ஞாட்பினுள் - போர்களத்தில். இரியல் - பயந்து ஓடுதல்.

11. நல்குரவு - வறுமை.

12. கலைக்கடல் கடந்துளார் - அமைச்சர்கள். கழறும் - இடித்துக்கூறிய.

13. காழ் - உறுதியான, வயிரமுள்ள.

4. இரட்சணிய யாத்திரிகம்

John Bunyan என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றிய 'Pilgrim's Progress' என்னும் ஆங்கில நூலைத் தழுவி இந்நூல் தமிழில் எழுதப்பெற்றது. ஆன்மாவைக் காப்பதற்காகச் செய்யும் பிரயாணம் என்பது இதன் பொருள். இந்நூலாசிரியர் மகாவித்துவான் H. A. கிருஷ்ணப்பிள்ளை என்பவர். இவர் பாளையங்கோட்டைக்கு அண்மையில் உள்ள ரெட்டியார்பட்டி என்னும் ஊரில் பிறந்தவர்; வேளாள குலத்தைச் சார்ந்தவர். இவர் 1827-ஆம் ஆண்டில் தோன்றினர். தமது நாற்பதாம் வயதில் இவர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். கிறிஸ்தவ சமயத்தொடர்புடைய இரட்சணிய சமய நிர்ணயம், மனோகரம், இரட்சணியக் குறள் முதலிய வேறு நூல்களும் இவரால் இயற்றப் பெற்றவை.

இப் பாடப்பகுதி இரட்சணிய சரிதப்படலம் என்னும் படலத்திலிருந்து எடுக்கப்பட்டது.

1. இந்து - சந்திரன். களவின் ஆக்கம் - களவினால் கிடைத்த செல்வம். கரந்தென - மறைந்ததுபோல. மாய்கண்ட - மையைப் போன்ற. கங்குல் - இரவு. வாட்டும் - நீங்கும்.

2. அமயம் - சமயம். துன்னிய - மேற்கொண்ட. சட வியோகம் - உடலி லிருந்து உயிர் பிரிந்திருக்கும் வித்தை. சூழ்ச்சி - தன்மை. தேவமைந்தன் - ஏசுநாதர்.

3. வார்த்தையாய் சப்தபிரமமாய். நடுவர்-பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவருள் நடுவில் உள்ளவர். மூர்த்தியாய் – மனித உருவத்தினராகி. சமாதி கூடி - கல்லறையில் அடங்கி. கீர்த்தன நறும்பூ. பாக்களாகிய மணமுள்ள மலர்கள். கெழுமி - ஒருங்கு கூடி.

4. மல்கும் - நிறைந்த. மீ உயர் - மிகவும் உயர்ந்த. வேதாந்த - வேதத்தின் முடிபாகிய. ஓச்சி – பரப்பி. காண்பான் - பார்ப்பதற்காக. சேய் ஒளி - சிவந்த ஒளி. கீழ்பால் - கிழக்குத் திசையில்.

5. முகூர்த்தம் - சமயம். உம்பர் - வான். இழிந்த - இறங்கிய. ஒல்லை - விரைவாக. சேம வைப்பை - ஏசுவின் உடலை அடக்கம் செய்திருந்த கல்லறையை. எஞ்ச - நீங்க.

6. ஏந்திழை - பெண். தெருள் உற்இ - நல்லறிவு பெற்று. அண்மி - நெருங்கி. மருள் - ஐயம்.

7. ஆயிடை - அவ்விடத்தில். அருகர் நின்றும் - பக்கத்திலிருந்தும். நேடுவது எவன் - தேடுவது ஏன்? கொல் - அசை. ஓர்மின் - ஆராயுங்கள்.

8. நம்பி - ஆண்களிற் சிறந்தவன். என்னு - என்று. சேண்தலம் - வானுலகம்.

9. உன்னதேசன் - உன்னதமான ஈசன். செவிதோய்தலும் - கேட்டவுடன். கைவந்தன - கைகூடியதாக. சிறந்தது - தோன்றிற்று.

10. உறை இறந்த - சொல்ல வியலாத. கதித்த - பெருகின. துக்க அக்கினி- துன்பமாகிய நெருப்பு. உரை செய்வாம் - சொல்வோம்.

11. சொற்ற - சொல்லிய, சுமங்கல வார்த்தை - நற்செய்தி. நலம் கிளர்- நன்மை மிக்க.

12. ஆரணப் பொருளை - வேதத்தின் பொருளை. அன்பின் புணரி - அன்பாகிய கடல். சின்மயம் - ஞானவடிவாக உள்ள. மருள் - சந்தேகம்.

13. உழுவல் அன்போடு - இடைவிடாத அன்பினுல். ஒல்லென - விரைவில். கழுதின் - பாவத்தின் பேயுருவை. தெறு - அழிக்கும்.

14. ஒன்ற - வந்தடைய. நாடு - நாட்டுக்கு. விள்ளுமின் - கூறுங்கள்.

5. திருவிளையாடல் புராணம்

மாமனுக வந்து வழக்குரைத்த படலம்

திருவிளையாடல் புராணம் என்பது மதுரையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் தம் அடியவர் பொருட்டு ஆற்றிய திருவிளையாடல்களைப் பற்றிக் கூறுவது. இந் நூலினை இயற்றியவர் பரஞ்சோதி முனிவராவர். இவர் திருமறைக் காட்டில், 300 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிறந்தவர். இவர் வடமொழியிலமைந்த ஆலாசிய மகாத்மியம் என்னும் நூலைத் தழுவித் திருவிளையாடல் புராணத்தை இயற்றியுள்ளார். இந் நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று காண்டங்களை யுடையது.

நம் பாடப் பகுதி கூடற் காண்டத்திலுள்ளது.

1. கன்னி - அழிவற்ற; தடாதகைப்பிராட்டி என்னும் கன்னிகையால் ஆளப்பெறுதலால் கன்னி நான்மாடக் கூடல் என்க. கடிநகர் - காவலையுடைய நகர். மாநிதிக்கோன் - குபேரன். மடவரல் - பெண். பொன்னின் - அழகான. நாள்முளரி - அன்றலர்ந்த தாமரை. சேக்கை - இருப்பிடம். 2. தகவுசால் - பெருமையமைந்த. பொலியுற - சிறப்புற. 3. இருமை - இம்மை மறுமைப் பயன்கள். 4. வௌவினர் - அபகரித்துக் கொண்டனர். தாழ்ப்ப - தாமதிக்க, 5. வெறுக்கை - செல்வம். ஏனை - மற்றை. புள் - பறவை. களைகண் - ஆதரவு. 6. என்முன் - என் அண்ணன். 8. வலம்தரு மன்றம் - வெற்றிதரும் சபையில். அலம்தரும் - அமைதியுற்ற. சலம் தரும் - பொய், வஞ்சனை முதலியன கொண்ட. 9. வேரி - வாசனை. உண்கலு் - மையுண்ட கண். தெரிவை - பெண். 10. கங்குல்- இருள், இங்கு இரவு. வெள்ளி மன்றவன் - வெள்ளியம்பலத்தை யுடையவன். வெள்ளியம்பலம் மதுரையில் உள்ளது. 11. அட்டில்-அடுப்பு. பட்டிமை வழக்கு- பொய் வழக்கு. போகொட்டேன் - போகவிடமாட்டேன். அறத்தவிசு - நீதி மன்றம். ஒட்டிய - சேர்ந்த. 12. பெருவிலை - மிக்க விலையுடைய. பிடரி - கழுத்து. குண்டலம் - காதணி. பத்தி - வரிசை. கதிர் - ஒளியினை. கவிழ்ப்ப - கீழ்

நோக்கி வீச. அருவரை - மலைபோன்ற. ஆகம் - மார்பு. குருமணி - நல்ல நிறத்தை யுடைய மாணிக்கங்கள். கண்டிகை - கழுத்திலே அணியும் ஒருவகை ஆபரணம். கோட்ட - வளைக்க. 13. முளரி - தாமரை. மாறிட்டார் - பகைவர். குறுகு வார் - நெருங்குவார். 14. ஆன்றவர் - சான்றோர். குரைகழல் - ஒலிக்கும் வீரக் கழல். கோதுஇல் - குற்றமில்லாத. 15. ஐம்படை - திருமாலின் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என்னும் ஐந்தும் அமையப் பெற்ற பொன்னுபரணம். இதைக் குழந்தைகளுக்கு அணிவது மரபு. மதாணி - பதக்கம். மொய்ம்பு - மார்பு. சுட்டி - நெற்றிச் சுட்டி. 16. தைவந்து - தடவி. இனையன்மின் - வருந்தாதீர்கள். மாற்றி- துடைத்து. வஞ்சவினைஞர் - வஞ்சகமான தொழில் புரியும் பங்காளிகள். 17. உட்பட - முழுதும். ஊண் மாருட்டத்து - உணவில் மாறுபாடு செய்து. ஏற்ரூர் - இரந்தோர். 19. ஆவலித்து - புலம்பி. 20. நரை முது புலியன்னுன் - சிவபெருமான். அனுவதித்து - சொன்னதையே மறுபடியும் சொல்லி. 21. தவலரும் - கேடில்லாத. நக்கு - சிரித்து. மான் - விலங்கு, யானை. 23. நனைவழி வேம்பன் - தேன் வழிகின்ற வேப்பமாலையினையுடைய பாண்டியன். தேரின் - ஆராய்ந்தறிந்தால் எழு அனைய - கணைய மரத்தைப் போன்ற. வன்கால் - சுழற்காற்று. செல் எழு முகில்போல் - விரைந்து எழுகின்ற மேகங்களைப்போல். 25. அறன் நவில் - அறத்தை எடுத்துக் கூறுகின்ற. நாய்கர் - வணிகராய் வந்த சிவபெருமான். புக்கார் - புகுந்தார்.

IV. வருணனைப் பகுதி

1. அந்தி நேரம்

இப்பாடல்களின் ஆசிரியரான கம்பர் வரலாற்றைக் கம்பராமயணம் என்னும் பகுதியிற் காண்க.

1. தானவன் - அரக்கன். சோரி - இரத்தம். செக்கர் - சிவந்த. இந்து - சந்திரன். உக்க - தெறித்த. எயிறு - பல். 2. கடுவன் - ஆண் குரங்கு. தந்தி - ஆண் யானை. பிடி - பெண் யானை. சகுந்தங்கள் - சகுந்தப் பறவைகள். நீளம் - கூடு. அறிவை நோக்கினுன் - இராமன். 3. மொய்யுறு - நெருங்கிய. இளவற்கும் - இலக்குவனுக்கும். அமிழ்தனுளுக்கும் - சீதைக்கும்.

2. சந்திரோதயம்

ஆசிரியர் வில்லிபுத்தூரார், திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் தோன்றினூர். இவர் அந்தணர் மரபைச் சார்ந்தவர். வக்கபாகை வரபதியாட்கொண்டானுல் இவர் ஆதரிக்கப்பெற்ருர். இவர் காலம் கி. பி. 14-ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதியாகும். இப்பாடல் இவர் இயற்றிய பாரதத்தில் கிருட்டினன் தூதுச் சருக்கத்தினின்று எடுக்கப் பெற்றது.

ககனம் - ஆகாயம். தாரை - நட்சத்திரம். நிரைநிரை - வரிசையாக. வேனிலான் - மன்மதன். கும்பம் - பூரண கும்பம். குணதிசை - கிழக்குத்திசை.

3. இசைச் சிறப்பு

இப்பகுதி திருவிளையாடற் புராணத்தில் விறகு விற்ற படலத்திலிருந்து எடுக்கப் பெற்றது. பாணபத்திரன் என்னும் அடியார் ஒருவரிடம் இசைப் போட்டியிட ஏமநாதன்என்னும் இசைப் புலவன் ஒருவன் வந்தான். சிவபிரான் விறகு வெட்டியுருவத்திற் சென்று இசை பாடி அவனை வென்ருர். அவர் பாடிய இசையின் பெருமை இவ்விரு பாடல்களில் அழகுற வருணிக்கப்பட்டுள்ளது.

1. பல்பொறி - பல புள்ளிகளைக்கொண்ட. மஞ்ஞை - மயில். நால்வாய் - தொங்குகின்ற வாய். மத்தமான் - மத நீரை ஒழுக்கும் யானை. 2. போது விரிந்து - மலர்ந்து. நன்று அறிமாந்தர் போல - நன்றியறிதலுள்ள மனிதரைப்

போல. கண்ணீர் - மகிழ்ச்சியால் சொரியும் கண்ணீர். இச்செய்யுளால் உத்தமர்களின் உயர் பண்பு கூறப்பட்டது.

4. திருக்குற்றால மலைவளம்

இப் பாடல் திருக்குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலில் உள்ளது. இதனை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் குற்றாலத்துக்கு அண்மையில் உள்ள மேலகரத்தில் பிறந்தவர்; வேளாளர். இவர் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார். குற்றாலச் சிலேடை வெண்பா, குற்றாலமாலை, திருக்குற்றாலப் புராணம் முதலிய நூல்களும் இவரால் பாடப்பட்டவை.

மின்னார் - பெண்கள். மருங்கு - இடை. சூல் - கரு. கிண்கிணி - ஒருவகைக் காலணி.

5. பொங்கற் றிருநாள்

இப் பாடல்களை இயற்றியவர் திரு. புலவர் தணிகை. உலகநாதன் அவர்கள். இவர் சென்னை இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியும், சென்னை மாணவர் மன்றத்தில் தமிழ்ப் பணியும் புரிந்து வருகின்றார்.

மறம் - வீரம். பூவை - பெண். கவின் - அழகு.

V. சிறு நூல்கள்

1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியைக் குழந்தையாகப் பாவித்துக் காப்பு முதல் பத்துப் பருவங்களை அமைத்துப் பாடும் பிரபந்தத்துக்குப் பிள்ளைத் தமிழ் என்று பெயர். ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இப் பிரபந்தம் இருவகைப்படும். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள். இவர் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்; திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர்.

கொன் - பெருமை. அரமகளிர் - தெய்வப் பெண்கள். குறுமுறுவல் - புன்னகை. சுரும்பர் - ஒருவகை வண்டு. தேவ தேவன் - சிவபெருமான். பொன் - அழகிய.

2. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

தொட்டிக்கலை என்னுமூரில் கோயில் கொண்டருளியிருக்கும் பிள்ளையாருக்குச் செங்கழுநீர் விநாயகர் என்று பெயர். இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. இந்நூலின் ஆசிரியர் சிவஞான முனிவர். இவர் தென்பாண்டி நாட்டில் உள்ள விக்கிரமசிங்கபுரத்தில் தோன்றினார். இவர் தம் பெற்றோர் ஆனந்தக்கூத்தரும் மயிலம்மையாரு மாவர். இவர் தமிழ்மொழியில் புலமை மிக்கிருந்தது போலவே வடமொழியிலும் சிறந்து விளங்கினார். இவர் ஒரு துறவி. திருவாவடுதுறை வேலப்ப தேசிகரிடம் இவர் பாடங் கேட்டார்.

சிற்றில் பருவம்

சிறுமியர் மணலால் அமைத்த சிறுவீட்டை விநாயகர் சிதைக்க முயலும் போது அச் சிறுமியர் அவரை நோக்கி, தம் சிற்றிலைக் கலைக்கவேண்டாம் என்று விண்ணப்பம் செய்யும் செய்தி இப்பகுதியில் கூறப்படுகிறது. சிறுமை + இல் = சிற்றில்.

வேலை - சமயத்தில். மீககூர்தலினால் - மிகுதலினால். முருந்து - மயிலின் அடி இறகில் காணப்படும் முள் போன்ற அழகிய பல். முறுவலித்தேம் - சிரித்தோம்.

கரிமுகம் - யானைமுகம். முடங்கும் - வளைந்த. குறள் - குறுகிய. தாள் - கால்கள் இருக்கு - 'இருக்கு' என்னும் வேதம். துவன்றி - மிகுந்து. வளம் திருந்தும் - செழிப்பான. கலைசை - தொட்டிக் கலை என்னும் ஊர். அள்ளூறும் - வாயூறும். சிதையேல் - அழிக்காதே.

3. தமிழ்விடு தூது

தூது என்பது பிற்காலத்தில் தோன்றிய 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. தலைவன் தலைவியர்களுள் பிரிவுத் துன்பத்தால் வாடுவோர் மற்றொருவருக்குத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க உயர்திணை அல்லது அஃறிணைப் பொருள்களைத் தூதாக அனுப்புவர். இங்ஙனம் பல தூதுப் பிரபந்தங்கள் தமிழில் தோன்றியுள்ளன. நமக்குப் பாடமாக வந்துள்ள தூதில் தலைவி சோமசுந்தரக் கடவுள்பால் தமிழையே தூதாக அனுப்புவதாகக் கூறப்படுகிறது. இந்நூலை இயற்றிய புலவர் இன்னார் என்று தெரியவில்லை.

1. வீடு ஆளும் வாணி - (வெண்தாமரையினையே) தனக்கு இருப்பிடமாகக் கொண்ட சரசுவதி தேவி. அம் கை - அழகிய திருக்கரம். ஏடு - புத்தகம். ஆடரவம் - ஆடுகின்ற பாம்பு. 2. பாயல் ஆளரை - பாயாக உடைய திருமாலை. 3. முனி - அகத்திய முனிவன். முருகக் கடவுளிடத்தில் அகத்திய முனிவர் தமிழ் கற்றார். 4. நேசர் - சிவபெருமான். பாசமுறும் - அன்புறும். 6. திருக்குறளையே (391) ஆசிரியர் இக்கண்ணியில் பெய்துள்ளார். 8. நேரடி - செய்யுளிலேயுள்ள நான்கடிகள், நாலடியாருமாம். 9. சுந்தரமூர்த்தி நாயனார் பரவை நாச்சியாரிடத்துத் தியாகராஜப் பெருமானைத் தூதாக அனுப்பியதை இக்கண்ணியில் குறிப்பிடுகின்றார். 10. மாண்பாய் - சிறப்பாக. நீ சிவபெருமானைத் தூதாக அனுப்பி இருக்க உன்னை நான் அவர்பால் தூதாக அனுப்புகிறேன் என்பது கருத்து.

4. திருவரங்கக் கலம்பகம்

கலம்பகம் தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. புய வகுப்பு, அம்மானை, தவம், மறம் முதலிய பதினெட்டு உறுப்புக்களைக் கொண்டு, வெண்பா முதலான பாக்களும், பாவினங்களும் விரவ அந்தாதித் தொடையில் பாடுவது கலம்பகமாகும். ஆற்றிடைப் பூமிக்கு அரங்கம் என்று பெயர். இது திருவரங்கத்தைப் பற்றிய கலம்பகம்.

பேசவந்த - பெண் பேச வந்த. செல் - கரையான். பின்னை - நப் பின்னை. பட்ட மன்னர் பட்டது - பட்டத்தையுடைய அரசர்கள் தோல்வியடைந்த தன்மையை. படல் - தட்டி. அருளரங்கர் - அருளுகின்ற திருவரங்கநாதன்.

5. குற்றாலக் குறவஞ்சி

திரிகூடராசப்பக் கவிராயர் வரலாறு முன்னரே கூறப்பட்டது. மேதி - எருமை. வாளை - ஒருவகை மீன். கூழை - குட்டையான. தென்னாரிய நாடு - குற்றால மலையிலுள்ள ஒரு பகுதியின் பெயர். சந்த்ரசூடர் - சிவபெருமான்.

6. முக்கூடற் பள்ளு

முக்கூடல் என்னுமூர் திருநெல்வேலிக் கருகில் உள்ளது. தாமிரவருணியாற்றுடன் சித்ரா நதியும், கோதண்டராமன் என்னும் நதியும் கூடுமிடத்திலிருப்பதால் இதற்கு இப் பெயர் வந்தது. பள்ளு என்பது ஒருவகை நாடகப் பிரபந்தம்.

சீவலப்பேரி - முக்கூடல். மூவகைக் கல்வி - இயல் இசை நாடகம் என்னும் மூன்று பிரிவினதாய தமிழ்க் கல்வி. தாவளக்குடி - மருதநிலத்தில் உறையும் மக்கள். காவை - திருப்பரங்குன்றத்திக்கு அண்மையில் உள்ள ஓரூர். அம்பலவாணன் பலகிளை - வடமலேந்திரனின் பரம்பரையினர். தழைக்க - நலமடைய. மேவும் - பொருந்திய.